(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 2(10).]

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2011, மார்ச் 09, புதன்கிழமை வெளியிடப்பட்டது

## 2011, மார்ச்சு 22, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0578/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களிலிருந்து ஆண்டுதோறும் வெளியேறும் மருத்துவர்களின் எண்ணிக்கையையும்,

(ii) மருத்துவர்களாக பதிவு செய்வதற்கான தகுதியைப் பெறும் வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகளின் எண்ணிக்கையையும்,

(iii) மேற்படி பட்டதாரிகளை மருத்துவர்களாக பதிவுசெய்வதற்கான பரீட்சைகள் இலங்கை மருந்துவச் சங்கத்தால் மேற்கொள்ளப்படுகின்றதா என்தையும், 01.01.2010 முதல் செயற்படும் விதமாக வேறொரு அதிகார சபையிடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) அவ்வாறாயின், அப்புதிய அதிகார சபையின் பெயரையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்நாட்டில் ஆண்டொன்றிற்கு தேவைப்படும் மருத்துவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) ஒரு மருத்துவருக்கு வழங்கப்படும் சராசரிச் சம்பளம் யாதென்பதையும்,

(iii) அவர்களுக்கு வழங்கப்படும் ஏனைய நன்மைகள் யாதென்பதையும்,

(iv) இலங்கையில் தகுதி பெறும் மருத்துவர்கள் விடுமுறையில் வெளிநாடுகளுக்கு செல்வதற்கு அனுமதியளிக்கப்படுகின்றதா என்பதையும்,

(v) அவ்வாறாயின் அவர்கள் விடுமுறையில் இருப்பதற்கு அனுமதிக்கப்படும் கால அளவையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0726/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் கிராதலான வடக்கு வீதி எந்த நிறுவனத்திற்கு உரித்தாகின்றது என்பதையும்,

(ii) மேற்படி வீதிக்கு தார் இடுவதற்காக உரிய நிறுவனத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வீதிக்கு தார் இடுவதற்காக ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் அல்லது நபர்கள் யாரென்பதையும்,

(ii) அதற்காக ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்,

(iii) குறித்த மதிப்பீட்டுக்கமைய தாரிட வேண்டிய தூரத்தின் அளவும் வீதியின் அகலமும் எவ்வளவென்பதையும்,

(iv) தற்போது தாரிடப்பட்டுள்ள தூரத்தின் அளவு எவ்வளவென்பதையும்,

(v) தாரிட்டு முடித்த திகதி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி வீதிக்கு தாரிடுதல் தரநியமங்களுக்கமைய நடைபெறவில்லை என்பதையும், தற்போது பெரும்பாலான இடங்கள் ஆழ்ந்துள்ளன என்பதையும், உரிய தூரத்திற்கு தாரிடப்படவில்லை என்பதையும் அவர் அறிவாரா?

(ஈ) ஆமெனின், தரநியமங்களுக்கு இணங்கியொழுகாத வகையில் நிர்மாணிப்பை மேற்கொண்ட நிறுவனம் அல்லது நபர்கள் தொடர்பில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0887/ '10

கௌரவ வசந்த அலுவிஹாரே,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தம்புல்ல நகரத்திலும் பொருளாதார மையத்தைச் சார்ந்த பிரதேசத்திலும் அன்றாடம் சேர்கின்ற கழிவுப்பொருட்கள் இனாமலுவ வன ஒதுக்கத்தில் அப்புறப்படுத்தப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இதன் காரணமாக இனாமலுவ ஒதுக்கத்தில் பாரிய சுற்றாடல் சேதம் இடம்பெறுகின்றதென்பதையும்,

(ii) இவ்விதமாக அப்புறப்படுத்தப்படுகின்ற கழிவுப்பொருட்களுடன் உள்ள பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் துண்டுகளை உணவாக உட்கொள்வதனால் இவ்வொதுக்கத்திலுள்ள வனசீவராசிகளின் உயிர்களுக்குப் பாரிய அச்சுறுத்தல் தோன்றியுள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இனாமலுவ வன ஒதுக்கத்துக்கு ஏற்படுத்துகின்ற சுற்றாடல் சேதத்தினைத் தடுப்பதற்கும், அங்குள்ள வனசீவராசிகளின் உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், என்?

0889/ '10

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) ஆட்சி மீளப் பெறுதல் சட்டத்தின் கீழ் 2000 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை கண்டி மாவட்டத்தில் மினிப்பே பிரதேச செயலாளரால் சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளின் பரப்பளவு, அக்காணிகளின் உரிமையாளர்களது பெயர்கள், முகவரிகள் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி காலத்தினுள் மீளப் பெறப்பட்டுள்ள பல்லேவத்த கிராம உத்தியோகத்தர் பிரிவின் திரு. ஜீ.எம். புஞ்சி பண்டா வசித்து வந்த கட்டடத்துக்கு, கிணற்றுக்கு அல்லது காணிக்கு நெடுஞ்சாலைகள் அமைச்சின் தேசிய நெடுஞ்சாலைகள் துறை சார்ந்த கருத்திட்டத்தின் மூலம் நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனில், நட்டஈடாக வழங்கப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஆ) திரு. புஞ்சிபண்டா போலி ஆவணங்களைத் தயாரித்து மேற்படி காணிக்கு மின்சாரம் பெற்றுக்கொண்டுள்ளார் என்பதையும், மேற்படி காணிக்கு உரிமப்பத்திரமொன்றை பெறுவதற்காக காணிகள் ஆணையாளர் நாயகத்தின் அனுமதிக்கான விண்ணப்பப்படிவமொன்றை சமர்ப்பித்துள்ளாரென்பதையும் அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(இ) (i) காணியை மீளப் பெறுகின்ற போது திரு. புஞ்சி பண்டாவுக்கு வழங்கப்பட்டுள்ள நட்ட ஈட்டுப் பணத்தை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கும்,

(ii) மேற்படி காணிக்கு தவறான முறையில் உரிமப்பத்திரம் வழங்கவும், அவ்வாதனத்திற்கு நட்டஈடு வழங்கவும், மின்சாரம் வழங்கவும் ஆலோசனை வழங்கிய மற்றும் அங்கீகரித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக செயலாற்றுவதற்கும்

நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0891/ '10

கௌரவ ஹரின் பெர்னாந்து,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கெப்பட்டிபொல விசேட பொருளாதார மத்திய நிலையத்தை முறையாக நடைமுறைப்படுத்தாமையினால் வெளிமடை மரக்கறி விவசாயிகள் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர் என்பதையும்,

(ii) தமது மரக்கறிகளுக்கு சிறந்த விலை கிடைக்காமை மற்றும் தமது உற்பத்திகளுக்கு உரிய வகையில் பணம் செலுத்தப்படாமை ஆகிய காரணங்களினால் இப்பொருளாதார மத்திய நிலையமானது விவசாயிகளின் நம்பிக்கை இழக்கப்பெற்ற இடமாக மாறியுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த நிலைமையை மாற்றியமைத்து வர்த்தகருக்கும் விவசாயிக்கும் இடையில் சிக்கல்கள் ஏற்படாததும், பொருளாதார மத்திய நிலையம் தொடர்பாக விவசாயிகளுக்கு மத்தியில் நம்பிக்கையை அதிகரிக்கக் கூடியதுமான வேலைத்திட்டமொன்றை வகுத்து நடைமுறைப்படுத்துவதற்கும்,

(ii) இப்பொருளாதார மத்திய நிலையத்திலுள்ள வர்த்தக நிலையங்களை பரிசோதிப்பதற்காக விலைக்கட்டுப்பாட்டு அலகினதும், நிறுவை அளவை அலகினதும் உதவியைப் பெற்று விவசாயிகளின் உற்பத்திகள் சுரண்டப்படுவதைத் தடுக்கின்ற வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கும்

துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0897/ '10

கௌரவ காமினி ஜயவிக்ரம பெரேரா,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கற்பிட்டிக்கு அண்மையில் அமைந்துள்ள ஒரு தீவு, உள்நாட்டு அல்லது வெளிநாட்டுக் கம்பனி ஒன்றுக்கு அல்லது நபர் ஒருவருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், இத்தீவு எவ்வாறான நடவடிக்கைக்காக; எவ்வளவு காலப்பகுதிக்கு; எவ்வளவு தொகைக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இத்தீவு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள கம்பனி அல்லது நபரின் பெயர் யாதென்பதையும்,

(ii) இத்தீவினைக் குத்தகைக்கு விடுதல் தொடர்பான, குத்தகை உடன்படிக்கையை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0602/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த வருடத்தின் போது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட சகல பங்குகளையும்,

(ii) மேற்குறிப்பிட்ட பங்குகளின் கொள்வனவு விலை மற்றும் தற்போதைய விற்பனை விலை ஆகியவற்றையும்,

(iii) பட்டியலிடப்பட்ட கம்பனிகளிடமிருந்தா அப்பங்குகள் வாங்கப்பட்டன என்பதையும்,

(iv) இல்லையேல், பட்டியலிடப்படாத பங்குகள் ஏன் கொள்வனவு செய்யப்பட்டன என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) பல பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத கம்பனிகளிடமிருந்து சிறிய பங்குரிமைகளை வாங்குவது அரசாங்கத்தின் கொள்கையா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றெல், ஏன்?

0839/10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் பெற்ற இலாபம் அல்லது நட்டம் வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் 2010ஆம் ஆண்டுக்காக இற்றைப்படுத்தப்பட்ட கூட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளதா என்பதையும்,

(iii) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை தேர்தல்கள் நடைபெற்ற காலகட்டத்தில் அரசின் தேர்தல் பிரசாரங்களுக்காக தேசிய தொலைக்காட்சி ஒதுக்கிய காலநேரம் மற்றும் அதனுடன் தொடர்புடையதாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்படி ஆட்சேர்ப்புக்கள் செய்யப்பட்ட பதவிகளுக்கான தகைமைகள் மற்றும் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களின் தகைமைகள் என்னவென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0894/ '10

கௌரவ ஹரின் பர்னாந்து,— இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழ் இயங்கும் இலங்கை இளைஞர் கழக சம்மேளனத்துடன் இணைந்த பதிவுசெய்யப்பட்ட இளைஞர் கழகங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி இளைஞர் கழகங்களில் செயல்படும் நிலையிலுள்ள இளைஞர் கழகங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iii) செயற்படும் நிலையிலுள்ள இளைஞர் கழகங்களின் மொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி அங்கத்தவர்களின் எண்ணிக்கையை இற்றைக்கு 5 ஆண்டுகளுக்கு முன் காணப்பட்ட எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாவென்பதையும்,

(v) இன்றேல், குறைந்துள்ளதாவென்பதையும்,

(iv) செயற்படும் நிலையிலுள்ள இளைஞர் கழகங்களில் தற்பொழுதுள்ள மொத்த அங்கத்துவமானது திருப்திகரமான எண்ணிக்கையைக் கொண்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0898/ '10

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு உவர் நீர் நிரப்புவதற்காக இடம்பெற்ற வைபவத்துக்கு செலவிடப்பட்ட பணத்தொகை பற்றிய விரிவான அறிக்கையொன்றை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) அவ்வாறு செலவிடப்பட்ட பணத்தொகையை பெற்றுக்கொண்டவர்களின் விபரங்கள் எவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0910/ '10

கௌரவ வசந்த அலுவிஹாரே,— அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற தேயிலைத் தோட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) தேயிலை ஏலவிற்பனைகளின் போது மேற்படி தேயிலைத் தோட்டங்களிலிருந்து கழிவுத் தேயிலையாக மாதாந்தம் அகற்றப்படுகின்ற தேயிலையின் அளவு எவ்வளவென்பதையும்,

(iii) 2010 ஓகத்து மாதத்தில் கெலேபொக்கைத் தோட்டம் மற்றும் கல்பிஹில்ல தோட்டங்களில் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலைகளிலிருந்து உபயோகத்துக்கு பொருத்தமற்றதெனக் கூறி, தேயிலை ஏல விற்பனைகளின் போது நீக்கப்பட்ட தேயிலை கிராம்களின் அளவுகள் தனித்தனியே எவ்வளவு என்பதையும்,

(iv) இதனால் ஏற்பட்ட மொத்த நட்டம் எவ்வளவு என்பதையும்,

(v) அவ்வாறான நட்டம் ஏற்படுவதற்கு காரணமான விடயங்களை கண்டறிந்து அவ்வாறான நிலை ஏற்படாதிருக்க எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் எவை என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

0913/ '10

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 ஆம் ஆண்டில் கிரிபத்கொட விஹாரமகாதேவி மகளிர் வித்தியாலயத்தில் முதலாம் தரத்திற்கு மாணவியர்களை சேர்த்துக் கொள்வதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குப் பின்னர் பாடசாலைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட, காத்திருப்போர் பட்டியலில் இருந்த மற்றும் காத்திருப்போர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படாத ஒவ்வொரு மாணவியினதும் பெயர், முகவரி மற்றும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் வெவ்வேறாக யாவை என்பதனை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்களின் விசேட கட்டளையின் பேரில் அப்பாடசாலைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட 5 மாணவியர்களினதும் பெயர்கள், முகவரிகள், பெற்றுக்கொண்ட புள்ளிகள் மற்றும் அதற்கான விசேட காரணம் யாவையென்பதையும்,

(iii) 2010 ஒற்றோபர் மற்றும் நவெம்பர் மாதங்களில் கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்களின் கட்டளையின் பேரில் கல்வி அமைச்சின் செயலாளரின் சுற்றுநிருபத்திற்கு முற்றிலும் முரணாக பாடசாலை அதிபரால் சேர்த்துக் கொள்ளப்பட்ட நேர்முகப் பரீட்சையில் குறைந்த புள்ளிகள், பெயர்கள், முகவரிகள் மற்றும் இவர்கள் பெற்ற புள்ளிகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) மேற்சொன்னவாறு கல்வி அமைச்சின் செயலாளரின் சுற்றுநிரூபத்திற்கும் அமைச்சரின் கொள்கைகளுக்கும் முரணான வகையில் மாணவர்களை பாடசாலைக்கு சேர்த்துக்கொண்ட அமைச்சு உத்தியோகத்தர்களுக்கும் பாடசாலை அதிபருக்கும் எதிராக இலஞ்ச மற்றும் ஊழல் சட்டத்தின் அல்லது வேறேதும் சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன் ?

0645/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொழில், தொழில் உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தனியார் துறைக்குரிய குறைந்தபட்ச சம்பளங்கள் எப்போது அதிகரிக்கப்படுமென்பதையும்,

(ii) தனியார் துறை சார்ந்த பல்வேறு துறைகளுக்கு அதிகரிக்கப்படவுள்ள சம்பளத்தொகை இலங்கை ரூபாவில் எவ்வளவு என்பதை வெவ்வேறாகவும்,

(iii) கடந்த பத்து வருடங்களில் தனியார் துறை ஊழியர்களின் சம்பளங்கள் கடைசியாக அதிகரிக்கப்பட்ட சந்தர்ப்பத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அரச துறைச் சம்பளம் எப்போது அதிகரிக்கப்படவுள்ளது என்பதையும்,

(ii) அதிகரிக்கப்படவுள்ள தொகையையும்,

(iii) அரசதுறையிலுள்ள பல்வேறு துறைகளுக்குரித்தான குறைந்தபட்ச ஓய்வூதியத்துடனான சம்பளத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0840/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய தவிசாளர் அல்லது நியமிக்கப்பட்டுள்ள உரிய அதிகாரியின் பெயர் மற்றும் தகைமைகள் யாவை என்பதை இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான வேஉட ஓடு மற்றும் செங்கல் தொழிற்சாலை அமைந்துள்ள காணியின் உரிமையைக் கொண்டுள்ளவர்கள் யாவரென்பதையும்,

(ii) மேற்படி காணியை விற்பதற்கு அல்லது குத்தகைக்கு விட தீர்மானிக்கப் பட்டுள்ளதாவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) வேஉட ஓடும் மற்றும் செங்கல் தொழிற்சாலையில் வேலை செய்யும் பணியாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) இவர்களுக்கு கிடைக்கவேண்டிய வாழ்க்கைச் செலவு புள்ளி கொடுப்பனவு மற்றும் சேமலாப நிதி, 2010 நவெம்பர் மாதம் வரையிலும் கிடைக்கவில்லை என்பதையும்,

(ii) அவ்வாறாயின் குறித்த கொடுப்பனவுகளை அவர்களுக்கு வழங்கும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0895/ '10

கௌரவ ஹரின் பர்னாந்து,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலக மரபுரிமையான போகொடை ரஜமகா விஹாரையும் வரலாற்று சிறப்புமிக்க போகொடை மரப்பாலமும் அமைந்துள்ள இடத்துக்கு அருகில் கற்சுரங்மொன்று நடத்தப்பட்டு வருவதையும்,

(ii) அதன் மூலம் மேற்படி புனித பிரதேசத்தை அண்டியதாக பாரிய சூழல் சீர்கேடுகள் ஏற்படுவதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கற்சுரங்கத்தை பேணிக்கொண்டு நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், கலாசார பெறுமதிமிக்க மேற்படி பிரதேசத்தில் இடம்பெறும் சூழல் சீர்கேடுகளுக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள் யாவர் என்பதையும்,

(iii) மேற்படி சூழல் சீர்கேட்டை தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*
குடிசனமதிப்பு (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*
உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*
சேர் பெறுமதி வரி (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*
நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*
பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*
செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*
மாகாண சபைகள் (முத்திரைத் தீர்வையைக் கைமாற்றுதல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*
பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடு (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*
உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*
மது வரி (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*
வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*
வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*
தொலைத் தொடர்பு அறவீட்டுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*
துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*
பற்றுகள் வரி (நீக்குதல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*
நிதி (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்
## (2011, மார்ச்சு 22, செவ்வாய்க்கிழமை)

0664/ '10

கௌரவ அநுர திசாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஆரம்ப காலத்தில் நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு உரித்தாயிருந்த,

(i) களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,
(ii) ஒவ்வொரு களஞ்சியசாலையினதும் அமைவிடம் யாதென்பதையும்,
(iii) மேற்படி களஞ்சியசாலைகளின் கொள்ளளவு தனித்தனியாக எவ்வளவு என்பதையும்,
(iv) ஒவ்வொரு களஞ்சியசாலையிலும் பணியாற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,
(v) வாகனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) தற்போது அரசாங்கத்துக்கு உரித்தாயுள்ள,

(i) நெல் களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,
(ii) நெல் களஞ்சியசாலைளின் அமைவிடங்கள் யாவையென்பதையும்,
(iii) மேற்படி ஒவ்வொரு களஞ்சியசாலையினதும் கொள்ளளவு மற்றும் ஊழியர் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்,
(iv) நெல் கொள்வனவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள வாகனங்களின் வகைகள் மற்றும் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) கடந்த 5 வருடங்களில்,

(i) சிறுபோகம், பெரும்போகங்களின் போது ஒவ்வொரு களஞ்சியசாலையினால் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு தனித்தனியே யாதென்பதையும்,
(ii) நெல்லுக்கான கொள்வனவு விலை எவ்வளவென்பதையும்,
(iii) நெல்லுக்கான விற்பனை விலை எவ்வளவென்பதையும்,
(iv) மேற்கூறிய காலத்தினுள் கொள்வனவு செய்யப்பட்ட நெல் கையிலிருப்பில் அழிவடைந்த அளவு எவ்வளவென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0665/ '10

கௌரவ அநுர திசாநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த 10 வருடங்களில் சிறுபோகம் மற்றும் பெரும் போகங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும்,

(i) விவசாயப் பயிர்கள் பயிரிடப்பட்ட ஹெக்டெயார் அளவு,
(ii) ஒவ்வொரு ஏற்றுமதிப்பயிரும் பயிரிடப்பட்ட ஹெக்டெயார் அளவு,
(iii) ஏற்றுமதிப் பயிர் பயிரிடப்பட்ட ஹெக்டெயார் அளவு

யாதென்பதைத் தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) கடந்த 10 வருடங்களில் ஒவ்வொரு வருடத்திலும்,

(i) பயிரிடப்பட்ட ஒவ்வொரு விவசாயப் பயிர்களிலிருந்தும் பெறப்பட்ட விளைச்சல் போகங்களுக்கிணங்க தனித்தனியாக எவ்வளவு,
(ii) ஒவ்வோர் ஏற்றுமதிப் பயிரினதும் வருடாந்த விளைச்சல் மற்றும் அப்பயிர்களின் ஏற்றுமதிப் பெறுமதி தனித்தனியாக எவ்வளவு,
(iii) அப்பயிர்களின் மொத்த ஏற்றுமதிப் பெறுமதி எவ்வளவு

என்பதை அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல். ஏன்?

0666/ '10

கௌரவ அநுர திசாநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1977ஆம் ஆண்டில் இருந்த அரச கமத்தொழில் பண்ணைகளின் எண்ணிக்கை யாதென்பதை அவர் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு பண்ணையினதும்,

(i) பெயர், பண்ணை அமைக்கப்பட்ட நோக்கம் மற்றும் ஆற்றப்பட்ட பணிகள் யாதென்பதையும்,

(ii) அதன் பரப்பளவு மற்றும் பணிபுரிந்த ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) இலாபம் ஈட்டிய வருடம், பெற்ற இலாபம், இலாபமீட்டிய துறைகள் மற்றும் இலாபம் ஈட்டிய ஒரு சில வருடங்களில் உற்பத்தித் தொகைகள் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி பண்ணைகளில் தனியார்த் துறையினருக்கு ஒப்படைக்கப்பட்ட பண்ணைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவை ஒப்படைக்கப்பட்ட நபர்கள் மற்றும் தற்போதைய உரிமையாளர்கள் யாவர் என்பதையும்,

(iii) அவ்வாறு இவை ஒப்படைக்கப்பட்ட திகதி, விலை விபரம் மற்றும் ஒப்படைப்பின் அடிப்படை நிபந்தனைகள் யாவையென்பதையும்,

(iv) தற்போது தனியார் பண்ணைகளில் ஆற்றப்படும் பணிகள் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) தற்போது அரசுக்குச் சொந்தமான பண்ணைகளில்,

(i) ஆற்றப்படும் பணிகள் யாதென்பதையும்,

(ii) ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) கடந்த ஐந்து வருடங்களில் பெற்ற இலாபம் அல்லது நட்டத்தின் தொகை யாதென்பதையும்,

(iv) கடந்த வருடத்தினுள் உற்பத்தி செய்யப்பட்ட ஒவ்வொரு துறையினதும் உற்பத்திப் பெறுமதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0667/ '10

கௌரவ அநுர திசாநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தற்போது மத்திய அரசாங்கத்தில் மற்றும் மாகாண சபைகளில் தாபிக்கப்பட்டுள்ள கமத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் (திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகாரசபைகள்) யாவையென்பதை இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு நிறுவனமும்

(i) தாபிக்கப்பட்ட திகதிகள், தாபிக்கப்பட்டமைக்கான நோக்கங்கள் மற்றும் மேற்கோள்ளப்படுகின்ற பணிகள் யாவையென்பதையும்,

(ii) உருவாக்கப்பட்டுள்ள பதவிகள் மற்றும் அப்பதவிகளில் தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாவையென்பதையும்,

(iii) பிரதேச மட்டத்தில் செயற்படுகின்ற விதம் மற்றும் அவற்றின் ஒழுங்கமைப்பு ரீதியிலான கட்டமைப்பு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது கமத்தொழில் சம்பந்தமாக தாபிக்கப்பட்டுள்ள அரச சார்பற்ற அமைப்புகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு அமைப்பையும் தாபித்தவர்கள் மற்றும் அவற்றுக்கு நிதி வழங்குகின்றவர்கள் யாரென்பதையும்,

(iii) இற்றை வரை மேற்படி அமைப்புகளால் செலவிடப்பட்டுள்ள நிதித் தொகை யாதென்பதையும்,

(iv) மேற்படி ஒவ்வொரு அமைப்பிலும் இருக்கின்ற ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் என்?

0669/ '10

கௌரவ அநுர திசாநாயக்க,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள பாரிய நீர்ப்பாசன திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு நீர்ப்பாசன திட்டமும் அமைந்துள்ள தொகுதி யாதென்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு நீர்ப்பாசன திட்டத்தின் பெயர் மற்றும் அவற்றின் நீர் மூலங்கள் யாவையென்பதையும்,

(iv) நீரேந்து பிரதேசத்தின் அளவு மற்றும் இவற்றின் கொள்ளளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு நீர்ப்பாசனத் திட்டமும்,

(i) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு,

(ii) நிறைவுசெய்யப்பட்ட ஆண்டு,

(iii) மக்கள் உரிமைக்காகக் கையளிக்கப்பட்ட திகதி,

(iv) பூர்த்திசெய்வதற்கு செலவாகிய பணத்தொகை

யாதென்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) கடந்த 20 வருடங்களில் மேற்படி ஒவ்வொரு நீர்ப்பாசன திட்டம் சார்பிலும்,

(i) மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்,

(ii) நிதி ஒதுக்கப்பட்ட ஆண்டுகள் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(iii) நிறைவேற்றப்பட்ட பணிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) மேற்படி ஒவ்வொரு நீர்ப்பாசன திட்டத்திற்கமைவாக,

(i) பயிரிடப்பட்டுள்ள காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) கடந்த பத்தாண்டுகளில் சிறு போகம் மற்றும் பெரும் போகங்களின் போது பயிரப்பட்ட காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(iii) குடியேற்றப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0776/ '10

கௌரவ அஜித் குமார,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ருஹுணு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் தர்ஷன விக்கிரமசிங்க என்பவருக்கெதிராக கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்திலும் அவர் குற்றமற்றவராகக் காணப்பட்டபோதிலும் பல்கலைக்கழகப் பேரவையின் தீர்மானம் ஒன்றின் பிரகாரம் அவர் சேவையிலிருந்து நீக்கப்பட்டார் என்பதையும்,

(ii) மேலே சொல்லப்பட்ட தீர்மானம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் டாக்டர் விக்கிரமசிங்கவினால் ஆட்சேபிக்கப்பட்டு மேலே சொல்லப்பட்ட தீர்மானத்திற்கு தடை ஆணை வழங்கப்பட்டதையும்,

(iii) தனக்கு எதிராக ஒரு வன்மமான முறைப்பாட்டை மேற்கொண்டு அதன் விளைவாகத் தனது தொழிலை இழக்கச் செய்த அதே பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் மிரானி வீரசூரிய என்பவரினால் தனக்கு ஏற்படுத்தப்பட்ட சேதத்துக்காக மாத்தறை மாவட்ட நீதிமன்றத்தில் டாக்டர் விக்கிரமசிங்க தனிப்பட்ட வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார் என்பதையும்,

(iv) இந்தத் தனிப்பட்ட வழக்குக்குக்கூட பேராசிரியர் வீரசூரிய அமர்த்தியுள்ள சட்டத்தரணிகளுக்கு பல்கலைக்கழகம் கொடுப்பனவுகளை மேற்கொள்வதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) ருஹுணு பல்கலைக்கழக அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட மேலே சொல்லப்பட்ட நடவடிக்கைகள் நியாயப்படுத்தக்கூடியனவா என்பதையும்,

(ii) மேலே சொல்லப்பட்ட விடயத்தை விசாரித்து அத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாதவாறு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு பணிக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0777/ '10

கௌரவ அஜித் குமார,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2004, 2005, 2006, 2007, 2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் இலங்கை ருஹுணு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்குக் கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு ஆராய்ச்சி மானியங்களின் பெறுமதி மற்றும் அவற்றின் மூலங்கள் ஆகியவற்றை வெவ்வேறாகவும்,

(ii) மேலே சொல்லப்பட்ட மருத்துவ பீடத்தினால் அந்த நிதிகள் பயன்படுத்தப்பட்ட விதத்தையும்,

(iii) அந்த மானியங்கள் கிடைக்கப் பெற்றமை பற்றியும் அந்த மானியங்களைப் பயன்படுத்தி மேற்கொண்ட ஆராய்ச்சியின் கண்டறிதல்கள் பற்றியும் மருத்துவ பீட மருத்துவச் சபை, செனற் மற்றும் கல்விசார் அதிகார சபைக்குத் தெரிவிக்கப்பட்டதா என்பதையும்,

(iv) இன்றேல், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்காமைக்கான காரணங்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) 1978ஆம் ஆண்டின் 160ஆம் இலக்க பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் பிரிவு 99(1) மற்றும் அரசாங்க நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் இந்நிதிகள் பல்கலைக்கழகக் கணக்குகளில் இடப்பட்டனவா என்பதையும்,

(ii) அவ்வாறின்றேல், கணக்கில் இடப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2011, மார்ச்சு 23, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0041/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) அரசாங்க பொறுப்பு முயற்சிகள் மீதான குழுவின் முன்னாள் தவிசாளர்களான, கௌரவ ஜோன் அமரதுங்க, கௌரவ ஜெயராஜ் பெர்னாந்துபுள்ளே, கௌரவ ரோகித்த போகொல்லாகம ஆகியோரினால் சமர்ப்பிக்கப்பட்ட அ.பொ.கு அறிக்கைகள் மீதும், கௌரவ விஜயதாச ராஜபக்ஷ அவர்களால் 2007.01.12 அன்று சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாகவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் திரு. மாயாதுன்ன அவர்களால் 2006, ஜூலை 20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாகவும், அரசாங்கக் கணக்குகள் குழுவின் தவிசாளர் கௌரவ ரஊப் ஹக்கீம் அவர்களால் 2007.11.29ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட PS12 ஆம் இலக்க அறிக்கை தொடர்பாகவும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும்,

(ii) அவ்வறிக்கைகளின் பிரகாரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனங்களின் பெயர்களையும்,

(iii) குழு அறிக்கையின் பணிப்புரைகளுக்கமைய முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0239/ '10

கௌரவ சஜித் பிரேமதாச, — கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பாந்தோட்டை வலயக் கல்விக் காரியாலயத்திற்குரிய சூரியவெவ கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளுக்கும், பொதுவான தேவைகளுக்கும் பற்றாக்குறை நிலவுகிறதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற ஆசிரியர் விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அவற்றிற்குரிய பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) மரத்தளபாடங்களுக்கான தேவை காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(vi) அத்தேவைகள் யாவையென்பதையும்,

(vii) விஞ்ஞான கூடங்கள் மற்றும் நூலகங்கள் அற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(viii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்யத் தேவையான நிதியை அப்பாடசாலைகளுக்கு ஒதுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0700/ '10

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நீதி அமைச்சின் கீழ் வரும் சட்டங்கள் ஒழுங்கு விதிகள் ஆகியவற்றில் மாற்றங்களை சிபார்சு செய்வதற்காக இவருக்கு முன்னிருந்த அமைச்சரினால் நியமிக்கப்பட்ட குழுக்களின் எண்ணிக்கையையும்,

(ii) அக் குழுக்களால் பரிசிலிக்கப்பட்ட விடயப்பரப்புகளையும்,

(iii) அவற்றுள், அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பித்த குழுக்களின் எண்ணிக்கையையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) அறிக்கை சமர்ப்பிக்காத குழுக்கள் விரைவாக அவற்றைச் சமர்ப்பிப்பதை உறுதிப்படுத்த அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(இ) அவ்வறிக்கைகளுள் எவையேனும்,

(i) விரைவான தீர்மானங்களை ஊக்குவிப்பதுடன், நீதி வழங்கலை தாமதமடையச் செய்யும் காலக்கெடு கோரும் விண்ணப்பங்கள் மற்றும் ஒப்பந்தங்களுக்கு ஊக்கமளிக்காத நீதிபதிகளுக்கும் நீதவான்களுக்குமான செயலாற்றச் சுட்டிகள்,

(ii) சிறைச்சாலைகளில் நெருக்கடியையும், இளம் ஆட்களுக்கான பொருத்தமில்லாத தண்டனைகளையும் குறைப்பதற்கான ஓர் அறிவார்ந்த தீர்ப்பளிக்கும் கொள்கை,

(iii) நீதித்துறைச் செயற்பாடுகள் ஊடாக மோதல் போக்கை நாடுவதை குறைப்பதற்காக சமரசம் மற்றும் நல்லிணக்கத்திற்கான பொறிமுறைகள்,

(iv) தண்டனை என்பது தண்டனை கொடுப்பதற்காக அல்லாமல், திருத்துவதையும் குற்றம் புரியாது தடுப்பதையும் நோக்காகக் கொண்டது என்பதை உறுதிப்படுத்துவதற்காக, நீதிபதிகள், நீதவான்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோருக்கு பயிற்சியளித்தல்

என்பவற்றை சிபார்சு செய்ததா என அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) அவ்வாறாயின், அவ் அறிக்கைகளின் அடிப்படையில் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(உ) இன்றேல், இவ்விலக்குகளை அடைவதற்கான ஏனைய ஏற்பாடுகளைச் செய்வாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0714/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) துறைமுகங்கள் அதிகாரசபையின் தற்போதைய தலைவரின் முழுப் பெயர் மற்றும் வயது யாதென்பதையும்,

(ii) மேற்படி பதவிக்கு அவரை நியமித்த அதிகாரி யாரென்பதையும்,

(iii) மேற்படி தலைவர் இதற்கு முன்னர் சேவையாற்றிய இடம் மற்றும் பதவி யாதென்பதையும்,

(iv) அவரது கல்வித் தகைமைகளும் தொழில் தகைமைகளும் யாவையென்பதையும்,

(v) அவரது மாதச் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0869/ '10

கௌரவ சாந்த பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2009ஆம் ஆண்டுக்கான ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில்,

(i) தேசிய மட்டத்தில் சித்தியெய்திய சதவீதம் யாதென்பதையும்,

(ii) ஒவ்வொரு மாவட்டத்தினதும் சித்தியெய்திய சதவீதம் தனித்தனியாக யாதென்பதையும்,

(iii) அதிகூடிய சித்தியெய்திய சதவீதத்தை அடைந்த 3 கல்வி வலயங்களும், மேற்படி ஒவ்வொரு கல்வி வலயத்திலும் சித்தியெய்திய சதவீதம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இப்புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் சதவீதத்தை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அவர் மேற்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

0884/ '10

கௌரவ ஆர். யோகராஜன்,— நிர்மாண, பொறியில் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(ஆ) (i) ஸ்டொனி சிப்ட் தோட்டத்திலுள்ள ரொசிடா பிரிவில் அறுபத்தாறு (66) வீடுகள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்பதையும்,

(ii) அவற்றில் முப்பத்து மூன்று (33) வீடுகள் தொழிலாளர் குடியிருப்புகளாக வழங்கப்பட்டுள்ளதோடு எஞ்சியவை வெறுமனே விடப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) எஞ்சியுள்ள வீடுகளை தொழிலாளர் குடியிருப்பதற்காக அவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0900/ '10

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மூலதன கூட்டுறவுச் சங்கத்தின் (ஊவா மூலதன கூட்டுறவு வங்கி) பணிப்பாளர் சபை கூட்டுறவுச் சட்டத்துக்கமைய நியமிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) இப்பணிப்பாளர் சபை நியமிக்கப்படுகையில் சட்டபூர்வமாக செயற்குழுக் கூட்டங்களும் பொதுச் சபைக் கூட்டங்களும் நடாத்தப்பட்டிருந்ததா என்பதையும்,

(iii) இக்கூட்டுறவு சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டம் நடாத்தப்பட்ட இடமும் திகதியும் யாது என்பதையும்,

(iv) இக்கூட்டுறவுச் சங்கத்திலிருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்,

(v) இவர்களின் பெயர் மற்றும் முகவரிகள் யாவைஎன்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஊவா மூலதன கூட்டுறவுச் சங்கத்தின் தற்போதைய தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் பெயர்கள் யாவை என்பதையும்,

(ii) இதன் பொது முகாமையாளரினதும் நிறைவேற்று உத்தியோகத்தர்களினதும் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இக்கூட்டுறவுச் சங்க வங்கியின் முன்னாள் தலைவர் மற்றும் தற்போதைய தலைவர் ஆகியோர் சகோதரர்களென்பதையும்,

(ii) இதன் பொது முகாமையாளர் முன்னாள் தலைவரின் மனைவி என்பதையும்,

(iii) இங்கு நடைபெற்றுள்ள ஊழல்கள் மற்றும் மோசடிகள் தொடர்பாக கணக்காய்வு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) மேலே (இ) ( iii ) இல் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அறிக்கையின்படி சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0905/ ’10

கௌரவ எம்.ரீ. ஹசன் அலி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஐந்து ஆண்டுகளுக்கும் அதிகமாக கிழக்கு மாகாணத்தில் ஒப்பந்த அடிப்படையில் தொடர்ந்து கடைமையாற்றிய ஆங்கில ஆசிரியர்களுக்கு இரு கட்டங்களில் (அ.நி.சுற்றறிக்கை இல. 13 /2005 மற்றும் 21 / 2006 இன் கீழ் ) நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளனவென்பதையும் ,

(ii) மேற்படி அ.நி. சுற்றறிக்கையின் படி கல்வி அமைச்சசின் செயலாளரது ED / 2 / 29 / 4 / 1 / 46 ஆம் இலக்க 2005 / 7 /19 ஆம் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளின் படி, 2005/7/28 ஆம் திகதி முதல் மேற்படி ஆசிரியர்களில் ஒரு சிலருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும், 2003 – 2004 ஆண்டுகளிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் தொடர்ந்து கடைமையாற்றுகின்ற சுமார் 50 ஆசிரியர்களுக்கு இது வரை நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அம்பாறை மாவட்டத்தின் அம்பாறை, அக்கறைப்பற்று மற்றும் சம்மாந்துறை கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கடைமையாற்றுகின்ற அத்தகைய ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கும்,

(ii) மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிரிப்பு, கல்குடா மற்றும் மட்டக்களப்பு கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கடைமையாற்றுகின்ற அத்தகைய ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கும்

துரிதமாக நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன்?

0250/ '10

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பாந்தோட்டை வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய அம்பாந்தோட்டை கோட்டக் கல்வி காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளில்,

(i) துப்புரவேற்பாட்டு வசதிகள் இல்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்,

(ii) கட்டிடத் தேவைகள் உள்ள பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் தேவையான கட்டிடங்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் கல்வியில் நவோதயம் ஏற்படுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான ஒதுக்கீடுகளை இப்பாடசலைகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iii) ஆமெனில், அது எவ்வளவு காலத்தினுள் என்பதையும்

என்பதை அவர் குறிப்படுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0646/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீதிகளை அகலமாக்கவென்றும் அபிவிருத்திக்கென்றும் அரசாங்கத்தினால் பெறப்பட்டு இன்னும் நட்டஈடு செலுத்தப்படாமலுள்ள காணிகள் உள்ளனவா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், செலுத்தப்படவேண்டியுள்ள தொகையினையும்,

(iii) அவ்வாறான நட்டஈடு எத்திகதியிலிருந்து செலுத்தப்படவேண்டியுள்ளது என்பதையும்,

(IV) செலுத்தப்படாது இன்னும் எஞ்சியுள்ள காணி உரிமையாளர்களுக்கு வட்டி செலுத்தப்படுமா என்பதையும்,

(V) சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்காக அக்காணி உரிமையாளர்களுள் பெரும்பான்மையானோருக்கு நட்டஈடு செலுத்தப்படாமலிருக்கும்போது, சில நிறுவனங்களுக்கும் நபர்களுக்கும் பணம் செலுத்தப்படுவது ஏன் என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) நட்டஈடு முழுவதும் செலுத்தப்பட்ட பின்னரே காணி சுவீகரிப்பை மேற்கொள்ள வேண்டும் என்று கூறுவதற்கான உரிமையினைப் பிரசைகள் எதிர் காலத்திலே கொண்டிருப்பார்கள் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

0841/10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2006 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை அரசாங்கம் இழந்துள்ள மொத்த தீர்வை வரி வருமானத்தின் அளவு அடிப்படையில் வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கடந்த ஆண்டில் நான்கு வர்த்தக உடன்படிக்கைகளினால் மட்டும் அரசாங்கம் இழந்துள்ள தீர்வை வரி வருமானம் சுமார் ரூபாய் 600 கோடியாகும் என்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(இ) (i) ஆமெனில், அவ்வுடன்படிக்கைகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி உடன்படிக்கைகள் காரணமாக தீர்வை வரி வருமானம் குறைவதற்கு ஏதுவான விடயங்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி நிலைமைகளை தவிர்ப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் வேலைத்திட்டம் யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0872/ '10

கௌரவ சாந்த பண்டார,— மின் வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டின் பின்பு எமது நாட்டில் தேசிய மின் வலுத் தொகுதியை வலுவூட்டுவதற்குத் தேவையான மின் உற்பத்தி செய்வதற்கான கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன என்பதையும்,

(ii) அவ்வாறாயின் இக் கருத்திட்டங்கள் நீர் மின் வலு நிலையங்கள், அனல் மின் வலு நிலையங்கள், மற்றும் வேறு விதமான மின் வலு நிலையங்கள் எனும் அடிப்படையில் வெவ்வேறாக யாவை என்பதையும்,

(iii) இக்கருத் திட்டங்களினூடாக தேசிய மின் வலுத் தொகுதிக்கு இது வரை பங்களிப்புச் செய்துள்ள மெகாவொட்களின் அளவு மற்றும் எதிர்காலத்தில் சேர்ப்பதற்கு இலக்காகச் கொண்டிருக்கின்றது மெகாவொட்களின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இக் கருத்திட்டங்களுக்கு மேலதிகமாக மேலும் விசேட கருத்திட்டங்களை ஆரம்பித்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், இந்த ஒவ்வொரு கருத்திட்டமும் தொடர்பான விபரங்கள் சுருக்கமாக யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0901/ '10

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார,— நீர்ப்பாசன, நீர் வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(ஆ) (i) மொனராகல மாவட்டத்தினூடாக பாயும் கும்புக்கன் ஓயாவை மறித்து மொனராகல பிபில வீதியில், ஹொரகொல்ல பிரதேசத்தில் நீர்த்தேக்கம் ஒன்றை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்,

(ii) அதன் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கான திகதி யாதென்பதையும்,

(iii) இதன் நீரை மொனராகல மாவட்டத்திற்கு வெளியே கொண்டு செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) இன்றேல், இதன் மூலம் நீர் வழங்கப்படும் மொனராகல மாவட்டத்தின் பிரதேசங்கள் யாவை என்பதையும்,

(v) இந்நீர்த்தேக்கம் அமைக்கப்படுகையில் நீரில் மூழ்கும் காணிகளுக்கு மாற்றுக் காணிகளை வழங்குவதற்கும் காணிகள், சொத்துக்களுக்கான இழப்பீடுகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0915/ '10

கௌரவ அஜித் பி. பெரேரா,— விளையாட்டுத் துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை கிரிக்கெட்டிற்கு இறுதியாக வாக்கெடுப்பின் மூலம் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்ட வருடம் எதுவென்பதையும்,

(ii) அச் சந்தர்ப்பத்தில் அதன் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார் என்பதையும்,

(iii) 2005 மார்ச், 2008 திசெம்பர், 2009 மார்ச், 2010 ஜூலை ஆகிய சந்தர்ப்பங்களில் இலங்கை கிரிக்கெட்டிற்கு இடைக்கால குழுக்களை நியமிப்பதற்கு ஏதுவான காரணங்களை ஒவ்வொரு வருடங்கள் வெவ்வேறாக யாதென்பதையும்,

(iv) அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நியமிக்கப்பட்ட இடைக்காலக் குழு அங்கத்தவர்களின் பெயர்கள் வெவ்வேறாக எவை என்பதையும்,

அவர் இச்சைபயில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 33ஆவது வாசகத்தின் கீழ் இடைக்காலக் குழுக்கள் நியமிக்கப்படும் சந்தர்ப்பங்கள் எவை என்பதையும்,

(ii) இலங்கை கிரிக்கெட்டிற்கு 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை ஜனநாயக முறையில் உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கிருந்த தடைகள் எவை என்பதையும்,

(iii) அந்த நிறுவனத்துக்கு ஜனநாயக ரீதியாக உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்படாமை, கிரிக்கெட் விளையாட்டின் வளர்ச்சிக்கு தகுந்தல்ல என்பதையும்

அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(இ) விளையாட்டுக்கள் சட்டத்தின் 35 ஆவது வாசகத்துக்கமைய விளையாட்டுக் கழகங்களின் வாக்குகளின் மூலம் இலங்கை கிரிக்கெட்டிற்கு உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்காக எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0977/ '10

கௌரவ எம்.ரீ.ஹசன் அலி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்வி அமைச்சினால் குறைந்த வசதிகளைக் கொண்ட பாடசாலைகளாக இனங்காணப்பட்டுள்ள மாகாண சபைகள் மற்றும் மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும் ,

(ii) இப்பாடசாலைகளில் முஸ்லிம் பாடசாலைகள் மற்றும் தோட்டப் பாடசாலைகளின் எண்ணிக்கை தனித்தனியே யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலைகளின் வளர்ச்சிக்காக எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் மாவட்ட மட்டத்தில் தனித்தனியே யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல் ஏன்?

# 2011, மார்ச்சு 24, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0226/ '10

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பந்தோட்டை வலயக் கல்விக் காரியாலயத்திற்குட்பட்ட அம்பலாந்தோட்டை கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் பரிபாலிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைகளின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலைகளில் தற்போது மூடப்பட்டுள்ள அல்லது மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கோட்டத்திற்குரிய பாடசாலைகளில் மிகையான ஆசிரியர்கள் உள்ளனரா என்பதையும்,

(ii) அவ்வாறான பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iv) பற்றாக்குறை நிலவுவது எந்தப் பாடங்களுக்கு என்பதையும்,

(v) இவ்வாறு ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(vi) அவ்வாறாயின் அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0384/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) காலிமுகத் திடல் முதல் வெள்ளவத்தை வரை 500 ஏக்கர் காணியினை நிரப்புவதற்கானக சாத்தியக்கூற்று ஆய்வு தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பது உண்மையா என்பதை அவர் இச் சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) சாத்தியக்கூற்று ஆய்வினை மேற்கொள்பவர் யார் என்பதையும்,

(ii) கடற்படுகையினை நிரப்புவதற்கான செலவினையும்,

(iii) அது சூழலைப் பாதிக்குமா என்பதையும்,

(iv) இதன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆலோசகர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் யார் என்பதையும்,

(v) இவ்வாறான கருத்திட்டத்தினைச் செய்வதன் நோக்கத்தினையும்,

(vi) இதற்கான கடனை மீளச் செலுத்துவதற்கான காலப்பகுதியினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0528/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், உள்ளக சுற்றுவட்ட வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாது என்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்விப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப் பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல், வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0621/ '10

கௌரவ சுனில் ஹந்துனெத்தி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) கல்வி அமைச்சின் செயலாளரது 2008/41 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் பாடசாலை பழைய மாணவர் சங்கம் மற்றும் பல்வேறு சங்கங்களினால் பாடசாலை மாணவர்களிடமும் பெற்றோர்களிடமும் சில காரணங்களைக் காட்டி நிதி வசூலிப்பது தடை செய்யப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) அவ்வாறிருக்கையில், கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் 2010 Royal Parade எனும் பெயரில் ரூபா. 600.00 பெறுமதியான கட்டமிடப்பட்ட அட்டைகளை பிள்ளைகளுக்கும் பகிர்ந்தளித்து அதனூடாக நிதி வசூலிக்கின்றது என்பதை அவர் அறிவாரா?

(இ) குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு முரணாக நிதி வசூலிக்கப்பட்டிருப்பின் இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0761/ '10

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழிநுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனம் VOIP சர்வதேச தொலைபேசிச் சேவைகள் தொடர்பில் ரெலிகொம் ஏஷியா நிறுவனத்துடன் உடன்படிக்கையொன்றைச் செய்துள்ளதா என்பதையும்,

(ii) இதற்கு ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் முன் அனுமதி கிடைத்ததா என்பதையும்,

(iii) இந்த உடன்படிக்கையை செய்துகொள்வதற்கு முன்னர் சர்வதேச தொலைபேசி அழைப்புகளுக்காக ஒரு நிமிடத்திற்கு (US $) 0.075 அமெரிக்க டொலர் ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்திற்குக் கிடைத்ததா என்பதையும்,

(iv) இந்த உடன்படிக்கை காரணமாக, மேற்படி தொகை ஒரு நிமிடத்திற்கு (US $) 0.069 அமெரிக்க டொலர் வரை குறைந்துள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ளுமாறு 2009 ஆம் ஆண்டு செப்தம்பர் மாதத்தில் முதல் தடவையாக பிரேரணையொன்று சமர்ப்பிக்கப்பட்டதா என்பதையும்,

(ii) ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை மேற்படி பிரேரணையை சட்டம் மற்றும் நிதி ரீதியிலான விடயங்களினடிப்படையில் நிராகரித்ததா என்பதையும்,

(iii) ஆமெனின், அந்நிறுவனத்தை மீண்டும் இலங்கைக்கு வரவழைத்தது யார் என்பதையும்,

(iv) மேற்படி உடன்படிக்கை பொது நடைமுறைகளுக்கு முரணாக கையொப்பமிடப்பட்டதா என்பதையும்,

(v) மேற்படி உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டதன் மூலம் ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்திற்கு ஏற்படும் நட்டம் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0870/ '10

கௌரவ சாந்த பண்டார,— இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாண இளைஞர் யுவதிகளை தேசிய இளைஞர் சேவை மன்றத்துடன் தொடர்புபடுத்த அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) அந்த மாகாணத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தாபிக்கப்பட்டுள்ள இளைஞர் கழகங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வட மாகாண இளைஞர், யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழில் பயிற்சியை வழங்க அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்,

(ii) அந்த மாகாணத்தில் தாபிக்கப்பட்டுள்ள வாழ்க்கைத் தொழில் பயிற்சி நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்நிறுவனங்களில் அமுலில் உள்ள வாழ்க்கைத் தொழில் பயிற்சிப் பாடநெறிகள் யாவையென்பதையும்.

(iv) இதன் பொருட்டு போதியளவு இளைஞர், யுவதிகள் பங்குபற்றுகின்றனரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0902/ '10

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(ஆ) (i) ஊவா மூலதன கூட்டுறவுச் சங்கத்துடன் இணைந்த வங்கியில் ஆரம்பிக்கப்படவுள்ள சிறுவார் சேமிப்புக் கணக்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இக்கணக்குகளின் உரிமையாளர்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) இவ்வங்கியில் வைப்பிலிடும் நிதியிலிருந்து வங்கி உத்தியோகத்தர்களுக்கும் வேறு நபர்களுக்கும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) அவ்வாறாயின், கடன் வழங்கப்பட்டுள்ளவர்களின் பெயர், முகவரி ஆகியவை யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவ்வாறு பெறப்பட்ட கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளதென்பதையும்,

(ii) திருப்பிச் செலுத்தத் தவறியவர்கள் தொடர்பாக வங்கியினால் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்,

அவர் அறிவாரா?

(இ) (i) இக்கடன்களைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(ii) இவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0923/ '10

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிக்கும் கருத்திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தச் செலவினத்தில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு ரீதியாகப் பெற்றுக் கொள்ளப்படும் பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) இந்தக் கருத்திட்டத்தின் பணிகளுக்கான ஊழியர்கள் எவ்வாறு சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர் என்பதையும்,

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0978/ '10

கௌரவ எம்.ரி. ஹசன் அலி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்பு மாநகர சபையின் உதவி உருக்கி ஒட்டுநர் பதவியை வகித்துக்கொண்டிருந்த போது 2008.11.20 ஆம் திகதி ஓய்வுபெற்ற திரு. ஏ.எச்.எம். மஹ்ருபுக்கு ஓய்வூதியப் பிரமாணங்களின் அடிப்படையில் வழங்கப்படும் கொடைகள் மற்றும் ஓய்வூதியத்தைக் கணிப்பிடுகையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் ( HRC/2505/05ஆம் 2007/06/14ஆம் திகதி) வழங்கப்பட்டுள்ள கட்டளைக்கமைய, 1989/4/27 திகதி தொடக்கம் உதவி உருக்கி ஒட்டுநர் பதவியில் நிரந்தர ஊழியராகவும் 1989 தொடக்கம் பயிற்சி I வகுப்பில் தரம் II உருக்கி ஒட்டுநர் பதவிக்கு உயர்வு பெற்றவராகவும் கருதப்பட வேண்டுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனின், இந்த விடயங்களை கருத்திற்கொண்டு திரு. மஹ்ருபின் ஓய்வூதியம் மற்றும் அதற்கு ஏற்புடையதாக கிடைக்கவேண்டிய அனைத்து கொடுப்பனவுகளை தயாரித்து தாமதமின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0240/ '10

கௌரவ சஜித் பிரேமதாச, — கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பாந்தோட்டை வலயக் கல்விக் காரியாலயத்திற்குரிய அம்பாந்தோட்டை கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளுக்கும், பொதுவான தேவைகளுக்கும் பற்றாக்குறை நிலவுகிறதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற ஆசிரியர் விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அவற்றிற்குரிய பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) மரத்தளபாடங்களுக்கான தேவை காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(vi) அத்தேவைகள் யாவையென்பதையும்,

(vii) விஞ்ஞான கூடங்கள் மற்றும் நூலகங்கள் அற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(viii)அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்யத் தேவையான நிதியை அப்பாடசாலை களுக்கு ஒதுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0647/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2009 ஜனவரி முதல் மே மாதம் வரையுள்ள காலப்பகுதியில் இந்நாட்டில் அந்நியச் செலாவணிக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவியதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) அந்நியச் செலாவணியை ஈர்ப்பதற்கு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பல்வேறு திட்டங்களின் பெயர்களையும்,

(ii) அவற்றில் இன்னும் எஞ்சியுள்ள திட்டங்களையும்,

(iii) வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு விசேடமாக 20 சதவீதம் சேர்க்கப்பட்டுள்ளதா என்பதையும் அது தொடர்ந்து செயற்படுகிறதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2009 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டம் மற்றும் 2009 ஆம் ஆண்டு நடுப்பகுதி வரவுசெலவுத் திட்டம் ஆகியவற்றினால் சேமிப்புக்களை ஊக்குவிப்பதற்கு வழங்கப்பட்ட திட்டங்களையும்,

(ii) அப்போது வழங்கப்பட்ட வட்டிவீதங்களையும் தற்போதுள்ள வட்டி வீதங்களையும்,

(iii) மூத்த பிரஜைகளின் சேமிப்புகளுக்கு 20 சதவீத மிகையூதியம் வழங்கப்பட்டதா என்பதையும்,

(iv) அவ்வாறெனில், அது எத்திகதி வரை நடைமுறையிலிருந்து என்பதையும்,

(v) தற்போது மூத்த பிரஜைகளுக்கு எவ்வாறு உதவி வழங்கப்படுகிறது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0842/10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010, ஐக்கிய நாடுகள் மாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி உள்ளிட்ட குழுவில் உள்ளடங்கிய அங்கத்தவர் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி மாநாட்டுக்காக ஒரு நாட்டுக்குக் கிடைக்கின்ற உத்தியோகபூர்வ அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படிகுழு தங்கியிருந்த இடத்தின் பெயர் யாது;

(iv) மேற்படி பயணத்துக்கு செலவான மொத்தப் பணத்தொகை யாது;

(v) இச் செலவை ஏற்பவர்கள் யார்;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி மாநாட்டுக்கு, ஐக்கிய நாடுகள் அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் ஏனைய நாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட பிரதிநிதிகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு நாட்டுக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0871/ '10

கௌரவ சாந்த பண்டார,— சமூக சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எமது நாட்டின் பிரசைகளுக்கான முதியோர் அமைப்புகள் தாபிக்கப்பட்டுள்ளனவென்பதை அவர் அறிவாரா என்பதையும்,

(ii) ஆமெனில், தற்போது நாட்டில் தாபிக்கப்பட்டுள்ள முதியோர் அமைப்புகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) மேற்படி மூத்த பிரசைகளுக்கு முதியோர் அடையாள அட்டைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) மேற்படி அடையாள அட்டை அனைத்து அரச நிறுவனங்களினாலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதா என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0924/ '10

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— மின் வலு, எரி சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுரைச்சேலை நிலக்கரி அணல் மின் உற்பத்தி நிலையக் கருத்திட்டத்துக்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த செலவினத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியாக பெற்றுக் கொள்ளப்படும் பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) இந்தத் திட்டத்திற்கு நிதி கிடைக்கும் வழிகள் எவை என்பதையும்,

(iii) மொத்தச் செலவினத்தில் கடனாகக் கிடைக்கும் தொகை எவ்வளவு என்பதையும்,

(iv) கடன் தொகையை வழங்கும் நாடுகள் எவை என்பதையும்,

(v) அந்தக் கடன் தொகைக்காக செலுத்தவேண்டிய வட்டியின் அளவு மற்றும் கடன் தொகையை செலுத்தும் கால எல்லை யாதென்பதையும்,

(vi) கருத்திட்டத்தை முழுமையாகப் பூர்த்தி செய்ய எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி கருத்திட்டத்தின் பணிகளுக்கு ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் விதிமுறை எது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0979 / '10

கௌரவ எம்.ரீ.ஹசன் அலி,— பொது நிருவாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டரீதியான அடிப்படையில் தாபிக்கப்பட்ட ஒரு நிறுவனம் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாவரா?

(ஆ) (i) 1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மேற்படி ஆணைக்குழு, அரசாங்க அமைச்சுகள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் உள்ளிட்ட ஏனைய அரசாங்க தாபனங்களினால் இழைக்கப்பட்டுள்ள மனித உரிமை மீறல்கள் தொடர்பில், பிரஜைகள் தாக்கல் செய்யும் முறைப்பாடுகளை புலனாய்வு செய்து வழங்கும் விதப்புரைகள் அல்லது பணிப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு, குறிப்பிட்ட தாபனங்கள் கடப்பாடுடையவாக உள்ளனவா என்பதையும்,

(ii) மேற்படி ஆணைக்குழுவின் விதப்புரைகளை அல்லது பணிப்புரைகளை நடைமுறைப்படுத்தல் வேண்டுமென பொது நிருவாக சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) மேலே அ (ii) இற்கு ஏற்ப சுற்றறிக்கையொன்று வெளியிடப்படவில்லையெனில் அத்தகைய சுற்றறிக்கையொன்றை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2011, மார்ச்சு 25, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0227/ '10

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்கல்லை வலயக் கல்விக் காரியலயத்திற்குட்பட்ட அங்குணகொலபெலஸ்ஸ கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் பரிபாலிக்கப்படும் அரசாங்கப்பாடசாலைளின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலைகளில் தற்போது மூடப்பட்டுள்ள அல்லது மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கோட்டத்திற்குரிய பாடசாலைகளில் மிகையான ஆசிரியர்கள் உள்ளனரா என்பதையும்,

(ii) அவ்வாறான பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iv) பற்றாக்குறை நிலவுவது எந்தப் பாடங்களுக்கு என்பதையும்,

(v) இவ்வாறு ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(vi) அவ்வாறாயின் அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0430/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரினைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அரசாங்கத்திற்குச் சொந்தமான கூட்டுத்தாபனங்கள், சபைகள் போன்ற சகல நிறுவனங்களின் பெயர்களையும், அவை ஒவ்வொன்றிலும் இற்றைவரை முதலீடு செய்யப்பட்டுள்ள மூலதனத்துடன் வெவ்வேறாகவும்,

(ii) கடந்த மூன்று வருடங்களாக அத்தகைய நிறுவனங்களில் பணியாற்றிவரும் ஆட்களின் எண்ணிக்கையினையும்,

(iii) அரசாங்கம் அந்நிறுவனங்களில் கொண்டுள்ள பங்குகளின் அளவினையும்,

(iv) மேலே (அ) (i) இலுள்ளவாறான நிறுவனங்களின் கடந்த வருடத்திற்கான இலாப, நட்டங்களை நிறுவன ரீதியில் வெவ்வேறாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) (அ) (i) இலுள்ள நிறுவனங்களில், அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவிற்கோ அல்லது அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கோ அறிக்கையிடாத நிறுவனங்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அறிக்கையிடாமைக்கான காரணத்தையும்,

(iii) இது அரசியலமைப்பின் பிரிவு 148 ஐ மீறுகின்ற ஒரு செயலா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0534/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், அக்கரைப்பற்று - சாகாமம் வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதியையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை

என்பவற்றை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல் , வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0706/ '10

கௌரவ கயந்த கருணாதிலக,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) காலி மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும், 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான ஒவ்வோர் ஆண்டிலும் யூன் மாதம் 30ஆம் திகதியன்று உரித்துடையோராயிருந்த சமுர்த்தி பெறுநர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(ii) அவ்வாறு உரித்துடையோருக்குச் செலுத்தப்பட்ட பணத் தொகைகள், இவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்,

(iii) 2005, 2006, 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் சமுர்த்தி பெறுநர்களுக்கு ஆண்டுதோறும் செலுத்தப்பட்ட மொத்தப் பணத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வோர் ஆண்டிலும் சமுர்த்தி பெறுநராக விளங்கிய எனினும், பின்னர் நீக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, இவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்,

(ii) அவ்வாறு நீக்கப்பட்டதற்கான அடிப்படை யாதென்பதையும்,

(iii) மேற்படி கால எல்லையில் புதிதாகச் சேர்ந்த சமுர்த்தி பெறுநர்கள் இருப்பார்களாயின் இவர்களுக்குச் செலுத்தப்பட்ட பணத் தொகை மற்றும் இவர்களின் முகவரிகள் ஆண்டுதோறும் தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0782/ '10

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— சமூக சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் பிறப்பிலேயே அங்கவீனர்களாகவும் பல்வேறு விபத்துகளாலும் நோய்களாலும் அங்கவீனர்களாகவும் ஆகியுள்ள ஆட்களின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்படி அங்கவீனர்களுக்காக அரசினால் வழங்கப்படும் நிவாரணச் சேவைகள் யாவையென்பதையும்,

(iii) அப்பணிகளுக்காக அரசு வருடந்தோறும் செலவு செய்யும் பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0893/ '10

கௌரவ ஹரின் பெர்னாந்து,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் பிரதான பாடசாலைகளின் மாணவர்களுக்கு கற்கை லீவு (study leave) வழங்கப்படுகின்றது என்பதையும்,

(ii) க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு தவணை முடிவடையும் போது பாடவிதானத்திற்கு ஏற்ப பாடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் குறிப்பிட்ட பாடங்களுக்கு பொறுப்பான ஆசிரியர்களினால் பாடசாலை நேரங்களில் மேலதிக வகுப்புக்கள் (Tuition Class) நடத்தப்படுகின்றன என்பதையும்,

(iii) அந்த வகுப்புக்களை நடத்துவதற்காக மேற்கூறியவாறு கற்கை லீவு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்கூறியவாறு லீவு வழங்குவதற்கு யாரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவிப்பாரா?

(இ) கற்கை லீவு வழங்கப்பட்டு பாடசாலை நேரங்களில் வகுப்புக்களை நடத்தாமல் அந்தக் கால எல்லைக்குள் பணத்துக்காக வகுப்புக்களை நடத்தும் அரச பாடசாலை ஆசிரியர்கள் தொடர்பாக ஆராய்ந்து அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0906 / '10

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) புத்தளம் மாவட்டத்தின் கல்பிட்டி கல்வி வலயத்தில் அமைந்துள்ள சுமார் இரண்டாயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்கின்ற அல்-அக்ஸா தேசிய பாடசாலையில் தற்போது பல்வேறு பாடங்களுக்கு சுமார் இருபது ஆசிரியர்களுக்கும் அதிகமான பற்றாக்குறையும் பௌதிக வளங்கள் இல்லாத நிலைமையும் உள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலையில் நிலவுகின்ற பெரும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும் கேட்போர்கூட வசதி உட்பட தேவையான பௌதிக வளங்களை பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கையெடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0926/ '10

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு துறைமுகத்தின் புதிய கொள்கலன் இறங்குதுறையை நிர்மாணிக்கும் கருத்திட்டத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த செலவினம் யாதென்பதையும்,

(ii) அந்த மொத்தச் செலவினத்தில் உள்நாட்டிலிருந்து பெறப்படும் தொகை யாதென்பதையும்,

(iii) வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் தொகை எவ்வளவு யாதென்பதையும்,

(iv) அந்தக் கருத்திட்டத்திற்கு நிதி கிடைக்கும் வழிகள் யாவையென்பதையும்,

(v) மொத்தச் செலவினத்தில் கடனாகக் கிடைக்கும் தொகை யாதென்பதையும்,

(vi) கடன் தொகைகளை வழங்கும் நாடுகள், குறிப்பிட்ட வட்டி வீதங்கள் மற்றும் கடனை அடைக்கும் கால எல்லைகள் யாவையென்பதையும்,

(vii) முழுமையான கருத்திட்டத்தையும் பூர்த்தி செய்ய எடுக்கும் காலம் யாதென்பதையும்,

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இந்தக் கருத்திட்டத்தின் பணிகளுக்காக ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் விதி முறை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0972/ '10

கௌரவ சாந்த பண்டார,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 ஆம் ஆண்டில் பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு விழாவை இலங்கையில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், இதன் ஏற்பாட்டு பணிகளுக்கு மேலதிகமாக இவ்விழாவுக்காக தேசிய வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) பாடசாலைகளில் திறமையுள்ள விளையாட்டு வீரர்களை இனங்காண்பதற்காக வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) கிராமப் புற விளையாட்டு வீர, வீராங்கனைகளை தேசிய மட்டத்திற்கு உணர்த்துவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0980/ ' 10

கௌரவ எம்.ரீ.ஹஸன் அலி,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையிலிருந்து சவூதி அரேபியாவுக்கு வீட்டுப் பணிப்பெண்ணாகச் சென்ற செல்வி றிசானா நபீக்குக்கு அந்நாட்டு நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) செல்வி றிசானா நபீக், இலங்கையிலிருந்து, வீட்டுப் பணிப்பெண்ணாக புறப்பட்டுச் சென்ற திகதி, கடவுச்சீட்டு இலக்கம், அதில் குறிப்பிடப்பட்டுள்ள பிறந்த திகதி, மற்றும் அது வழங்கப்பட்ட திகதி என்பன யாவை என்பதையும்,

(ii) அவளுடைய இலங்கை கடவுச்சீட்டு விண்ணப்பப் படிவத்தை அத்தாட்சிப் படுத்திய சமாதான நீதவானின் பெயர் மற்றும் விலாசம் என்பற்றையும்,

(iii) செல்வி றிசானாவின் பிறப்புச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள பிறந்த திகதி, பதிவு இலக்கம், மற்றும் திகதி அத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ள ஆளுகைப் பிரதேசம் என்பன யாவை என்பதையும்,

(iv) அவளுடைய தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள பிறந்த திகதி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் யாது என்பதையும்,

(v) செல்வி றிசானாவின் வெளிநாடு செல்வதற்கு உதவிய, வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்தின் பெயர் யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) அவருக்கு சவூதி அரேபிய நீதிமன்றம் மரண தண்டனை விதித்த திகதி மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பினை அறிவித்த திகதி யாதென்பதை அவர் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0241/ '10

கௌரவ சஜித் பிரேமதாச, — கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பாந்தோட்டை வலயக் கல்விக் காரியாலயத்திற்குரிய திஸ்ஸமஹராம கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளுக்கும், பொதுவான தேவைகளுக்கும் பற்றாக்குறை நிலவுகிறதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற ஆசிரியர் விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அவற்றிற்குரிய பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) மரத்தளபாடங்களுக்கான தேவை காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(vi) அத்தேவைகள் யாவையென்பதையும்,

(vii) விஞ்ஞான கூடங்கள் மற்றும் நூலகங்கள் அற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(viii)அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்யத் தேவையான நிதியை அப்பாடசாலை களுக்கு ஒதுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0447/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த பத்து வருடங்களில் ஸ்ரீலங்கா போக்குவரத்துச் சபையிலிருந்து விலகிச் சென்ற ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட பணிக்கொடையின் மொத்தத் தொகை வருடவாரியாக யாதென்பதையும்,

(ii) அவ்வூழியர்களின் பெயர்களையும், 2005ஆம் ஆண்டு தொடக்கம் 2010ஆம் ஆண்டு வரை அவ்வூழியர் ஒவ்வொருவருக்கும் செலுத்தப்பட்ட பணிக் கொடையை வருட வாரியாக யாதென்பதையும்

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மீத்தோட்டமுல்ல டிப்போவைச் சேர்ந்த திரு. டபிள்யு. ஏ. ஜயசேன உட்பட, ஸ்ரீ லங்கா போக்குவரத்துச் சபையிலிருந்து விலகிச் சென்ற சில ஊழியர்களுக்கு பணிக்கொடை இதுவரை செலுத்தப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்,

(ii) அவர்களின் பணிக்கொடைக்கென வழங்கப்பட்ட பணம் தற்போது எங்குள்ளது என்பதையும்,

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0862/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நூல் வெளியீட்டு உதவிக் கருத்திட்டம் எனப்படும் எழுத்தாளர் உதவிக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்,

(ii) ஆரம்பம் தொடக்கம் இன்றுவரை மேற்படி கருத்திட்டத்திற்காக ஒவ்வொரு வருடத்திற்கும் அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட நிதி தனித்தனியே எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் உதவியைப் பெற்றுக்கொண்ட எழுத்தாளர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்திற்கேற்ப யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி கருத்திட்டத்தின் செயற்படுநிலை யாதென்பதையும்,

(ii) எழுத்தாளர்களுக்கு மாபெரும் உறுதுணையாகவிருந்த இக்கருத்திட்டம் அடிக்கடி செயலிழப்பதைத் தடுப்பதற்கான நிரந்தர அடித்தளமொன்றை இடுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iii) ஆமெனில், எத்திகதியில் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0973/ '10

கௌரவ சாந்த பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2008ஆம் ஆண்டில் 5ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில்,

(i) தேசிய ரீதியாக சித்தியடைந்த சதவீதம் எவ்வளவென்பதையும்,

(ii) சித்தியடைந்த சதவீதம் மாகாண, கல்வி வலய, கல்விக் கோட்ட மட்டத்தில் தனித்தனியே எவ்வளவென்பதையும்,

(iii) மிகக் கூடுதலாக சித்தியடைந்த சதவீதத்தை பெற்றுக் கெண்ட 3 கல்விக் கோட்டங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0981/ '10

கௌரவ எம்.ரீ.ஹஸன் அலி,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சவூதி அரேபியாவில் நடைமுறையில் உள்ள சட்டம், இஸ்லாமிய ஷரீஆ சட்டம் என்பதையும்,

(ii) இஸ்லாமிய ஷரீஆ சட்டத்துக்கு அமைய, நீதிமன்றம் எவரேனும் ஒரு நபருக்கு மரண தண்டனை விதிக்கையில், குறிப்பிட்ட குற்றவாளி சட்ட விரோதச் செயலை அல்லது குற்றத்தை புரியும் திகதியன்று 18 வயதைப் பூர்த்தி செய்திருத்தல் கவனித்தல் கொள்ளப்படுகின்றது என்பதையும்,

(iii) தற்போது சவூதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள செலவா றிசானா நபீக், இக்குற்றச்சாட்டுக்கு உள்ளாகின்ற போது அவர் உண்மையிலேயே 17 வயதுடையவராக இருந்தார் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆமெனில், செல்வி றிசானாவுக்கு போலி பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை மற்றும் இலங்கை கடவுச் சீட்டு விண்ணப்பப் படிவத்தை அத்தாட்சிப்படுத்திய சமாதான நீதவானுக்கும் வெளிநாடு செல்வதற்கு உதவிய வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவன உரிமையாளருக்கும் எதிராக இற்றைவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்,

(ii) றிசானாவுக்கு எதிராக அந்நாட்டு நீதிமன்றத்தில் நடத்தப்பட்ட விசாரணையின்போது உரிய விதத்தில் விடயங்களை முன்வைக்கத் தவறிய இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அவருக்கு அத்தண்டனை விதித்தமைக்கான முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

## (2011, மார்ச்சு 25, வெள்ளிக்கிழமை)

0882/ '10

கௌரவ ரஜீவ விஜேசிங்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 ஜுலை 29 ஆம் திகதிய " டெய்லி மிறர்" பத்திரிகையில் வெளிவந்த ஒரு கட்டுரையானது, பாலியல் மற்றும் பால்நிலை சமத்துவம் பற்றிய விடயங்கள் தொடர்புடைய சட்டங்களில் மாற்றத்திற்காகப் போராடும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் போதைப் பொருட்களின் அதீத பாவனை போன்ற சட்டத்திற்கு எதிரான செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருப்பதாக தெரிவிப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சட்டத்திற்கு மாறான செயற்பாடுகள் குறித்த தகவல்களை தம்மிடம் வைத்திருந்து அவற்றை வெளிப்படுத்தும பத்திரிகைகள் அச்செயற்பாடுகள் குறித்த சான்றுகளைக் கொண்டிருக்கின்றனவா என்பதை விசாரித்தறிவதை உறுதிப்படுத்துவதற்கும்,

(ii) சட்டம் மதிக்கப்பட வேண்டும் என்பதையும், சட்டத்தில் மாற்றம் ஏற்படுத்துவது ஏற்றுக்கொள்ளத்தக்க நடைமுறை என்பதையும், அதனை கடுமையான தொனியில் கடிந்துரைத்தலாகாது என்பதையும் பத்திரிகைக்கு அறியத்தருவதற்கும்

அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(இ) (i) பாலியல் மற்றும் பால்நிலை சமத்துவம் தொடர்பான இலங்கை சட்ட ஆணைக்குழுவின் கருத்துக்கள்; மேற்சொன்ன கட்டுரையில்; கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) சிபர்சு செய்யப்பட்ட சட்டத்திலான மாற்றங்களை அமுல்படுத்துவதற்காக அமைச்சால் முன்வைக்கப்படும் காலக்கெடு என்பன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0903 / '10

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அலுத்கம, தர்கா நகர், தேசிய கல்வியியல் கல்லூரியில் இணைந்த விரிவுரையாளராக கடைமையாற்றுகின்ற திரு எம்.ஆர்.எம் சில்மி இலங்கை கல்வி நிருவாக சேவையின் III ஆம் வகுப்புக்கு உள்ளீர்ப்பதற்காக 2000/11/05 ஆம் திகதியன்று நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியுள்ளாரென்பதையும்,

(ii) அனைத்து தகைமைகளையும் பூர்த்திச்செய்திருந்தும் களுத்துறை வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள அவரது பிரத்தியேக ஆவணக் கோப்பு பூரணப்படுத்தப்படாமையினாலும் உரிய விதத்தில் பராமரிக்கப்படாமையினாலும் எதிர்பார்த்திருந்த பதவி உயர்வு இவருக்கு கிடைக்கவில்லையென்பதையும்,

அவர் அறிவாரா?

(ஆ) 82/2000 ஆம் இலக்க 2000/8/24 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி பதவி உயர்வுக்காக பட்டதாரியான இணைந்த விரிவுரையாளரொருவர் 2000/8/24 ஆம் திகதிக்கு 5 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருப்பதன் தேவையை முதுமாணி பட்டதாரியான (M.A ) திரு. சில்மி 2000 /7 /11 ஆம் திகதியளவில் பூர்த்திசெய்துள்ளாரென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனில், திரு. சில்மிக்கு மேற்படி பதவி உயர்வு வழங்குவதை மேலும் தாமதப்படுத்துவதற்கான காரணங்கள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) 2000/12/08 ஆம் திகதி முதல் நடைமுறைக்குவரும் வகையில் திரு. சில்மியை இலங்கை கல்வி நிருவாக சேவையின் III ஆம் வகுப்புக்கு உள்ளீர்த்து, அப் பதவிக்குரிய சம்பள மட்டத்தின் பிரகாரம் அனைத்து நிலுவைச் சமபளங்களையும் கொடுப்பனவுகளையும் தாமதமின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0907/10

கௌரவ மொஹமட் அஸ்லம்,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் காலி நகர்சார் ஆளுகைப் பிரதேசத்தில் இற்றைவரை இனங்காணப்பட்டுள்ள அனுமதியற்ற மற்றும் சட்டவிரோத நிர்மாணங்களின் எண்ணிக்கை மற்றும் அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) காலி நகரத்திலுள்ள மேற்படி நிர்மாணங்களில் இருமாடிக்கட்டிடம் ஒன்றின் மேல் மாடியில் கூரையில்லாத செங்கல் சுவரொன்று மழை நீரில் கரைந்து உடைந்துவிழும் ஆபத்தான நிலைக்குள்ளாகியுள்ளது என நகர அபிவிருத்தி அதிகாரசபையின் காலி மாவட்டப் பணிப்பாளருக்கு 05/02/அன/பெ/4462 இலக்கமுடைய 2010/02/09 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் வலுவாக்கல் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்,

(i) இது தொடர்பாக நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஒம்புட்சுமான்) காலி நகர ஆணையாளரினால் ME/UA/2008/103 இலக்கமுடைய 2008/9/15 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்,

(ii) இற்றைவரை இந்த சட்டவிரோதமானதும் ஆபத்தானதுமான நிர்மாணத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்,

அவர் அறிவாரா?

(இ) மேற்படி "அ" பந்தியில் இனங்காணப்பட்ட சட்டவிரோத நிர்மாணிப்புகள் மற்றும் "ஆ" பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதியற்ற கட்டிடம் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபை பின்பற்றும் நடைமுறை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0908/10

கௌரவ மொகமட் அஸ்லம்,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சுனாமி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இராச்சியத்தின் அனுசரனையுடன் காலி கடவத் சதர பிரதேச செயலாளர் பிரிவின் மொரகொட, பிரசேத்தின் "கலீபாபுரம்" எனும் கிராமத்தில் வதிபவர்களுக்ககாக வீடுகளை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்த பணத்தொகை யாதென்பதையும்,

(ii) அங்கு நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் வீடுகளைப் பெற்றுக்கொண்டவர்களின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்,

(iv) மேற்படி ஒவ்வொரு வீட்டுரிமையாளர்களுக்கும் வழங்கப்பட்ட வீடமைப்பு நிதியுதவி எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கலிபாபுரம் விடமைப்புத் திட்டத்தை அமுல்படுத்திய நிறுவனம் அல்லது அரச சார்பற்ற நிறுவனம் யாதென்பதையும்,

(ii) அதன் மேற்பார்வைப் பணிகளை மேற்கொண்ட நிறுவனம் அல்லது நபர் யாரென்பதையும்,

(iii) மேற்படி நிறுவனத்தின் அல்லது நபர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2011, ஏப்பிறல் 05, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

0081/ '10

கௌரவ சஜித் பிரேமதாஸ,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் கொங்ரீட் இட்டு செப்பனிடப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அங்குனுகெலபெலஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவின் வக்கமுல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட தொரன சந்தியிலிருந்து வடிகாலமைப்புச் சபை வரையிலான வீதியின் 200 மீற்றர் வரையிலான தூரம் தற்போது கொங்கிரீட் உடைந்து குன்றும் குழியுமாக முழுமையாக சேதமடைந்த நிலையிலிருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப்ப பணிகளுக்காக நிதி விடுவிக்கும் போது உரிய நியமங்களுக்கமைய பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளமைக்கான விதப்புரைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்கான பணக் கொடுப்பனவுகளின் போது வேறு எந்த நிறுவனங்களிடமிருந்து விதப்புரைகள் பெறப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி வீதி நிர்மாணிப்பு தொடர்பாக முறையான விசாரணையொன்றை நடத்துவதற்கும் அவ்வீதியை சீரான நிலைக்கு கொண்டுவருவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0432/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) ஒரு நாட்டின் பணவீக்கத்தைக் கணிப்பிடும் அதிகாரசபை எதுவென்பதையும்,

(ii) இலங்கையில் கடந்த 15 வருடங்களில் வருடம் ஒன்றிற்கான பணவீக்க வீதம் எவ்வளவு என்பதையும்,

(iii) ஒவ்வொரு வருடத்தின் பணவீக்கத்திற்காகவும் ஏற்பாடு செய்த பின்னர், 1995 இல் இருந்த ரூபா 1,000 இன் இன்றைய உண்மைப் பெறுமானம் எவ்வளவு என்பதையும் (1995 இல் இருந்த ரூபா. 1000.00 இன் இன்றைய கொள்வனவுச் சக்தி)

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) நாட்டின் பொருளாதாரத்திற்கு பொறுப்பற்ற வழிகாட்டுதல்களை வழங்கப் பொறுப்பாகவிருந்த ஆட்களின் பெயர்களை அவர் குறிபப்பிடுவாரா?

(இ) இந்தியா, பாக்கிஸ்தான், மாலைதீவு, பூட்டான், நேபாளம், சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்ற நாடுகளின் கடந்த 5 ஆண்டுகளுக்கான பணவீக்கம் எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், என்?

0535/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், சியம்பலாண்டுவ - பொத்துவில் - அக்கரைப்பற்று வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல் , வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0791/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் முலட்டியன வலயக் கல்வி காரியாலயத்திற்குரிய முலட்டியன கோட்டக்கல்வி அலுவலகத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) இப்பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்,

(iii) இப்பாடசாலைகளில் தற்போது மூடப்பட்டுள்ள அல்லது மூடுவதற்காக தீர்மானிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iv) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கோட்டத்தில் ஆசிரியர் மிகை நிலவுகின்ற பாடசாலைகள் உள்ளனவா என்பதையும்,

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) ஆசிரியர் மிகை நிலவுகின்ற பாடங்கள் யாவையென்பதையும்,

(iv) ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடங்கள் யாவையென்பதையும்,

(vi) இவ்வாசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(vii) ஆமெனில், இதற்காக எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்,

அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0834/ ’10

கௌரவ அக்கில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(ஆ) ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் பெறுகின்ற புள்ளிகளுக்கிணங்க தரம் 6 இல் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்ற முதல் 50 பாடசாலைகளில், 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட புலமைப்பரிசில் பரீட்சைகளில் சித்தியெய்திய மாணவர்களுக்காக 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்காக ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அனைத்துப் பாடசாலைகளிலும் அல்லது ஒருசில பாடசாலைகளில் 2009 ஆம் ஆண்டில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்காக 2010 ஆம் ஆண்டில் தரம் 6 இல் ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பார்க்கிலும், 2010ஆம் ஆண்டில் சித்தியடைந்த மாணவர்களுக்காக 2011 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறு குறைவடைந்திருப்பின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்,

(iii) தரம் 6 இன் வெற்றிடங்களின் எண்ணிக்கை குறைவடைந்திருப்பின், குறைந்தபட்சம் 2010 இல் ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையை 2011 ஆம் ஆண்டிலும் ஒதுக்கிக் கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iv) இலவசக் கல்விக் கொள்கையை உறுதிப்படுத்துவதற்காக புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்காக நாட்டின் பிரபல்யமான பாடசாலைகளில் ஒதுக்கப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையை வருங்காலத்தில் குறைக்காமல் பேணிவர மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0904/ '10

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு ,— (1)

(அ) (i) இலங்கையின் இராணுவம், கடற்படை மற்றும் விமானப் படைகளுக்கான ஆயுதங்களையும் ஏனைய உபகரணங்களையும் கொள்வனவு செய்கின்ற போது நடைபெற்றுள்ளதாகக் கூறப்படுகின்ற மோசடிகள் சம்பந்தமாக விசாரணைகளை நடத்துவதற்காக உயர் நீதிமன்ற நீதிபதி கௌரவ திருமதி சிரானி திலகவர்தனவின் தலைமையிலான ஆணைக்குழுவொன்று அதிமேதகு சனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளதா என்பதையும் ,

(ii) ஆமெனில், மேற்படி ஆணைக்குழு நியமிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்,

(iii) மேற்படி ஆணைக்குழுவில் அங்கத்துவம் வகித்தவர்கள் யாரென்பதையும் ,

(iv) மேற்படி ஆணைக்குழுவின் அறிக்கை அதிமேதகு சனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஆணைக்குழுவின் விடயப் பரப்பு யாதென்பதையும்,

(ii) அதில் உள்ளடக்கப்பட்ட கால எல்லை யாதென்பதையும்,

(iii) மேற்படி ஆணைக்குழுவின் அறிக்கையின் படி மோசடிகள் இனங்காணப் பட்டிருப்பின் அவை யாவையென்பதையும்,

(iv) மேற்படி அறிக்கையை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) (i) மேற்படி அறிக்கையின் பிரகாரம் மோசடிகள் சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டியவர்கள் இனங்காணப்பட்டுள்ளனரா என்பதையும்,

(ii) ஆமெனில் அவர்கள் யாரென்பதையும்,

(iii) மேற்படி நபர்களுக்கு எதிராக தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள சட்ட ரீதியிலான அல்லது ஒழுக்காற்று ரீதியிலான நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(iv) அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனில் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா ?

(ஈ) இன்றேல், ஏன்?

0927/ '10

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— போக்கு வரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத பாதைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்துக்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த செலவினம் யாதென்பதையும்,

(ii) அந்த மொத்தச் செலவினத்தில் உள்நாட்டிலிருந்து பெறப்படும் தொகை யாதென்பதையும்,

(iii) வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் தொகை யாதென்பதையும்,

(iv) அந்தக் கருத்திட்டத்திற்கு நிதி கிடைக்கும் வழிகள் யாவையென்பதையும்,

(v) மொத்தச் செலவினத்தில் கடனாகக் கிடைக்கும் தொகை யாதென்பதையும்,

(vi) கடன் தொகைகளை வழங்கும் நாடுகள், குறிப்பிட்ட வட்டி வீதங்கள் மற்றும் கடனை அடைக்கும் கால எல்லைகள் யாவையென்பதையும்,

(vii) முழுமையான கருத்திட்டத்தையும் பூர்த்தி செய்ய எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இந்தக் கருத்திட்டத்தின் பணிகளுக்காக ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் விதி முறை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0968/ '10

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெதுறு ஓயா நீர்த்தேக்க கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்,

(ii) இத்திட்டத்தின் கீழ் நீர் வழங்கப்படும் பிரதேசங்கள் யாவையென்பதையும்,

(iii) இத்திட்டத்தின் கீழ் நீர்மின்சக்தி நிலையமொன்று நிர்மாணிக்கப்படுமா என்பதையும்,

(iv) ஆமெனில், அதன் பிறப்பாக்க இயலளவு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) யாப்பஹுவ தொகுதியில் காணப்படும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான குளங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அக்குளங்களுக்கு மேற்படி திட்டத்தின் கீழ் நீர் வழங்கப்படுமா என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1007/ '10

கௌரவ அகில விராஜ் காரியசவம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க பாடசாலை முறைமையில் உள்ள பதில் அதிபர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) பதில் அதிபர்கள் உள்ள பாடசாலைகளில், அதிபர்களாக கடமையாற்றுவதற்கான தகைமைகளைக் கொண்ட கல்வி நிர்வாக சேவையில் சித்தியடைந்துள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) அதற்கு மேலதிகமாக, மேற்படி பாடசாலைகளில் அதிபர் பதவிகளை வகிப்பதற்கு தகைமையுள்ள அதிபர் தரங்களில் சித்தியடைந்துள்ள அதிபர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) மேற்படி அதிபர்கள் குறித பதவிகளுக்கு நியமனம் செய்யப்படாமைக்கான காரணங்கள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நாட்டிலுள்ள இசுறு பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) நவோதய பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) மேற்படி பாடசாலைகளுக்கு கடந்த 5 வருடங்களில் ஒதுக்கப்பட்ட நிதித்தொகை தனித்தனியே எவ்வளவு என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) வடமேல் மாகாண சபையின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற பாடசாலைகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள பணியாள் தொகுதி, ஒவ்வொரு பதவிக்கும் அமைய தனித்தனியே யாதென்பதையும்,

(ii) அவ்வாறு ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பாடசாலைகள் எவை என்பதையும்,

(iii) ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யும் நடைமுறை எது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0126/ ‘10

கௌரவ சஜித் பிரேமதாச,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தெங்கு அபிவிருத்திச் சபை 6 வலயங்கள் அடிப்படையில் அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) இந்த 6 வலயங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் 12 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கான கடமைகளைச் செய்வதன் மூலம் தெங்கு விவசாயிகளின் தேவைகள் உரியவாறு நிறைவேற்றப்படுகின்றன என அவர் திருப்தியடைகின்றாரா?

(இ) இந்த உத்தியோகத்தர்களை புதன்கிழமைகளில் மாத்திரமே சந்திக்க முடியும் என்பதை அவர் அறிவாரா?

(ஈ) இந்த மாவட்டத்தில் தெங்கு செய்கை கருத்திட்டங்களை முறையாக நடைமுறைப் படுத்துவதற்கு இந்த நிலமை இடையூறாக இருக்கின்றது என்பதை அவர் அறிவாரா?

(உ) இந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அம்பாந்தோட்டை மாவட்டத்திற்காக தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள 6 வலயங்களை 10 வலயங்களாக அதிகரிக்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஊ) இன்றேல், என்?

0649/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கட்டுனாயக்க அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணம் 2000ஆம்ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு பின்பு இரத்துச் செய்யப்பட்டதா என்பதையும்,

(ii) எப்போது நிர்மாணம் நிறுத்தப்பட்டது என்பதையும்,

(iii) அது நிறுத்தப்பட்டபோது, ஏற்பட்டிருந்த செலவினம் எவ்வளவென்பதையும்,

(iv) இவ்வதிவேக நெடுஞ்சாலையைப் பூர்த்தி செய்வதற்கு ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட செலவினம் எவ்வளவு என்பதையும்,

(v) ஒப்பந்தகாரர்களின் பெயர்கள் என்ன என்பதையும்,

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இக் கருத்திட்டம் மீளத் தொடங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது எப்போது மீளத் தொடக்கப்பட்டது என்பதையும் நிர்மாணப்பணிகள் பூர்த்தியடையவுள்ள திகதியையும்,

(iii) மீளத் தொடங்கியதற்கான செலவினம் எவ்வளவு என்பதையும்,

(iv) தற்போதைய ஒப்பந்தக்காரரின் பெயர்கள் என்ன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) செலுத்தப்பட்ட தண்டங்கள் உட்பட கருத்திட்டதின் மொத்தச் செலவினம் எவ்வளவு என்பதையும்,

(ii) இக் கருத்திட்டத்திற்காக பெறப்பட்ட கடனின் வட்டி வீதம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0792/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் முலட்டியன வலயக் கல்வி காரியாலயத்திற்குரிய கம்புறுபிட்டிய கோட்டக்கல்வி அலுவலகத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) இப்பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்,

(iii) இப்பாடசாலைகளில் தற்போது மூடப்பட்டுள்ள அல்லது மூடுவதற்காக தீர்மானிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iv) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கோட்டத்தில் ஆசிரியர் மிகை நிலவுகின்ற பாடசாலைகள் உள்ளனவா என்பதையும்,

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iv) இவ்வாசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(v) ஆமெனில், இதற்காக எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0918/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சேனானிகல பிரசேத்தில் குடியமர்த்துவதற்கு தீர்மானித்துள்ள பழங்குடிக் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இற்றைவரை குடியமர்த்தியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) மேற்படி குடும்பங்களுக்குச் சொந்தமான ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) ஒவ்வொரு குடும்பத்திற்கும் எவ்வளவு காணி வழங்கப்படுவதற்கு விதத்துரைக்கப்பட்டுள்ளதென்பதையும்,

(v) இற்றைவரை இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அல்லது வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள காணியின் அளவு எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பழங்குடிக் குடும்பங்களுக்காக சேனானிகல பிரதேசத்தில் வழங்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள காணிகளை இவர்களுக்கு பெற்றுக்கொடுக்காமல் இருப்பதற்கான வேலைத்திட்டமெதுவும் உள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0928/ '10

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மத்தல புதிய விமான நிலைய கருத்திட்டத்துக்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த செலவினத்தில் உள்நாட்டிலிருந்து ஈட்டிக் கொள்ளும் தொகை யாதென்பதையும்,

(ii) வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் தொகை யாதென்பதையும்,

(iii) அந்தக் கருத்திட்டத்திற்கு நிதி கிடைக்கும் வழிகள் யாவையென்பதையும்,

(iv) மொத்தச் செலவினத்தில் கடனாகக் கிடைக்கும் தொகை யாதென்பதையும்,

(v) கடன் தொகைகளை வழங்கும் நாடுகள், குறிப்பிட்ட வட்டி வீதங்கள் மற்றும் கடனை அடைக்கும் கால எல்லைகள் யாவையென்பதையும்,

(vi) முழுமையான கருத்திட்டத்தையும் பூர்த்தி செய்ய எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இந்தக் கருத்திட்டத்தின் பணிகளுக்காக ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் விதி முறை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0969/ '10

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மொரகஹகந்த நீர்த்தேக்க கருத்திட்டத்தின் கீழ் நீர் வழங்கப்படும் பிரதேசங்கள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இத்திட்டத்தின் கீழ் தம்புள்ளை ஊடாக மீ ஓயா மூலம் யாப்பஹுவ மற்றும் கல்கமுவ பிரதேசங்களுக்கு நீரைக்கொண்டு செல்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த தென்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(இ) யாப்பஹுவ மற்றும் கல்கமுவ பிரதேசங்களுக்கு நீரைப் பெற்றுக்கொள்வதற்கு வேறு வழிமுறையொன்று சமர்ப்பிக்கப்படுமா என்பதனை அவர் குறிப்பிடுகிறாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

## (2011, ஏப்பிறல் 05, செவ்வாய்க்கிழமை)

0222/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகள் உள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனின், ஒவ்வொரு காணியினதும் பெயர், பரப்பளவு, அமைந்துள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் இயல்பு யாதென்பதையும்,

(iii) ஒவ்வொரு காணியினதும் வருடாந்த வருமானம் எவ்வளவென்பதையும்,

(iv) அக்காணிகளின் உரிமை சட்டரீதியாக நபர்களுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) ஆமெனின், காணி ஒப்படைக்கப்பட்ட விடயம் மற்றும் அடிப்படை யாவை என்பதையும்,

(vi) காணி கிடைக்கப்பெற்றவர்கள் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, ஒப்படைத்த திகதி, காணியின் பரப்பளவு கால எல்லை யாவை என்பதையும்,

(vii) ஒவ்வொரு காணியிலிருந்தும் ஆணைக்குழுவுக்கு கிடைக்கும் வருமானம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகள் சட்ட ரீதியிலல்லாத விதத்தில் நபர்கள் அல்லது நிறுவனங்களினால் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதையும்,

(ii) ஆமெனின், அவர்களது பெயர்கள், பயன்படுத்தப்படும் காணியின் பரப்பளவு மற்றும் கால வரையறை எவை என்பதையும்,

(iii) இவை தொடர்பில் எடுத்த நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலை என்னவென்பதையும்,

(iv) ஆரம்பத்திலும், தற்போதும் ஆணைக்குழுவிற்கு சொந்தமாகவுள்ள காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்,

(v) ஆரம்பத்தில் இருந்த காணிகளின் பரப்பளவிலிருந்து பிறருக்கு ஒப்படைக்கப்பட்ட காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்,

(iv) உடமையை ஒப்படைக்கப்பட்டவர்களின் பெயர், முகவரி, காணியின் பரப்பளவு யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0672/ '10

கௌரவ அநுர திசாநாயக்க,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கடந்த 10 ஆண்டுகளினுள் கமத்தொழில் தேவைகளுக்காக,

(i) அரச மற்றும் தனியார் துறைமூலம் இறக்குமதி செய்யப்பட்டுள்ள உரத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி இரு தரப்பாலும் இறக்குமதி செய்யப்பட்ட ஒவ்வொரு உர வகையின் அளவுகள், இறக்குமதி செய்த நாடுகள் மற்றும் விலைகள் வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0673/ '10

கௌரவ அநுர திசாநாயக்க,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கடந்த 10 வருடங்களில் விவசாய நடவடிக்கைகளுக்காக,

(i) அரச மற்றும் தனியார் துறையினரால் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த உரத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி உற்பத்தி செய்யப்பட்ட உரத்தின் அளவு ஒவ்வொரு உர இனம் மற்றும் உறபத்தி செய்யப்பட்ட துறைகளுக்கமைய வெவ்வேறாக வருடாந்த அடிப்படையில் யாவையென்பதையும்,

(iii) வருடாந்தம் அரச மற்றும் தனியார் துறையினரால் உற்பத்திச் செய்யப்பட்ட மொத்த உரத்தின் சந்தைப்பெறுமதி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0675/ '10

கௌரவ அநுர திசாநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கடந்த 10 வருடங்களில்,

(i) அரச மற்றும் தனியார் துறையின் தலையீட்டில் வருடாந்தம் விவசாயத்துடன் தொடர்புடையதாக இறக்குமதி செய்யப்பட்ட விதைகளின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்டவாறு இறக்குமதி செய்யப்பட்ட, ஒவ்வொரு விதை வகையினதும் அளவு, பெறுமதி, இறக்குமதி செய்யப்பட்ட நாடுகள் மற்றும் விலை மட்டங்கள், அரச மற்றும் தனியார் துறைக்கு ஏற்பவும் வருடாந்த அடிப்படையிலும் வெவ்வேறாக யாவையை என்பதையும்,

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0676/ '10

கௌரவ அநுர திசாநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கடந்த 10 வருடங்களில்,

(i) வருடாந்தம் அரச மற்றும் தனியார் துறை மூலம் கமத்தொழிலுக்காக உற்பத்தி செய்யப்பட்ட ஒவ்வொரு விதை வகையின் அளவுகள் மேற்படி இரு துறைகளுக்கமைய தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி விதைகளின் சந்தைப் பெறுமதி வருடாந்த அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0858/ '10

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மேல், சப்பிரகமுவா, வடமேல், மத்திய, ஊவா, வடமத்திய, கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் மத்திய அரசு மற்றும் மாகாண சபைக்குரிய பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு நிலுவைச் சம்பளங்கள் செலுத்தப்பட இருக்கின்றதா என்பதை அவர் ஒவ்வொரு மாகாணத்துக்கும் அமைய வெவ்வேறாக குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அல்லது நிலுவைச் சம்பளங்கள் செலுத்தப்பட இருப்பின் 2010.01.01 ஆந் திகதியாகும் போது, அந்தந்த மகாகாண அடிப்படையில் ஆசிரியர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவைப் பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்படி நிலுவசைச் சம்பளத்தை செலுத்துவதற்கு அரசினால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) அவ்வாறு ஒதுக்கப்படாவிடின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) நிலுவைச் சம்பளங்கள் செலுத்தாமையினால் மேற்படி ஆசிரியர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ள தென்பதையும்,

(ii) அவ்வாறாயின், மேற்படி ஆசிரியர்களுக்கு எத்தினத்தில் நிலுவைச் சம்பளம் செலுத்தப்படும் என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0909/ '10

கௌரவ எம். ரீ. ஹசன் அலி,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சம்மாந்துறை, இலக்கம் 3, எம்.பீ.சீ.எஸ். ஒழுங்கையில், 343/2 இலக்க முகவரியில் வதியும், திரு.ஏ.எம்.இஸ்மயில் (உ.பொ.கா. 20302) சம்மாந்துறை பொலிஸ் நிலையத்திலிருந்து பொத்துவில் பொலிஸ் நிலையத்திற்கு இணைக்கப்பட்டு சேவையில் ஈடுபட்டிருந்துபோது பாம்பு தீண்டியதால் சேவைக்கு சமூகமளிக்க முடியாமையை அறிவிக்க தாமதமானதால் இவர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டார் என்பதையும்,

(ii) இவரை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளுமாறு சமர்ப்பித்த மேன்முறையீடு தொடர்பிலான விசாரணை தற்போது முற்றுப் பெற்றுள்ளதுடன் அம்பாறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரினால் எஸ்/2/1/380/09 இலக்கமும் 2009/06/05 திகதியும் கொண்ட கடிதத்தின் மூலம் கிழக்கு பிராந்திய (தெற்கு) பிரதி பொலிஸ் மா அதிபருக்கு திரு. இஸ்மயிலை சேவையில் மீளமர்த்துமாறு எழுத்து மூல விதப்புரை வழங்கப்பட்டிருந்தும் இற்றைவரை இவர் சேவையில் மீளமர்த்தப்படவில்லை என்பதையும்,

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், சேவையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த காலத்தில் எந்தவித குற்றச் செயல்களிலோ அல்லது பயங்கரவாத நடவடிக்கைகளிலோ ஈடுபடாமல் நன்நடத்தையுடன் நடந்துகொண்ட திரு. இஸ்மயிலை 1998 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வருமாறு மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2011, ஏப்பிறல் 06, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0228/ '10

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்கல்லை வலயக் கல்விக் காரியலயத்திற்குட்பட்ட பெலிஅத்த கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் பரிபாலிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைளின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலைகளில் தற்போது மூடப்பட்டுள்ள அல்லது மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கோட்டத்திற்குரிய பாடசாலைகளில் மிகையான ஆசிரியர்கள் உள்ளனரா என்பதையும்,

(ii) அவ்வாறான பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iv) பற்றாக்குறை நிலவுவது எந்தப் பாடங்களுக்கு என்பதையும்,

(v) இவ்வாறு ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(vi) அவ்வாறாயின் அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0444/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) கடந்த ஐந்து வருடங்களிலே தோற்றுப்போன நிதிக் கம்பனிகளாக அறிவிக்கப்பட்ட நிதிக்கம்பனிகளின் மொத்த எண்ணிக்கையை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) வைப்பாளர்களைப் பாதுகாப்பது இலங்கை மத்திய வங்கியின் பொறுப்பு என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) வைப்பாளரின் பணத்தைப் பெற்றுக்கொண்ட கம்பனிகளால் அப்பணம் திருப்பிச் செலுத்தப்படாத வைப்பாளர்களின் மொத்த எண்ணிக்கையையும்,

(ii) பணம் திருப்பச் செலுத்தத் தவறிய அல்லது கடமை தவறிய கம்பனிகளையும்,

(iii) மத்திய வங்கி தலையிட்டு, எந்தக் கம்பனியும் வங்குரொத்து அடையாது என உறுதியளித்த பின்னரும் 2010.06.01 இல் எவ்வாறு IFC மற்றும் CIFC வைப்பாளர்கள் தம் சேமிப்புக்களை இழந்தார்கள் என்பதையும்

அவர் இச்சபைக்குத் தனித்தனியாகத் தெரிவிப்பாரா?

(ஈ) (i) கம்பனி பணியாளர்களுக்கு என்ன நடந்தது என்பதையும்,

(ii) இந்நிதிக் கம்பனிகளின் வங்கி அறிக்கையிடல் என்று வரும் பொழுது, வேறுபட்ட பணிப்பாளர்களுக்கு வேறுபட்ட நியமங்கள் பிரயோகிக்கப்படுவது ஏன் என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0536/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், பொத்துவில் - பாணம வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல் , வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0559/ '10

கௌரவ அஜித் குமார,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) கடந்த சனாதிபதித் தேர்தலின்போது முன்வைக்கப்பட்ட மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கின் கீழ் "ஓய்வுகால வாழ்க்கைக்கான உறுதுணை" திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்றவர்களுக்கு நிவாரணமாக 2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு 2006 ஆம் ஆண்டு சம்பள முறைக்கு இசைவுறும் விதத்தில் ஓய்வூதியத்தைத் தயாரித்து அடுத்த வரவு செலவுத் திட்டத்திலிருந்து (2010) நடைமுறைப்படுத்துவதாக வாக்குறுதியளிக்கப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2010 வரவு செலவு திட்டத்தில் 2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு 2006 ஆம் ஆண்டு சம்பள முறைக்கு இசைவுறும் விதத்தில் ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி நிவாரணம் 2010, வரவு செலவு திட்டத்தின் மூலம் வழங்கப்படாதிருப்பின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்,

(iv) குறித்த ஓய்வூதிய அதிகரிப்பை பெற்றுக்கொடுக்கும் திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0806/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் அக்குரெஸ்ஸ வலயக் கல்வி காரியாலயத்திற்குரிய வெலிப்பிட்டிய கோட்டக்கல்வி அலுவலகத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) இப்பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்,

(iii) இப்பாடசாலைகளில் நூறு மாணவர்களுக்குக் குறைவாக உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iv) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) நூறு மாணவர்களுக்குக் குறைவாகவுள்ள பாடசாலைகளில் மூடுவதற்காக தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கோட்டத்தில் ஆசிரியர் மிகை நிலவுகின்ற பாடசாலைகள் உள்ளனவா என்பதையும்,

(ii) இப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iv) ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடங்கள் யாவையென்பதையும்,

(v) இவ்வாசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(vi) ஆமெனில், இதற்காக எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்,

அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0880/ '10

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை சட்டக் கல்லூரியின் மொத்த வருமானம் தனித்தனியே எவ்வளவென்பதை அவர் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும்,

(i) விரிவுரைக் கட்டணமாக அறவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்,

(ii) சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சைக்கான விண்ணப்பக் கட்டணமாக அறவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி பரீட்சையின் பரீட்சைக் கட்டணமாக அறவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்,

(iv) வேறு வழிகளில் இலங்கை சட்டக் கல்லூரிக்கு கிடைத்த வருமானம் எவ்வளவென்பதையும்,

(v) இலங்கை சட்டக் கல்லூரியின் செலவினம் எவ்வளவென்பதையும்

தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கை சட்டக் கல்லூரியின் நிதி முகாமைத்துவத்தை ஒழுங்கு முறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவை என்பதையும்,

(ii) 2009 ஆம் ஆண்டுக்கான நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விரிவுரைக்கட்டணங்களை அதிகரிக்காது இலங்கை சட்டக்கல்லூரியின் நடவடிக்கைகளைப் பேணிவர முடியாதாவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0970/ '10

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுங்காவிலிருந்து சோமாவதி ரஜமகாவிகாரை வரையான வீதியை சீராக்குவதற்காக மேன்மைதாங்கிய சனாதிபதி அவர்களின் அங்கீகாரத்திற் கமைய ஒதுக்கப்பட்டிருந்த தொகை எவ்வளவென்பதையும் என்பதையும்,

(ii) மேற்படி வீதியை புனரமைப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அந்நிதியை நிர்வகித்த அதிகாரசபை அல்லது திணைக்களம் யாதென்பதையும்,

(ii) அந்நிதியை நிர்வகிப்பதற்காக நியமிக்கப்பட்ட அலுவலர்கள் யாவர் என்பதையும்,

(iii) தற்போது அந்நிதியிலிருந்து மேற்படி பாதையை சீராக்குதவற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி நிதியை நிர்வகிப்பதில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதா என்பதையும்,

(v) ஆமெனில், அது தொடர்பாக அமைச்சு மேற்கொண்ட விசாரணையின் அறிக்கையை சர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0988/ '10

கௌரவ ஜோன் அமரதுங்க,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க ஊழியர்களுக்கு வீடு வழங்குவதற்காக "நில செவன" எனும் வீடமைப்புத் திட்டத்தை ராகம நகர்ப் பிரதேசத்தில் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்,

(iii) உத்தேச வீடமைப்பு திட்டம் மூலம் நிர்மானிக்க திட்டமிடப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) தற்போது மேற்படி கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பின் இதுவரை நிர்மாணித்து முடிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(v) மேற்படி வீடமைப்புத் திட்டத்தின் வேலைகளை பூர்த்தி செய்ய உத்தேசித்துள்ள திகதி என்னவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், என்?

0242/ '10

கௌரவ சஜித் பிரேமதாச, — கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பாந்தோட்டை வலயக் கல்விக் காரியாலயத்திற்குரிய லுணுகம்வெஹெர கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளுக்கும், பொதுவான தேவைகளுக்கும் பற்றாக்குறை நிலவுகிறதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற ஆசிரியர் விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அவற்றிற்குரிய பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) மரத்தளபாடங்களுக்கான தேவை காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(vi) அத்தேவைகள் யாவையென்பதையும்,

(vii) விஞ்ஞான கூடங்கள் மற்றும் நூலகங்கள் அற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(viii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்யத் தேவையான நிதியை அப்பாடசாலை களுக்கு ஒதுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0650/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புதிய உல்லாசப் பிரயாண அபிவிருத்திப் பிரதேசங்களை இனங்காணப்பட்டவை எவை என்பதையும்,

(ii) தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களுள் குச்சவெளி மற்றும் கல்பிட்டியவைச் சேர்ந்த 500 ஏக்கர் பிரதேசமும் உள்ளடங்குகிறதா என்பதையும்,

(iii) இதில் அரசாங்கம் முதலீட செய்த தொகை எவ்வளவு என்பதையும்,

(iv) குறிப்பிட்ட முதலீட்டின் மூலம் இவ்வமைச்சு அதிகரிக்கவுள்ள குறிக்கோள்களையும்,

(v) இதன் மூலமாக உபசரிக்க முயலும் பிரயாணிகளது மட்டம், அவர்களது நாடுகள் என்னவென்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) உல்லாசப் பிரயாண நிதியமொன்று ஸ்தாபிக்கப்பட்டதா என்பதையும்,

(ii) இந்நிதியத்திற்கு அரசாங்கம் பங்களிப்புச் செய்யவுள்ள தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) உள்நாட்டில் 500 மில்லியன் ரூபாய்களை பத்து தனியார் கம்பனிகள் முதலீடு செய்யவுள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில், அக் கம்பனிகளது பெயர்கள் என்னவென்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0660/ '10

கௌரவ அஜித் குமார,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) திரு. சுமனசேன ராமசிங்ஹ தென்மாகாண சுகாதார அமைச்சின் ஆயுர்வேத திணைக்களத்தில் சேவைக்குச் சேர்ந்த பதவி மற்றும் திகதி, சேவைக்காலம், ஓய்வு பெற்ற திகதி மற்றும் அத்தினத்தில் வகித்த பதவி யாதென்பதையும்,

(ii) இவர் பெற்றுள்ள சேவை நீடிப்புக்களின் எண்ணிக்கை மற்றும் சம்பந்தப்பட்ட வருடங்கள் யாவையென்பதையும்,

(iii) சேவை நீடிப்பினை விதந்துரைத்த உத்தியோகத்தரின் பெயர், பதவி மற்றும் முகவரி யாதென்பதையும்,

(iv) சேவை நீடிப்பின் பெருட்டு பூர்த்தி செய்ய வேண்டிய அளவு கோல்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) திரு. ராமசிங்ஹ பதவிநிலைத் தரத்திற்கு உள்வாங்கப்பட்ட திகதி யாதென்பதையும்,

(ii) பதவிநிலைத் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரொருவருக்கு உரித்தாகும் சிறப்புரிமைகளும் வசதிகளும் யாவையென்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) (i) திரு. ராமசிங்ஹவின் சேவைக்காலத்தில் ஏதேனும் தவறுக்கான குற்றச்சாட்டுப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது சம்பந்தமாக ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்,

(iii) இவர் ஏதேனும் தவறுக்குள்ளாகி தண்டனை பெற்றுள்ளாரா என்பதையும்

இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) திரு. ராமசிங்கஹவுக்கு ஓய்வூதியம் வழங்க நியமன அதிகாரியினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்,

(ii) இதனோடு தொடர்புடைய சட்டமுறையான நிலைமை யாதென்பதையும்,

(iii) நிருவாக ரீதியான தவறு காரணமாக திரு. ராமசிங்ஹவின் ஓய்வூதியத்தை தயாரித்தல் தாமதித்திருப்பின், மேற்படி ஓய்வூதியம் தயாரித்து வழங்கப்படுகின்ற கால வரையறை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0807/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் அக்குரெஸ்ஸ வலயக் கல்வி காரியாலயத்திற்குரிய அக்குரெஸ்ஸ கோட்டக்கல்வி அலுவலகத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) இப்பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்,

(iii) இப்பாடசாலைகளில் நூறு மாணவர்களுக்குக் குறைவாக உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iv) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கோட்டத்தில் ஆசிரியர் மிகை நிலவுகின்ற பாடசாலைகள் உள்ளனவா என்பதையும்,

(ii) இப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iv) ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடங்கள் யாவையென்பதையும்,

(v) இவ்வாசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(vi) ஆமெனில், இதற்காக எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்,

அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0881/ '10

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) சட்டமா அதிபர் திணைக்களத்திலுள்ள,

(i) அரச சட்டவாதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அரச சட்டத்தரணிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) சட்டமா அதிபர் திணைக்களத்தின் பொறுப்புக்களை தாமதமின்றி வினைத்திறனுடன் பேணிவருவதற்குத் தேவையான அரச சட்டவாதிகளின் எண்ணிக்கையும் அரச சட்டத்தரணிகளின் எண்ணிக்கையும் தனித்தனியே எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) சட்டமா அதிபர் திணைக்களத்தில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் எவை என்பதை அவர் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0919/10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(ஆ) (i) பாடசாலைகளுக்காக நூலக மற்றும் இரசாயன ஆய்வுகூட ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் போது கருத்திற் கொள்ளப்படும் அடிப்படை கல்வித் தகைமைகள் யாவையென்பதையும்,

(ii) பாடசாலை பணியாட் தொகுதிகளை உள்ளீர்க்கும் அடிப்படையில் மேற்படி ஊழியர்களின் பதவிப்பெயர் மாற்றப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனில், அப்பதவிப் பெயர் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பாடசாலை பணியாட் தொகுதிகள் உள்ளீர்க்கப்பட்டதனால் ஒப்பீட்டு ரீதியில் பாடசாலைகள் அல்லாத ஏனைய பணியாட் தொகுதிகளை விட அதிகமான கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள நூலக மற்றும் இரசாயன ஆய்வுகூட ஊழியர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளதென்பதையும்,

(ii) இதன் விளைவாக இவர்கள் உள ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும்,

(iii) இவர்களது பதவிகளுக்கான டிப்புளோமா பாடநெறிகளைப் பயிலும்போது சிக்கல்கள் தோன்றியுள்ளன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) ஆமெனில், இவர்களுக்கு ஏற்பட்டுள்ள மேற்படி அநீதியை இல்லாதொழிப்பதற்காக உரிய உள்ளீர்ப்பினை திருத்துவதற்கு அல்லது நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0999/ '10

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலகின் நீர்ப்பாசன விவசாய நாகரிகத்துக்கேற்ப இலங்கைக்கு மிக முக்கிய இடம் உரித்தாவதானல் இந்நிலைமையை எதிர்கால சந்ததிக்கு பெற்றுக்கொடுக்கக் கூடிய வகையில் நீர் மற்றும் நீர்ப்பாசன நூதனசாலையொன்றை நிர்மாணிப்பது பொருத்தமானதென்பதையும்,

(ii) அதனூடாக இலங்கையின் விவசாய மற்றும் நீர்ப்பாசனத் துறையின் வரலாறு தொடர்பாக எதிர்கால சந்ததிக்கு கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும் என்பதையும்,

(iii) மேற்படி நூதனசாலையை நிர்மாணிப்பதனூடாக நீர்ப்பாசன மற்றும் விவசாயத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி நூதனசாலையை நிர்மாணிப்பதை துரிதமாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2011, ஏப்பிறல் 07, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

0237/ ’10

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்காலை வலயக் கல்விக் காரியலயத்திற் குட்பட்ட தங்காலை கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் பரிபாலிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைளின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலைகளில் தற்போது மூடப்பட்டுள்ள அல்லது மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கோட்டத்திற்குரிய பாடசாலைகளில் மிகையான ஆசிரியர்கள் உள்ளனரா என்பதையும்,

(ii) அவ்வாறான பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iv) பற்றாக்குறை நிலவுவது எந்தப் பாடங்களுக்கு என்பதையும்,

(v) இவ்வாறு ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(vi) அவ்வாறாயின் அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0376/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) பால்மா, எரிவாயு, சீனி, பருப்பு, வெங்காயம், உருளைக்கிழங்கு, அரிசி, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், பெற்றோலியம் ஆகிய இறக்குமதிப் பொருட்கள் மீது விதிக்கப்படும் சுங்கவரி மற்றும் ஏனைய சகல விதமான வரிகளையும்,

(ii) கடந்த 10 வருடங்களாக இறக்குமதி செய்யப்பட்ட மேற்படி பொருட்களின் அளவையும்,

(iii) கடந்த 5 வருடங்களாக வரி விதிப்பின் மூலம் ஈட்டப்பட்ட வருமானத்தையும்,

(iv) மேற்படி பொருட்களில் ஏதாவது கடந்த 5 வருடங்களில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டிருப்பின் அவற்றின் அளவை வருடாந்த அடிப்படையிலும்,

(v) கடந்த 5 வருடங்களுக்கான மேற்படி பொருட்களின் வருடாந்த நுகர்வையும்

தனித்தனியாக அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0539/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், போகஹவெவ – புல்மூட்டை வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல் , வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0795/ '10

கௌரவ புத்திக பத்திரண,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) மாத்தறை மாவட்டத்தில் ரஞ்சாகொட தொகுதிக்கான பிறப்பு, இறப்பு பதிவாளர் மற்றும் கந்தபட பத்துவ தொகுதிக்கான விவாக (சாதாரண) மேலதிக பதிவாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்விண்ணப்பங்கள் கோரப்பட்ட திகதி யாதென்பதையும்,

(ii) இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தேவையான தகைமைகள் யாவையென்பதையும்,

(iii) இப்பதவிற்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) விண்ணப்பதாரர்களின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) (i) குறிப்பிட்ட பதவிக்கான நேர்முகப்பரீட்சை இதுவரை நடாத்தப்பட்டுள்ளதா என்பதைம்,

(ii) இந் நேர்முகப் பரீட்சையில் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பெற்ற புள்ளிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(iii) நேர்முகப் பரீட்சையில் தகுதிபெற்ற ஒருவர் தற்போது இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரா என்பதையும்,

(iv) அவ்வாறாயின், அவரின் பெயர் யாதென்பதையும்,

(v) இன்றேல், தகுதிபெற்ற ஒருவரை இதுவரை நியமிக்காததற்கான காரணம் யாதென்பதையும்,

(vi) இப்பதவிக்கு ஒருவர் நியமிக்கப்படுவாராயின், அதற்கு தேவைப்படும் காலம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0854/ '10

கௌரவ அஜித் குமார,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010, யூன் 30 ஆம் திகதியளவில் வடமேல் மாகாணத்தில் அறிக்கையிடப் பட்டுள்ள யானைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) 2009 ஆம் ஆண்டிலும் 2010, யூன் 30 வரையிலும் வடமேல் மாகாணத்தில் யானை மனித மோதல்கள் காரணமாக இறந்துள்ள யானைகளின் எண்ணிக்கையும் மனிதர்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(iii) இறந்த நபர்களுக்கு இழப்பீடு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) வட மேல் மாகாணத்தில் வனசீவராசி திணைக்களத்தின்,

(i) பணியாட்டொகுதியினர் மற்றும் கடைமை நிலையங்கள் எவ்வளவென்பதையும்,

(ii) பணியாட்டொகுதியினருக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) பணியாட்டொகுதியினருக்காக 2009/2010 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) வடமேல் மாகாணத்தில் யானை மனித மோதல்களை குறைப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0911/ '10

கௌரவ அஜித் பி. பெரேரா,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010, செத்தெம்பர் மாதம் தென்கொரியாவில் இடம்பெற்ற சம்பியன்ஸ் லீக் 20 — 20 கிரிக்கெட் போட்டியில் இலங்கையை பிரதிநிதிப்படுத்திய "வயம்ப" அணிக்கு அனுசரணை வழங்கியது Musli Power X – tra, எனும் வணிகப் பெயரைக் கொண்ட ஒரு நிறுவனமா என்பதையும் ,

(ii) அந்த நிறுவனம் யாது என்பதையும்,

(iii) மேற்படி நிறுவனம் இலங்கை கிரிக்கெட்டிற்கு செலுத்திய பணத்தொகை யாது என்பதையும்

அவர் இச்சைபக்கு அறிவிப்பாரா?

(ஆ) Musli Power X – tra வணிகப் பெயரின் கீழ் விற்பனை செய்யப்படுவது பாலியல் உணர்ச்சியைத் தூண்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் ஓர் உற்பத்தியா என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அவ்வாறாயின் அந்த உற்பத்தியோடு தொடர்புடைய இலச்சினையை “வயம்ப” கிரிக்கெட் அணியின் போட்டி நிகழ்வுகளின் மத்தியில் பிரச்சாரம் செய்தது மேற்படி விளையாட்டு வீரர்களினதும் நாட்டினதும் நற்பெயருக்கு உகந்ததல்ல என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) மேற்படி போட்டிக்கான அனுசரணையாளர்களைத் தேர்ந்தெடுக்கையில், பொறுப்பின்றிச் செயற்பட உத்தியோகத்தர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0238/ ‘10

கௌரவ சஜித் பிரேமதாஸ, — கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பாந்தோட்டை வலயக் கல்விக் காரியாலயத்திற்குரிய அம்பலாந்தோட்டை கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளுக்கும், பொதுவான தேவைகளுக்கும் பற்றாக்குறை நிலவுகிறதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற ஆசிரியர் விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அவற்றிற்குரிய பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) மரத்தளபாடங்களுக்கான தேவை காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(vi) அத்தேவைகள் யாவையென்பதையும்,

(vii) விஞ்ஞான கூடங்கள் மற்றும் நூலகங்கள் அற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(viii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்யத் தேவையான நிதியை அப்பாடசாலை களுக்கு ஒதுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0651/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நிதியம் ஆரம்பிக்கப்பட்ட வருடம், அதனை ஸ்தாபித்தவர், அதனை ஸ்தாபித்ததன் நோக்கம் ஆகியவற்றையும்,

(ii) தற்போது அதன் மூலதன நிதிக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்,

(iii) இதனை ஆரம்பித்தது முதல் இற்றை வரை இந்நிதியத்திற்கு மூலதனமாக எவ்வளவுத் தொகை சேர்க்கப்பட்டது என்பதை வருடாந்த அடிப்படையிலும்,

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இந்நிதியத்தின் தற்போதைய நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் பெயர்களையும்,

(ii) ஆரம்பம் முதல் இற்றை வரை மகாபொல நம்பிக்கை நிதியத்தைப் பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்ட சகல காணிகளின் பெயர்களையும்,

(iii) ஒவ்வொரு காணியினதும் கொள்வனவு விலை மற்றும் தற்போதைய சந்தை விலை ஆகியவற்றை தனித்தனியாகவும்,

(iv) மேற்படி காணிகளில் ஏதாவது விற்பனை செய்யப்பட்டதா என்பதையும்,

(v) ஆம் எனில், அவை விற்பனை செய்யப்பட்டமைக்கான நோக்கம் ஒவ்வொரு காணியினது விலை ஆகியன என்னவென்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) மகாபொல புலமைப்பரிசில் நிதியத்தின் மூலமாக தற்போது பயனடையும் மாணவர்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

(ii) மகாபொல புலமைப்பரிசில் பெறும் ஒருவருக்கு வழங்கப்படும் மாதாந்த உதவித்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சமைபயில் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0540/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், திருகோணமலை - திருக்கொண்டுயாடுமடு வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாது என்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப் பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல், வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0800/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தற்போது இயங்கி வரும் தேசிய கல்வியயற் கல்லூரிகள் பதினேழில் கல்வியில் டிப்ளோமா கற்கை நெறிமற்றும் உள்ளகப் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவுசெய்து, இதுவரை ஆசிரியர் நியமனம் பெறாத அனேகமான ஆசிரிய மாணவ/மாணவிகள் உள்ளனரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2009 ஆம் ஆண்டு திசெம்பரிலிருந்து இற்றை வரை, ஆசிரியர் நியமனம் பெறாதுள்ள குறித்த டிப்ளோமாதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) இந்த ஆசிரிய மாணவ/மாணவிகளுக்கு நியமனங்களை வழங்குவதற்கான செயல் முறையொன்று தற்போது ஏறப்டுத்தப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iii) அவ்வாறாயின் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் நியமனங்கள் வழங்கவிருக்கும் ஆசிரிய மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(iv) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் குறித்த நியமனங்கள் வழங்கப்படும் திகதிகள் யாவையென்பதையும்,

(v) குறித்த நியமனங்களை வழங்குவதற்காக தற்போது நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(vi) அவ்வாறாயின் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்கென ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(vii) குறித்த நிதி ஒதுக்கப்பட்ட செலவினத்தலைப்பு மற்றும் செயல் முறை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0914/ '10

கௌரவ அஜித் பி. பெரேரா,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை கிரிக்கெட் சமர்செட் என்டர் டெயின்மன்ட் வென்சர்ஸ் (சிங்கப்பூர்) தனியார் கம்பனியுடன் (Somerset Entertainment Ventures, (Singapore) Rt. Ltd) உடன்படிக்கையொன்றை செய்து கொண்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின் மேற்படி உடன்படிக்கை செய்துகொண்ட திகதி மற்றும் அதற்கு ஏற்புடைய விடயங்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி உன்படிக்கையின் பெறுமதி எவ்வளவென்பதையும்,

(iv) அவ்வுடன்படிக்கை சபாபீடத்திற்குச் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்,

(v) இன்றேல், அதற்கான கரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்கூறப்பட்ட கம்பனி,

(i) இலங்கையில் பதிவு செய்யப்பட்டிருப்பின், பதிவிலக்கம் யாதென்பதையும்,

(ii) குறித்த கம்பனி வேறொரு நாட்டில் பதிவுசெய்யப்பட்டிருப்பின், பதிவுசெய்யப்பட்ட நாடு, திகதி மற்றும் இலக்கம் யாதென்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி உடன்படிக்கையுடன் சம்பந்தப்பட்ட அறிவித்தலை இலங்கை கிரிக்கெட் தனது இணையத் தளத்தில் மாத்திரம் விளம்பரம் செய்திருந்ததா என்பதையும்,

(ii) குறித்த அறிவித்தல் விளம்பரம் செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்,

(iii) மேற்படி கம்பனி கிரிக்கெட் விளையாட்டுடன் சம்பந்தப்பட்ட உடன்படிக்கைகளை இதற்கு முன்னர் செய்து கொண்டுள்ளதாவென்பதையும்,

(iv) அவ்வாறாயின், அந்தச் சந்தர்ப்பங்கள் யாவையென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0246/ '10

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்காலை வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய பெலிஅத்த கோட்டக் கல்வி காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளில்,

(i) துப்புரவேற்பாட்டு வசதிகள் இல்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்,

(ii) கட்டிடத் தேவைகள் உள்ள பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் தேவையான கட்டிடங்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் கல்வியில் நவோதயம் ஏற்படுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான ஒதுக்கீடுகளை இப்பாடசலைகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iii) ஆமெனில், அது எவ்வளவு காலத்தினுள் என்பதையும்

அவர் குறிப்படுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0654-10

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நெல் சந்தைப்படுத்தல் சபை எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்பதையும்,

(ii) அதனை 1995ல் மூடியமைக்கான காரணத்தினையும்,

(iii) நெல் சந்தைப்படுத்தல் சபையினை ஸ்தாபித்தமையின் குறிக்கோளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கடந்த 4 - 5 வருடங்களில் நெல் சந்தைப்படுத்தல் சபையினால் கொள்வனவுகப்பட்ட நெல்லின் தொன் அளவினையும்,

(ii) நெல் சந்தைப்படுத்தல் சபையினால் வாங்கப்பட்ட நெல்லின் அளவினை சிறுபோகம் மற்றும் பெரும் போகங்களின் போதான உற்பத்தியின் நூற்றுவீதமாகவும்,

(iii) நெல்லின் ஆகக்குறைந்த விற்பனை விலையினை நெல் சந்தைப்படுத்தல் சபையினால் எவ்வாறு அதிகரிக்கக்கூடியதாகவிருந்தது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0801/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படும் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள், விலாசங்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலைகளில் ஆசிரியர் மிகை நிலவும் பாடசாலைகள் யாவையென்பதையும்,

(iv) ஆசிரியர் மிகை நிலவும் பாடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாகைளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகள் யாவையென்பதையும்

(ii) ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடங்கள் யாவையென்பதையும்

(iii) ஆசிரியர் பற்றாக்குறை காணப்படும் பாசாலைகளுக்கு ஆசிரியர்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iv) அவ்வாறாயின், அதற்குத் தேவைப்படும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0920/10

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி ஆலையில் 2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஒரு நாள் தவறான முறையில் மருந்துக் கலவை இடம்பெற்றுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில்,

(i) தவறான முறையில் உற்பத்தி செய்யப்பட்ட மருந்துகள் பாவனையிலிருந்து அகற்றப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) இத் தவறைப் புரிந்தவருக்கு அல்லது புரிந்தவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாதென்பதையும்,

(iii) இது தொடர்பாக ஔடதங்கள் அதிகார சபைக்கு அறிக்கையிடப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இ ச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இத் தவறு இடம்பெற்றதன் பின்னர் உற்பத்தி ஆனவை ஜீ.எம்.பீ. (Good manufacturing practice ) செயன்முறையின் பிரகாரம் துப்புரவு செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) தவறுதலாக இடம்பெற்ற ஔடத உற்பத்தியினால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்படி நட்டத்தை மறைப்பதற்காக உரிய மருந்துகள் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

## 2011, ஏப்பிறல் 08, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0214/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) காலி மாவட்டத்தில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணிகள் உள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, அமைந்துள்ள கிராம சேவையாளர் பிரிவு, மற்றும் காணியின் இயல்பு யாதென்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு காணியினதும் வருடாந்த வருமானம் எவ்வளவு என்பதையும்,

(iv) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) ஆமெனில், மேற்படி காணிகள் எவ்விடயத்திற்காக எவ்வடிப்படையில் கையளிக்கப்பட்டுள்ளது என்பதையும்,

(vi) காணிகளை பெற்றுக்கொண்ட ஆட்கள் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளிக்கப்பட்ட திகதி, காணியின் அளவு மற்றும் கால எல்லை யாதென்பதையும்,

(vii) ஒவ்வொரு காணியிலிருந்தும் ஆணைக்குழுவிற்கு கிடைக்கும் வருமானம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணிகள் சட்டவிரோதமான முறையில் ஆட்கள் அல்லது நிறுவனங்களினால் அனுபவிக்கப்படுகின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், இவர்களின் பெயர், அனுபவித்து வரும் காணியின் அளவு, மற்றும் காலஎல்லை யாதென்பதையும்,

(iii) இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை மற்றும் இதன் தற்போதைய நிலைமை யாதென்பதையும்,

(iv) ஆரம்பத்திலும் தற்போதும் ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(v) ஆரம்பத்தில் காணப்பட்ட காணியிலிருந்து கையளிக்கப்பட்ட காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(vi) உரிமை கையளிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர், முகவரி மற்றும் காணியின் அளவு யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல்,ஏன்?

0247/ '10

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்காலை வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய தங்காலை கோட்டக் கல்வி காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளில்,

(i) துப்புரவேற்பாட்டு வசதிகள் இல்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்,

(ii) கட்டிடத் தேவைகள் உள்ள பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் தேவையான கட்டிடங்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் கல்வியில் நவோதயம் ஏற்படுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான ஒதுக்கீடுகளை இப்பாடசலைகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iii) ஆமெனில், அது எவ்வளவு காலத்தினுள் என்பதையும்

அவர் குறிப்படுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0445/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) இற்றைவரையான ஐந்து வருடங்களில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக சென்றவர்களின் எண்ணிக்கையை வருடாந்த அடிப்படையில் அவர் தெரிவிப்பாரா?

(ஆ) வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக வெளிநாடு செல்பவர்கள் ஒரு காப்புறுதித் திட்டத்தின் மூலம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனில், அத்தகைய காப்புறுதிக் காப்பீடொன்றிற்கு ஒருவரிடமிருந்து எவ்வளவு தொகை அறவிடப்படுகின்றதென்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) கடந்த ஐந்து வருடங்களில் விடுக்கப்பட்ட இழப்பீட்டுக் கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கையை அவர் தெரிவிப்பாரா?

(உ) காப்புறுதிப் பத்திரத்திற்கான கட்டணங்களை செலுத்திய போதும் மக்களுக்கு ஏன் இழப்பீடு கிடைப்பதில்லை என்பதை அவர் விபரிப்பாரா?

(ஊ) இன்றேல், என்?

0678/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாந்தோட்டை சூரியவெவ கிரிக்கெட் விளையாட்டு மைதானம் நிர்மாணிக்கப்படுகின்ற காணியை அரசாங்கம் குத்தகை அடிப்படையில் அல்லது வேறு முறையில் வெளித் தரப்புக்கு ஒப்படைத்துள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறு யாருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதையும்,

(iii) அக்காணி ஒப்படைக்கப்பட்டுள்ள பணத்தொகை, ஒப்படைக்கப்படுள்ள வருடம் மற்றும் காணியின் பரப்பளவு யாதென்பதையும்,

(iv) இந்த விளையாட்டு மைதானம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் அதன் உரிமை ஒப்படைக்கப்படும் தரப்பினர் யாவர் என்பதையும்,

(v) ஒப்படைக்கப்படும் கால எல்லை மற்றும் பணத் தொகையையும்,

(vi) இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற வருடாந்த வருமானத்தையும்

அவர் குறிப்படுவாரா?

(ஆ) (i) மேற்படி விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்குச் செலவாகும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்,

(ii) இப்பணத் தொகை அரசாங்கத்தினால் அல்லது அரச நிறுவனமொன்றினால் செலவிடப்படுகின்றதா அல்லது இலங்கைக் கிரிக்கெட்டினால் அல்லது வேறு நிறுவனத்தினால் செலவிடப்படுகின்றதா என்பதையும்,

(iii) ஆமெனில் ஒவ்வொரு தரப்பினராலும் செலவிடப்பட்டுள்ள தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இந்த விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்கும் அதன் கட்டிட கலைக்கும் ஆலோசனைகளை வழங்குவது யாவர் என்பதையும்,

(ii) விளையாட்டு மைதானம் , விளையாட்டு அரங்கு, இராப்பகல் மின் குமிழ்கள் மற்றும் வருடாந்த பராமரிப்பு என்பவற்றுக்காக செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்படும் பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

அவர் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0802/ '10

கௌரவ புத்திக பத்திரன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தின் அகுரெஸ்ஸ வலயக் கல்விக் காரியாலயத்தின் கீழ் வரும் அகுரெஸ்ஸ கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற பாடசாலைகளில் பொதுக்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுத் தேவைகளில் பற்றாக்குறை காணப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலை முறைமையினுள் உள்ள,

(i) மின்சார வசதியில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) நூல்நிலையம் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) மின்சார வசதியில்லாத ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(v) தளபாடம் தேவையாகவுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(vi) மேற்படி குறைபாடுகள் நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பாடசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு அவர் நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0215/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணிகள் உள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, அமைந்துள்ள கிராம சேவையாளர் பிரிவு, மற்றும் காணியின் இயல்பு யாதென்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு காணியினதும் வருடாந்த வருமானம் எவ்வளவு என்பதையும்,

(iv) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) ஆமெனில், மேற்படி காணிகள் எவ்விடயத்திற்காக எவ்வடிப்படையில் கையளிக்கப்பட்டுள்ளது என்பதையும்,

(vi) காணிகளை பெற்றுக்கொண்ட ஆட்கள் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளிக்கப்பட்ட திகதி, காணியின் அளவு மற்றும் கால எல்லை யாதென்பதையும்,

(vii) ஒவ்வொரு காணியிலிருந்தும் ஆணைக்குழுவிற்கு கிடைக்கும் வருமானம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணிகள் சட்டவிரோதமான முறையில் ஆட்கள் அல்லது நிறுவனங்களினால் அனுபவிக்கப்படுகின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், இவர்களின் பெயர், அனுபவித்து வரும் காணியின் அளவு, மற்றும் காலஎல்லை யாதென்பதையும்,

(iii) இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை மற்றும் இதன் தற்போதைய நிலைமை யாதென்பதையும்,

(iv) ஆரம்பத்திலும் தற்போதும் ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(v) ஆரம்பத்தில் காணப்பட்ட காணியிலிருந்து கையளிக்கப்பட்ட காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(vi) உரிமை கையளிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர், முகவரி மற்றும் காணியின் அளவு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0248/ '10

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பாந்தோட்டை வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய அம்பலாந்தோட்டை கோட்டக் கல்வி காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளில்,

(i) துப்புரவேற்பாட்டு வசதிகள் இல்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்,

(ii) கட்டிடத் தேவைகள் உள்ள பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் தேவையான கட்டிடங்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் கல்வியில் நவோதயம் ஏற்படுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனில் மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான ஒதுக்கீடுகளை இப்பாடசலைகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iii) ஆமெனில் அது எவ்வளவு காலத்தினுள் என்பதையும்

என்பதை அவர் குறிப்படுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0686/ '10

கௌரவ ரவி கருணநாயக்க,— நிதித் திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 செப்டம்பர் 01ஆம் திகதியன்றுள்ளவாறு, இலங்கை அரசாங்கத்தின் தங்க ஒதுக்கத்தில் மத்திய வங்கியினால் ஏலமிடப்பட்ட தொகை யாதென்பதையும்,

(ii) மேற்படி ஏலத்தில் விடப்பட்ட தங்கத்தின் பெறுமதியை ஐ.அ.டொலர்களிலும் இலங்கை நாணயத்திலும் யாதென்பதையும்,

(iii) அரசாங்கத்தினால் தங்கம் என்ன விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டது என்பதையும்,

(iv) பறிமுதல் செய்யப்பட்ட தங்கம் ஏதேனும் இலங்கை மத்திய வங்கி ஒதுக்கத்தில் சேர்க்கப்பட்டதா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த இரண்டு வருடங்களில் அரசாங்கத்திற்குச் சொந்தமான தங்கம் ஏதாவது விற்பனை செய்யப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், தங்கத்தின் விற்பனை விலை எவ்வளவு என்பதையும்,

(iii) இத்தங்க விற்பனை விலைமனுக்கோரல் மூலமா அல்லது ஏலவிற்பனை மூலமா மேற்கொள்ளப்பட்டது என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

0803/ '10

கௌரவ புத்திக பத்திரன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தின் அகுரெஸ்ஸ வலயக் கல்விக் காரியாலயத்தின் கீழ் வரும் மாலிம்பட கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற பாடசாலைகளில் பொதுக்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுத் தேவைகளில் பற்றாக்குறை காணப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலை முறைமையினுள் உள்ள,

(i) மின்சார வசதியில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) நூல்நிலையம் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) மின்சார வசதியில்லாத ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(v) தளபாடம் தேவையாகவுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(vi) மேற்படி குறைபாடுகள் நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பாடசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு அவர் நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0921/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவரது முழுப்பெயர் மற்றும் வயது என்பவை யாவையென்பதையும்,

(ii) இப் பதவிக்கு நியமனம் பெறுவதற்கு முன்னர் இவர் கடமையாற்றிய இடம் மற்றும் பதவி என்பவை யாவையென்பதையும்,

(iii) இவரின் தொழில்சார் அனுபவம் யாதென்பதையும்,

(iv) இவரது மாதாந்தச் சம்பளம் மற்றும் கிடைக்கப்பெறுகின்ற ஏனைய கொடுப்பனவுகள் யாவையென்பதையும்,

(v) இவரை இப்பதவிக்கு நியமனம் செய்த அதிகாரி யார் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0251/ '10

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பாந்தோட்டை வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய திஸ்ஸமஹாராம கோட்டக் கல்வி காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளில்,

(i) துப்புரவேற்பாட்டு வசதிகள் இல்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்,

(ii) கட்டிடத் தேவைகள் உள்ள பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் தேவையான கட்டிடங்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் கல்வியில் நவோதயம் ஏற்படுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான ஒதுக்கீடுகளை இப்பாடசலைகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iii) ஆமெனில், அது எவ்வளவு காலத்தினுள் என்பதையும்

என்பதை அவர் குறிப்படுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0691/ '10

கௌரவ ரவி கருணநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்தி வங்கி தாபிக்கப்பட்டதிலிருந்து இற்றைவரையில் இலங்கையில் வர்த்தக வங்கிகளை நிறுவுவதற்கு விநியோகிக்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கையையும்,

(ii) ஒவ்வொரு பிரதான வங்கியின் கீழும் இயங்கும் கிளைகளின் எண்ணிக்கையினை வெவ்வேறாகவும்,

(iii) மேற்குறிப்பிடப்பட்டுள்ள வங்கிகளின் செலுத்தப்பட்டுள்ள பங்கு மூலதனத்தையும்,

(iv) இன்றுள்ளவாறாக வர்த்தக வங்கிகளுக்குத் தேவைப்படும் பங்கு மூலதனத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) குறிப்பிடப்பட்ட வங்கிகளுள், இலங்கையில் தலைமையகத்தைக் கொண்டுள்ள எவையேனும் வெளிநாட்டு வங்கியொன்றினை வாங்குவதற்கு பணத்தினை வைப்புச் செய்துள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அவ் வங்கியின் பெயரையும் வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பணத்தின் பெறுமதியையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) வர்த்தக வங்கியல்லாத வங்கிகளுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையினையும்,

(ii) இலங்கையில் தற்போது இயங்கும் வர்த்தக வங்கியல்லாத வங்கிகளின் எண்ணிக்கையினையும்,

(iii) அவ்வங்கிகளின் பங்கு மூலதனத்தினையும்,

(iv) வர்த்தக வங்கி அல்லது வர்த்தக வங்கி அல்லாத வங்கி ஏதாவது வங்குரோத்து நிலையை அடைந்துள்ளதா என்பதையும்,

(v) அவ்வாறாயின், அவ்வங்கிகளின் பெயர்களையும் அவற்றின் பணிப்பாளர்களின் பெயர்களையும் அவர் அறியத் தருவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0804/ '10

கௌரவ புத்திக பத்திரன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தின் அகுரெஸ்ஸ வலயக் கல்விக் காரியாலயத்தின் கீழ் வரும் வெலிபிட்டிய கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற பாடசாலைகளில் பொதுக்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுத் தேவைகளில் பற்றாக்குறை காணப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலை முறைமையினுள் உள்ள,

(i) மின்சார வசதியில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) நூல்நிலையம் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளில்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கையையும்,

(iv) மின்சார வசதியில்லாத ஆசிரிய இல்லங்களின் எண்ணிக்கையையும்,

(v) தளபாடம் தேவையாகவுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கையையும்,

(vi) மேற்படி குறைபாடுகள் நிலவுகின்ற பாடசாலைகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பாடசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு அவர் நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0859/ '10

கௌரவ அஜித் குமார,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காலி பஸ் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்டுள்ள செலவு எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி மதிப்பீட்டை தயாரித்த நிறுவனம் யாதென்பதையும்,

(iii) குறித்த மதிப்பீடு மற்றும் கட்டடத்தின் திட்டவமைப்பு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இந்தக் கருத்திட்டத்திற்கு ஏற்புடைய,

(i) ஒப்பந்தக்காரர் அல்லது ஒப்பந்தக்காரர்கள் யாரென்பதையும்,

(ii) ஆலோசனை கம்பனி அல்லது நிறுவனமொன்று இருப்பின் அது யாதென்பதையும்,

(iii) மேற்பார்வை செய்கின்ற நிறுவனம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பஸ் நிலையத்தின் இயல்பு மற்றும் சம்பந்தப்பட்ட கட்டடத்தில் நடத்திச்செல்ல உத்தேசித்துள்ள நிறுவனங்கள் அல்லது தொழில்முயற்சிகள் யாவையென்பதையும்,

(ii) இந்தக் கால கட்டத்தில் வியாபார நிலையங்களை வழங்கும் போது பின்பற்றும் வழிமுறை யாதென்பதையும்,

(iii) பஸ் நிலையம் நிர்மாணிக்கப்படுவதற்கு இணையாக பஸ் நிலையத்தை அண்டிய அத்துடன் காலி நகரின் ஏனைய பிரதேசங்களினின்று வெளியேற்றப்பட்ட நடைபாதை வியாபாரிகள் மற்றும் தற்காலிக வியாபார நிலையங்களைக் கொண்டிருந்தவர்களுக்கு வழங்கும் நிவாரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0922/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 6 வருட காலப்பகுதியில் தரத்தில் குறைந்த மருந்துகளை இறக்குமதி செய்த கம்பனிகளென இனங்காணப்பட்டுள்ள கம்பனிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அக் கம்பனிகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) இந்த ஒவ்வொரு கம்பனியும் தரத்தில் குறைந்த மருந்துகளை இறக்குமதி செய்ததன் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(iv) ஒவ்வொரு கம்பனியும் அரசாங்கத்திற்கு மீளச் செலுத்தியுள்ள பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தரத்தில் குறைந்த மருந்துகளை இறக்குமதி செய்ததாக இனங்காணப்பட்டுள்ள ஒவ்வொரு கம்பனியினதும் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையைச் சேர்ந்தோரின் பெயர்களும் முகவரிகளும் யாவையென்பதையும்,

(ii) இக்கம்பனிகளில் தற்போது கறுப்புப் பட்டியலில் (Black List) இடப்பட்டு தடைசெய்யப்பட்டுள்ள கம்பனிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(iii) அந்த கம்பனிகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iv) மேற்படி தடைசெய்யப்பட்டுள்ள கம்பனிகளிலிருந்தும் 2006 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மீண்டும் மருந்துகளை கொள்வனவு செய்துள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

கௌரவ ரவி கருணாநாயக்க,— சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோர் அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வகித்தல் பொருத்தமானதல்ல,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஒற்றோபர் 08, 2010) “வினைத்திறமை மிக்கதோர் நிர்வாகத்தை மேற்கொள்ளுமுகமாகவும் அமைச்சர்களது செயற்பாடுகளை விமர்சனரீதியாக ஆய்வு செய்வதற்கும் ஏதுவான வகையில் சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோர் எந்தவொரு அமைச்சரவை அமைச்சுப் பதவியையும் வகித்தல் பொருத்தமானதல்லதென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப் பெற்றது. [பா.1/ ‘10]

பா.4/ ‘10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊடகவியலாளர்களுக்கு, அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE) அரசாங்கக் கணக்குக்குழு (PAC) மற்றும் ஆலோசனைக் குழுக்கூட்டங்கள் அனைத்திலும் பிரசன்னமாயிருக்க அனுமதியளித்தல்,— அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE) அரசாங்கக் கணக்குக்குழு (PAC) மற்றும் ஆலோசனைக்குழுக் கூட்டங்களில் இதுபோன்ற கலந்துரையாடல்கள் மிக விளைபயனுடையதாகவும் அர்த்தபுஷ்டியுள்ளதாகவும் வெளிப்படையானதுமாக அமைய ஏதுவாக இருக்கும் என்பதால், ஊடகவியலாளர்களுக்கு அதில் பிரசன்னமாயிருக்க அனுமதியளிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.5/ ‘10

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுயதொழிலாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவிகளை அளித்தல்,— சுயதொழிலாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவியாக அதிகபட்ச கடனாக 2,50,000 ரூபாவை 5% குறைந்த வட்டி வீதத்தில் வழங்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.6/ ‘10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை அழித்துவிடுவது தொடர்பான பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்குதல்,— நாட்டினுள் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் போன்றவற்றின் பாவனை வேகமாக அதிகரித்து வருவதாலும் அவ்வாறான கழிவுப் பொருட்களை பாரதூரமின்றி அகற்றுவதனால் ஏற்படும் பாரியளவு சுற்றாடல் மாசுபடுதல் நிமித்தமும் பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை அழித்துவிடுவது தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.7/ ‘10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச வங்கிகளிலிருந்து கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுதல்,— அரச வங்கியிலிருந்து ரூபா 100 மில்லியனுக்கு மேற்பட்ட கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுவதற்காக சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.8/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,—தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் செயற்படுத்தல்,— பாராளுமன்றத்தில் பிரேரிக்கப்படும் தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பயனுள்ள பங்களிப்பொன்றாக அமைவதற்கு ஏதுவாக அவைகள் ஒரு வருடத்துக்குள் விவாதிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டால் ஆறு மாதங்களுக்குள் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.9/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைத்தல்,— நாட்டில் தேசிய மனப்பாங்கை ஏற்படுத்துமுகமாக பாராளுமன்ற அமர்வு ஆரம்பமாக முன்னரும் ஒத்திவைக்க முன்னரும் பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைக்க வேண்டு மென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.10/ ' 10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பலமான இலங்கை அடையாளத்தை ஏற்படுத்துதல்,— அரச ஆவணங்களில் ஒருவரது சாதியையும் சமயத்தையும் வெளிப்படுத்த வேண்டுமென்ற தேவைப்பாடு பலமான தேசிய அடையாளத்தை ஏற்படுத்துவற்கு தடையாகவும் இடர்ப்பா டகவுமுள்ளதால் இத்தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமென்று இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.11/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தக நோக்கங்களுக்காக சமயத் தலைவர்களின் உருவங்களை பயன்படுத்துவதை தடைசெய்தல்,— சகல சமயங்களும் சமமாக மதிக்கப்படல் வேண்டுமென்பதுடன் புத்தபெருமான், யேசுநாதர், சிவபெருமான், முஹம்மட் நபி (ஸல்) அவர்கள் ஆகியோரின் உருவங்களை வர்த்தக விளம்பரங்களிலோ வேறுவிதமான சமயசார்பற்ற படிவங்களிலோ பயன்படுத்தலை தடைசெய்தலும் வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.12/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்குதல்,— சகலருக்கும் சமமான நியாயத்தை உறுதிப்படுத்துவதற்காக சனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு பலமான சுதந்திர ஊடகவியலை ஏற்படுத்துவதற்கும் நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறை களை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்க வேண்டுமென்று இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது.

பா.13/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கை களுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்தல்,— வறிய மக்களின் அடிப்படை உரிமைகள் மீறுதல், அரசாங்க கொள்கைகளில் உள்ளடக்கம் மற்றும் நடாத்துதல், மாநகர சபைகள் அதிகாரிகளினால் பொதுக் கடமைகள் நிறைவேற்றுதல், சமய உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் மீறுதல் மற்றும் பொதுமக்களை கடனாளிகளாக்குகின்ற அல்லது அவர்களுக்கு மேலதிக பொறுப்புகள் ஏற்படுத்துகின்ற ஊழல்கள் ஆகியவை தொடர்பில் பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.14/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசியல் கட்சிகளினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதி கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பித்தல்,— எல்லா அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினாலும் பெறப்பட்ட வருமானமும் செலவிடப்பட்ட செலவினமும் பற்றிய கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமெனவும் வருடம் தோறும் தேர்தல் ஆணைக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.15/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச அலுவலர்களுக்கு தண்டனை வழங்குதல்,— அரச உயர் அலுவலர்கள் தமது சுதந்திர நிலைமையை அரசியல் மயமாக்கி மற்றும் அவர்கள் முறைகேடாக நடந்தால் அதனால் அவர்கள் குற்றவாளிகளாக கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரங்களை கையளித்து தண்டனை விதிக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.16/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு பெறும் வயதெல்லையை நீடித்தல்,— அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 65 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டால் விசேட திறமையுள்ள அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 70 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.17/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வியைப் பாதுகாப்பதற்காக தரப் பாதுகாப்பு பேரவையொன்றை நிறுவுதல்,— பொறுப்பற்ற முறையில் பல்கலைக்கழக பெயர்களை பாவித்து இலங்கையினுள் பல கல்வி நிறுவனங்கள் உருவாக்கப்படுவதனால் கல்வியை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பதற்காக "தரப் பாதுகாப்பு பேரவையொன்றை" சட்டத்தின் மூலம் உடனடியாக நிறுவ வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.18/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— 'விசேட வழக்குத் தொடுநர்' எனப்படும் பதவியொன்றை உருவாக்குதல்,— அரச சேவை அரசியல் தலையீடுகளிலிருந்து விலக்குவதற்காக சுதந்திர ஆணைக்குழுக்கள், அரசாங்க கணக்குக் குழு, அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு ஆகியவற்றினால் நிறுவனங்களில் செயற்றிறமை பாதிக்கின்ற மோசடிகள், ஊழல்கள், செயற்திறமையில்லாமை ஆகியவற்றை கண்டுபிடித்த உடனே பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக அவற்றுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுவதற்கு "விசேட வழக்குத் தொடுநர்" எனப்படும் பதவியொன்று உருவாக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.19/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்துதல்,— இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் போன்று, வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலுள்ள எதிரானதும் சார்பற்றதுமான தாக்கல்கள் ஏதும் இருப்பின் அவைகளை நிவர்த்தி செய்வதற்கும் தணிப்பதற்கும் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்தப்பட வேண்டு மென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.20/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கத்திற்குப் பொருத்தமான வகையில் 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துதல்,— அரச நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பணங்களை செலுத்துவதில் ஒவ்வொரு வருடத்திற்கான பணவீக்க அளவுக்கு மேலதிகமாக 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துவதை உறுதிப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.21/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரசைகளுக்கு இலவச பயண வசதிகள் ஏற்பாடு செய்தல்,— சகல சிரேஷ்ட பிரசைகளுக்கும் பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் இலவச பயண வசதிகளை ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.22/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்குதல்,— பல இன, மத மக்கள் வாழும் இலங்கையில் சமாதானத்திற்கு பங்கம் ஏற்படும் சவால்களை எதிர்நோக்குகின்றமையினால் அவைகளை இலங்கையிலும், பிராந்தியத்திலும் மற்றும் முழு உலகத்திலும் தீர்ப்பதற்காக பௌத்த, கிரிஸ்தவ, இந்து மற்றும் இஸ்லாம் ஆகிய மதங்களின் ஒழுக்க நெறிகளைக் கொண்ட, தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.23/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு ஆகிய பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுத்தல்,— இதுவரை ஓய்வூதியப் பணிக்கொடையைப் பெற்றிராத ஓய்வு பெற்றவர்களுக்கு அப்பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.24/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய கொள்கையாக்க சபை ஒன்றினை நியமித்தல்,— முறைசார் தேசிய கொள்கை மற்றும் திட்டவாக்கம் தொடர்பில் அரசியல்வாதிகள், மற்றும் விடயம்சார் அதிகாரிகளைக் கொண்டதும் அரசாங்கம் மாறும்போது மாறாததுமான விசேட அதிகாரங்களைக் கொண்ட தேசிய கொள்கையாக்க சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.25/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டில் வேலை செய்பவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் தொடர்பில் சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகை ஏற்படுத்தல்,— வெளிநாடுகளில் வேலைசெய்வோர்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற தாக்குதல்கள், ஆட்கடத்தல், கற்பழிப்பு, பெண்களை இழிதொழிலில் ஈடுபடுத்தல், ஆட்கொலைகள் மற்றும் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு தொடர்பில் செல்லும்போது இடம்பெறுகின்ற மோசடிகள், வெளிநாடுகளில் அகதிகளாக்கப்பட்டுள்ளவர்களை திரும்ப அழைத்துக்கொள்ளல் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் செயற்படக்கூடிய சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகு ஏற்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.26/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— புதிய கண்டுபிடிப்பாளர்களை உலகிற்கு அறிமுகப்படுத்து முகமாக தேசிய திட்டமொன்றினை உருவாக்குதல்,— புதிய கண்டுபிடிப்பாளர்களையும் பலதரப்பட்ட திறமைகளைக்கொண்ட பிரசைகளையும் உலகத்திற்கு அறிமுகப்படுத்து வதற்காகவும் அவர்களது திறமைகள் உருவாக்கங்களை மேம்படுத்துவதற்காகவும் தேசிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.27/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலவளங்களை பயன்படுத்தும் கைத்தொழிலாளர்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கல்,— உலகச் சந்தைக்காக 75% உள் நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளை மேற்கொள்ளும் உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு 2 வருடகால வரிச்சலுகை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.28/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தோட்ட சமுதாயத்திற்கு பிரசாவுரிமை வழங்குதல்,— இலங்கைப் பிரசாவுரிமையற்ற சகல தோட்டப்புற மக்களிற்கும் அவர்களது விருப்பத்தின் பேரில் பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.29/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தீவிலேயுள்ள ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கு ஒரு கோப்பைப் பால் வழங்குதல்.— தீவிலேயுள்ள சகல ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கும் காலையில் இலவசமாக ஒரு கோப்பை பால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.30/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை ஒரு வாரகாலத்தினுள் விண்ணப்பதாரிகளுக்கு பெற்றுக் கொடுத்தல்,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை மீளப்பெற விண்ணப்பிப்பவர்களுக்கு ஒரு வார காலத்தினுள் அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது

பா.31/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பயணச் சீட்டு வழங்குதல்,— பாடசாலை மாணவர்கள் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை பேரூந்துகளில் பிரயாணம் செய்வதற்காக இலவச பயணச்சீட்டுக்களை வழங்குகின்ற முறையொன்றினை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.32/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுப் பாடசாலைகளை அமைத்தலும் தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுத்தலும்,— நீண்ட கால இலக்குடைய தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுப்பதற்கான நடிவடிக்கைகளை எடுப்பதற்கான முதல் கட்டமாக சகல மாவட்டங்களையும் உள்ளடக்கூடிய வகையில் விளையாட்டரங்கு, விளையாட்டு மைதானம், விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு போதனாசிரியர் களைக் கொண்ட உயர் மட்ட விளையாட்டுப் பாடசாலைகளை அமைக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.33/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மொழிகளிற்கான கல்விப் பீடமொன்றினை நிர்மாணித்தல்,— ஆசிரியர்களிற்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை கற்பிப்பதற்காக தேசிய மொழிகளிற்கான கல்விப்பீடமொன்றினை நிர்மாணிக்க வேண்டு மென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.34/ '10

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— புத்தளம் மாவட்டத்தில் கைத்தொழில் பேட்டைகளை தாபித்தல்,— புத்தளம் மாவட்டத்தில் கைத்தொழில்களை மேம்படுத்தும் நோக்கிலும் இளைஞர்களுக்கு தொழில்வாய்ப்புக்களை வழங்குவதற்காகவும் மாவட்டத்தில் பொருத்தமான அமைவிடங்களில் கைத்தொழில் பேட்டைகள் அமைக்கப்பட வேண்டும் என்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.35/ '10

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கல்முனை நகரத்தில் சாத்தங்கேனி பொது விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்தல்,— திகாமடுல்ல மாவட்டத்தின் இளைஞர்களுக்கு உயர்தரத்திலான வசதிகளை வழங்கும் பொருட்டும் பல்வேறு துறைசார்ந்த விளையாட்டுக்களிலும் அவர்களது திறமைகள், ஆற்றல் என்பவற்றை மேம்படுத்தும் பொருட்டும் சர்வதேச விளையாட்டு மைதானமொன்றாக அனைத்து துறைகளிலும் சாத்தங்கேனி பொது விளையாட்டு மைதானம் விருத்திசெய்யப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.39/ '10

கௌரவ அஜித் குமார,— கேகாலை மாவட்டத்தில் நூதனசாலையொன்றினை தாபித்தல்,— கேகாலை மாவட்டத்தில் உள்ள புராதன, கலாசார, தேசிய விழுமியங்கள் தொடர்பில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் தொல்பொருட்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையிலுமாக நூதனசாலையொன்று தாபித்தல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.40/ '10

கௌரவ அஜித் குமார,— நீதித்துறை, பொலிஸ் மற்றும் சிறைச்சாலை ஆகியவற்றை ஒன்றிணைத்து சனாதிபதி ஆணைக்குழுவொன்றினை நியமித்தல்,— சமூகத்தில் வியாபித்து வரும் குற்றச் செயல்களை குறைப்பதற்காகவும், குற்றவியல் சட்டங்களில் உள்ள குறைபாடுகளைக் குறைத்து அதனை மேம்படுத்தியும் காணித் தகராறுகள் உட்பட நீதிமன்றங்களில் குவிந்திருக்கும் விசாரணைகளின் தேக்க நிலையை நீக்குவதற்காகவும் மற்றும் நீதித்துறை, பொலிஸ், சிறைச்சாலை ஆகியவற்றினை நவீன மயப்படுத்தி துரித சேவைகளை வழங்குதனை நோக்கமாகவும் கொண்டு நீதித்துறை, பொலிஸ், சிறைச்சாலை ஆகிவற்றை ஒன்றிணைத்து சனாதிபதி ஆணைக்குழு வொன்றினை நியமிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.41/ '10

கௌரவ அஜித் குமார,— அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளானவர்களுக்கான நிவாரணம் அளிக்குமுகமாக சனாதிபதி ஆணைக்குழு,— ஆரம்ப காலம் முதல் இன்றுவரை தாம் கொண்ட அரசியல் கொள்கை காரணமாக அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளானவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்து நிவாரணம் வழங்குவதற்காக பூரண அதிகாரமுடைய சனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.42/ '10

கௌரவ அஜித் குமார,— 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தைத் திருத்துதல்,— இலங்கையில் கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் காணி உரிமை பலவித உரிமங்களின் கீழ் வருவதுடன் மேற்படி சட்டத்தினால் வாரப் பயிர்ச்செய்கை முறை ஒழிக்கப்பட்டதனால் தாங்கள் கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள காணிகளையும் இழக்க நேர்ந்துள்ளதனாலும் சட்டத்தினால் பாதுகாப்பு இல்லாததால் பலவித காணித்தகராறுகள் ஏற்படுகின்றதனாலும் வாரப்பயிர்ச் செய்கையாளர்களுக்கு ஏற்பட்ட அநீதியை ஒழிப்பதற்காக 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமத்தொழில் அபிவிருத்தி சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது.

பா.43/ '10

கௌரவ அஜித் குமார,— உஸ்ஸன்கொட மலைத்தொடர் அமைந்துள்ள நிலப் பரப்பைப் பேணிப் பாதுகாத்தல்,— வரலாற்றுக்கு முந்திய யுகத்தில் மத்திய முன்னைய காலத்திற்குரியதென இனங்காணப்பட்டுள்ளதும் தென் மாகாணத்தில் அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் கடற்கரையோரத்தில் அமைந்துள்ளதும் தென்னிலங்கையின் ஹோர்டன் சமவெளி எனப் பிரபல்யமடைந்துள்ளதுமான உஸ்ஸன்கொட மலைத்தொடர் அமைந்துள்ள நிலப்பரப்பு, இலங்கையில் இருபத்தெட்டாயிரம் வருடங்கள் பழமை வாய்ந்த திறந்த வெளிக் குடியேற்றமொன்றின் கேத்திரவடிவ ஆயுதங்களும் பாறைகளும் கண்டுபிடிக்கப்பட்ட நிலப்பகுதியாகவும் கடல் மற்றும் தரை உயிரியல் பல்வகைத் தன்மையில் பெருமளவு வளங்கள் நிறைந்த நிலப்பகுதியாகவும், சிறந்த கடலாமைகளின் வாழ்விடமாகவும், சுனாமிப் பேரலையினால் மக்களைப் பாதுகாத்த மதிலாகவும் அதிக பெறுமதியை கொண்டிருப்பதனால் இந்நிலப்பகுதியில் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களை நிறுத்தி விட்டு உடனடியாகப் பேணிப் பாதுகாக்க வேண்டிய சுற்றாடல் தொகுதியொன்றாக பிரகடனப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.44/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசாங்க தகவல்களை சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்காக சட்டங்களை இயற்றுதல்,— அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை பேணுவதற்கும் பொதுமக்கள் அனைத்து அரசாங்க தகவல்களையும் சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்கான உரிமைக்காகவும் பாராளுமன்றத்தில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.45/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்குதல்,— மக்களில் அதிகமானோர் இருதய சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய தேவை உடையவர்களாய் இருப்பதால் இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்க வேண்டியிருப்பதாலும் அதற்காக தனியார் துறை ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம் அல்லது ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினூடாக இலவசமாக வசதிகளை செய்துகொடுக்க வேண்டும் என்றும் அரசாங்க ஊழியர்கள் அல்லது தொழிலற்றோருக்கு அதற்கான முழு செலவையும் அரசாங்கத்தினால் சனாதிபதி நிதியத்தினூடாக வழங்குதல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.46/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உலக சுற்றாடலை பாதுகாத்தல்,— இலங்கை உலக சுற்றாடலை பாதுகாக்கும் பொருட்டு கூடிய கவனம் செலுத்த வேண்டுமென்பதோடு புவி வெப்பமாதலை தவிர்ப்பதற்காக குறிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.47/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற நடவடிக்கைகளை ஒளிபரப்புதல்,— தொலைக்காட்சி அல்லது இணையம் மூலமாக பாராளுமன்ற நடவடிக்கைகள் நேரடியாக அல்லது தணிக்கை செய்யப்பட்டு ஒளிபரப்பப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.48/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர்களுக்கு வாக்களிப்பதற்கான அனுமதியை வழங்குதல்,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர் களுக்கு எதிர்கால தேர்தல்களில் வாக்களிப்பதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.49/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையினை அறிமுகப்படுத்துதல்,— தற்போதுள்ள பழைமையான வாக்களிப்பு முறைமைக்குப் பதிலாக இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.50/ '10

கௌரவ அஜித் குமார,— இலங்கையில் மிகப் பெறுமதியான இயற்கை வளங்கள் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களை பாதுகாப்பதற்காக முறையான விஞ்ஞான ரீதியிலான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்,— இலங்கையில் மாத்திரமல்லாது உலகிலேயே மிக முக்கியமான இயற்கை வளமாகக் கருதப்படும் சிங்கராஜ காடு, கன்னெலிய பாதுகாப்பு வனம், ரூமஸ்சல கந்த, கொக்கல ஓயா தீவுக் கூட்டல்கள் மற்றும் கண்டல் மரங்கள், மாது கங்கை, ரம்சா ஈரழிப்பு நிலம் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்கள் என்பவற்றை பாதுகாப்பதற்கும் அவற்றை மேம்படுத்துவதற்கும் முறையான விஞ்ஞான ரீதியிலான திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.51/ '10

கௌரவ அஜித் குமார,— காலி கோட்டை மற்றும் அதனை அண்டியுள்ள வரலாற்று ரீதியான மற்றும் தொல்பொருள் மரபுரிமைகளைப் பாதுகாத்தல், மேம்படுத்தல் மற்றும் உரிய பயனைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல்,— சுற்றுலா கைத்தொழில் துறையின் மிக முக்கியமான மையமாகவும், வரலாற்று மற்றும் தொல்பொருள் ரீதியில் பெறுமதியைக்கொண்டதும், உலக மரபுரிமையாகக் கருதப்படுகின்றதுமான காலி கோட்டை மதில், காலி கோட்டையின் உள்பகுதியிலும் காலி கோட்டையை அண்டியும் அமைந்துள்ள வரலாற்று மற்றும் தொல்பொருள் ரீதியான மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் அவற்றுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களினதும் மக்களினதும் பங்கேற்புடன் முறையான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி இந்த வரலாற்று ரீதியான மரபுரிமைகளின் உரிய பயனை நமது நாடு பெற்றுக்கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.52/ '10

கௌரவ திலங்க சுமதிபால,— இலங்கையில் குறைந்த வசதிகளுடன் கூடிய வீடுகளில் வாழ்கின்ற வீட்டுரிமையாளர்களின் வீட்டுப் பிரச்சினையைதீர்ப்பதற்கான நடைமுறைச் சாத்தியமான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்,— இலங்கையில் வாழும் அனைத்துக் குடும்பங்களுக்கும் அவர்களின் அடிப்படைத் தேவைகளாகிய குடிநீர், மின்சாரம், மலசலகூட வசதிகள் மற்றும் சமையலறை என்பவற்றை உள்ளடங்கிய வீடொன்றில் வதிவதற்கான உரிமையை உறுதிப்படுத்தும் பொருட்டு "மஹிந்த சிந்தனை" எதிர்கால நோக்கின் கீழ் மாடிவீடுகளையும் கொத்தணி மாடி வீடமைப்புத் திட்டங்களையும் கொழும்பு மற்றும் அதனை அண்டிய நகரங்களில் அமைத்து மக்களின் வீட்டுப் பிரச்சினையை தீர்ப்பதற்கு நடைமுறைச்சாத்தியமான நிகழ்ச்சித் திட்டமொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.53/ '10

கௌரவ திலங்க சுமதிபால,— கொழும்பு நகரில் மழைநீர் வழிந்தோடுவதை ஒழுங்கு முறையாக்கல்,— கொழும்பு நகரில் இன்றும் காணப்படுவது 100 ஆண்டுகளுக்கும் மேல் பழைமைவாய்ந்த நீர் வழிந்தோடும் வடிகால் தொகுதியென்பதோடு, அது ஒழுங்கான முறையில் தொழிற்படாததாலும், அரை மணித்தியாலம் தொடர்ச்சியாக பெய்யும் மழையினால் கொழும்பு நகரம் முழுவதும் நீரில் மூழ்கும் நிலை தோன்றியுள்ளதாலும் முறைசாரா விதத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள குடியிருப்புகள், கட்டடங்கள் மற்றும் அனுமதியற்ற நிர்மாணிப்புகளினால் சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாலும், கடும் மழை பெய்யும் சந்தர்ப்பதத்தில் கொழும்பு நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தினுள் ஏற்படும் வெள்ள அனர்த்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக மழைநீர் ஒழுங்காக வழிந்தோடுவதற்கு ஏற்றவகையில் சம்பந்தப்பட்ட வடிகால் தொகுதிகளை நவீனமயப்படுத்தி, சுத்தம் செய்து ஒழுங்கு முறையாக பேணிவரப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.54/ '10

கௌரவ திலங்க சுமதிபால,— மருத்துவத் துறையின் தொழில் சார் பெறுமதியினைப் பேணல்,— உள்நாட்டு, சர்வதேச மருத்துவ முறையினுள் தொழிற்தகைமை மற்றும் அனுபவத்தினைக் கொண்டிராத மருத்துவர்கள் சிகிச்சையளிப்பதில் ஈடுபட்டுள்ளமையினால், சாதாரண நோயாளர்கள் பாரிய சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டி நேர்ந்துள்ளதால் பரிதாப நிலைக்கு ஆளாகியுள்ளதாதலாலும், இதன் மூலம் மருத்துவத் துறையில் பணியாற்றும் தகைமை பெற்ற தொழில்சார் மருத்துவர்கள் சமூகத்தில் அவமானத்திற்கு உள்ளாகியுள்ளதாதலாலும், மருத்துவத் துறையின் தொழில்சார் பெறுமதியினை பேணுமுகமாக, ஒழுங்காகவும் முறைசார் ரீதியிலும் சட்ட ரீதியிலும் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.55/ '10

கௌரவ திலங்க சுமதிபால,— ஊடக சுதந்திரத்தையும் தகவல் அறியும் உரிமையையும் உறுதிப்படுத்தல்,— அரசியலமைப்பின் தகவல்களை அறிவதற்கும் வெளியிடுவதற்குமுள்ள உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாலும், தொழில்நுட்பம் முன்னேறிவரும் உலகில் உண்மையை ஒழிக்கவோ மூடி மறைக்கவோ சந்தர்ப்பம் இல்லாததாலும், சனநாயக நாடொன்றில் அனைத்து பிரசைகளுக்கும் சுதந்திர ஊடகங்கள் மூலம் அறிவையும் புரிந்துணர்வையும் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.56/ '10

கௌரவ திலங்க சுமதிபால,— விளையாட்டின் மூலம் நோயற்ற சமூதாயமொன்றை உருவாக்குதல்,— பிள்ளைப் பருவத்திலேயே பிள்ளைகளை விளையாட்டில் ஈடுபடவைப்பதன் மூலம் நோயற்ற சமூதாயத்தை உருவாக்குவதற்கும், இயற்கையிலேயே திறமைகளைக் கொண்டுள்ள பிள்ளைகளை சர்வதேச மட்டத்திற்கு ஆற்றுப்படுத்துவதற்கும்/உலகப் புகழ்வாய்ந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கி நாட்டிற்கு நற்பெயரை பெற்றுக் கொள்ளும் வகையில் இன பேதமற்ற வகுப்புப் பேதமற்ற நியாயமான செயல் முறையொன்று அரச மட்டத்தில் வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.57/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேருநர் இடாப்பை அடிக்கடி இற்றைப்படுத்துதல்,— தேருநர் இடாப்பு வருடத்தில் மாதமொன்றுக்கு முப்பது நாட்களுக்கு மட்டும் இற்றைப்படுத்தும் பட்டியலொன்றாக அல்லாமல் அது அடிக்கடி இற்றைப்படுத்தும் திறந்த பட்டியலொன்றாக இருத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.59/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ளோருக்கு ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்துதல்,— வெளிநாடுகளுக்குச் சென்று மிகவும் சிரமத்திற்கு மத்தியில் உழைக்கும் செல்வத்தை, இலங்கையின் செல்வத்தை அதிகரிப்பதற்காக அனுப்புகின்ற, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளவர்களை மதிக்கும் வகையில் ஓய்வூதிய முறையொன்றை பெற்றுக்கொடுத்தல் வேண்டுமேன இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.60/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்காக ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்தல், — பாராளுமன்ற உறுப்பினர்கள் 5 வருட சேவைக்காலத்தை பூர்த்திசெய்த பின்னர் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு தகைமைபெறுகின்றதனால் ஆயுதப் படைகளில் 22 வருடங்கள் பூர்த்தி செய்யாத போதிலும் 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்குப் முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்கும் ஓய்வூதியம் பெற்றுக்கொடுக்கப்படல் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.62/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வலது குறைந்ததும் நடமாடமுடியாததுமான நபர்களுக்கு விசேட வடிவங்களை அறிமுகப்படுத்துதல்,— சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவாறு வலது குறைந்தோரின் வசதிகளை உறுதிப்படுத்தவும் அவர்களிடமுள்ள வினைத்திறனை அதிகரிப்பதற்காகவும் அவர்கள் தேவையற்ற விதத்தில் பிறர்மீது தங்கிருப்பதைக் குறைப்பதற்காகவும் அரசாங்கத்தின் அனைத்து புதிய கட்டிடங்கங்களிலும் விசேட வடிவமொன்றை அமைக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.63/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்தல்,– பதிவுசெய்திருந்தும் வாக்களிப்பதற்கான வாய்ப்புக்கிடைக்காத வாக்காளர் அநேக எண்ணிக்கையானோர் இருப்பதனாலும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து நபர்களுக்கும் வாக்களிக்கும் உரிமையை பெற்றுக்கொடுக்க வேண்டுமெனவும் தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டதன் பின்னர் வாக்களிக்காத நபர்களிடமிருந்து தண்டப் பணமொன்றை அறவிவிடுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.64/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழலற்ற உலகொன்றை உறுதிப்படுத்தல்,— ஊழலை முற்றாக ஒழிப்பதற்காக இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து உலகிலுள்ள பாராளுமன்ற அமைப்புக்களில் சேர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.65/ '10

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— காதி நீதிமன்ற முறைமைக்கு உயர்ந்த இடத்தைப் பெற்றுக்கொடுத்தல்,— 1929 ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக, விவாகரத்து கட்டளைச்சட்டத்தின் கீழ் காதி நீதிமன்ற முறைமை இலங்கையில் தாபிக்கப்பட்டு, அதன் பின்னர் 1951 இல் முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்தின் கீழ் திருத்தப்பட்ட அக்கட்டளைச்சட்டம், முஸ்லிம் குடும்பங்களில் எழுகின்ற பிணக்குகள் தொடர்பான அனைத்து விடயங்களையும் தீர்மானிப்பதற்கு உரித்தளிக்கப்பட்ட, காதி நீதிபதிகளின் தத்துவங்கள் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதோடு, முறைமையின் கௌரவத்திற்கு பொருத்தமான இடங்களில் அமர்வுகள் அத்தகைய முறையில் நடத்தப்படுவதற்கு ஏற்றவாறு காதி நீதிமன்ற முறைமையின் அந்தஸ்து தரமுயர்த்தப்பட வேண்டும் என்றும் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் காதி நீதிபதிகள் நியமிக்கப்படுவதனால் ஏனைய நீதிமன்ற அதிகாரிகளுக்கு கொடுக்கப்படக்கூடிய மதிப்புமிக்க, ஏற்றுக்கொள்ளத்தக்க சம்பள அமைப்பொன்றில் அவர்கள் வைக்கப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 69/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஏமாற்றப்பட்ட பண வைப்பாளர்களுக்கு தமது நிதிகளை மீளச் செலுத்துதல்,— போலி நிதி நிறுவனங்களில் தமது பணத்தை வைப்பிலிட்டு அதனால் ஏமாற்றமடைந்த அநேகமானோர் இருப்பதனாலும் கடந்த 2009/2010 தேர்தல் பிரசாரங்களில் இந்த அரசாங்கம் பண வைப்பாளர்கள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு அவற்றின் மிகுதிப் பணத்தை மீளச் செலுத்த வாக்குறுதி அளித்திருப்பதனாலும் மத்திய வங்கி இந்நிறுவனங்களின் பொறுப்பாளராக இருப்பதனால் மிகவும் வினைத்திறனுடன் செயற்படவேண்டுமென்பதோடு பண வைப்பாளர்களுக்கு அவர்களது மிகுதிப் பணத்தை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 70/ '10

கௌரவ புத்திக பதிரண,— அங்கவீனமுற்ற மற்றும் விசேட தேவைகள் உள்ள பிள்ளைகளுக்கு தொழிற்பயிற்சியை அளித்தல்,— அங்கவீனமுற்ற மற்றும் விசேட தேவைகள் உள்ள பிள்ளைகளுக்காக மாவட்ட, மாகாண மட்டங்களில் தொழிற்பயிற்சியை அளித்து அப்பிள்ளைகளை முறையான விதத்தில் தொழில்வாய்ப்புகளுக்கு அனுப்பும் திட்டமொன்று அமுல்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுன்றம் கருதுகின்றது.

பா. 71/ '10

கௌரவ புத்திக பதிரண,— சுதேச ஆயுர்வேத மருத்துவர்களுக்கு சமாதான நீதவான் நியமனங்களை வழங்கல்,— சுதேச ஆயுர்வேத மருத்துவர்கள் பணத்தையும் சிறப்புரிமைகளையும் எதிர்பார்க்காமல் அவர்களால் சமூகத்திற்கு ஆற்றப்படவேண்டிய சமூகப் பொறுப்பாகக் கருதி, குறிப்பாக கிராமிய மக்களுக்கு அளப்பெரும் சேவையை ஆற்றிவருவதனால், அச்சேவையை கௌரவிக்கும் வகையில் ஆயுர்வேத மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைவருக்கும் சமாதான நீதவான் பதவிகள் வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுன்றம் கருதுகின்றது.

பா. 72/ '10

கௌரவ புத்திக பதிரண,— சமாதான நீதவான் பதவிகளை வழங்குவதற்கான முறையான வழிமுறையொன்றைத் தயாரித்தல்,— சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதும் சமுகத்திற்கு அளப்பரிய சேவையாற்றுவதுமான சமாதான நீதவான் பதவிகள், ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதிகளுக்குப் புறம்பாக வழங்கப்படுவதன் காரணமாக அப்பதவியின் கௌரவமும் அங்கீகாரமும் படிப்படியாக குறைவடைவதனால் குறித்த நியமனங்களுக்கென முறையான வழிமுறையொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுன்றம் கருதுகின்றது.

பா. 74/ '10

கௌரவ புத்திக பதிரண,— சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணல்,— சுனாமி அனர்த்தம் காரணமாக ஏதேனும் பிரச்சினைக்கு முகம் கொடுத்து இது வரை அப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காமல் இருப்பின், பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மாவட்ட செயலாளர் பிரிவு அடிப்படையில் ஆராய்ந்து, அவர்கள் முகம்கொடுத்துள்ள அல்லது தற்போது முகம்கொடுக்கும் பிரச்சினைகளை குறைப்பதற்கான வினைத்திறன்மிக்க வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 75/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— வீட்டிலிருந்து தொழில் புரிவோருக்கான தேசிய கொள்கையொன்றை வகுத்தல்,— இலங்கையில் பலதரப்பட்ட தொழில் வாய்ப்புத் துறைகளில் பல தரப்பட்ட உற்பத்திப் பணிகளில் ஈடுபடும் சுமார் பத்து இலட்சம் பேர்களான வீட்டிலிருந்து தொழில் புரிவோர்களுக்காக அரசியல் அதிகாரம் வாய்ந்தோர்கள், அதனுடன் தொடர்புபட்ட சகல துறைகளினதும் தேர்ச்சிபெற்றவர்கள் புத்தி ஜீவிகள் உட்பட அரச, மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியைப் பெற்று முறையான தேசிய கொள்கையொன்றை வகுத்து அதனை துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 76/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளமுடியாதுள்ள வயற்காணிகளை பயனுள்ள நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துதல்,— வயற் காணிகளை நிரப்புவதற்கான சட்டம் மீறப்படாத வகையில், ஒழுங்குமுறையான ஆய்வு ஒன்றின் மூலம் இனங்காணப்பட்டதன் பின்னர் எவ்வகையிலும் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத வயற் காணிகளில் பயனுள்ள விவசாய உற்பத்திகளை மட்டும் பயிரிடுவதற்கும், நிர்மாணப் பணிகளுக்காக எவ்வித வாய்ப்புகளும் கிடைக்காத வகையிலுமான நிகழ்ச்சித் திட்டங்களை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 77/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— அரச சேவையைச் சேர்ந்த ஓய்வூதியம் பெறுபவர்களின் சம்பள முரண்பாட்டினை நீக்குதல்,— 2006/6 சம்பள மீள்திருத்த சுற்றறிக்கையின் பிரகாரம் 2006.06.01 ஆம் திகதியிலிருந்து அமுலாகின்றவாறு அரச ஊழியர்களுக்கு சம்பள மாற்றம் வழங்கப்பட்டமையால் 2006.06.01 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற மற்றும் அதன் பின்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கிடையில் பாரிய சம்பள முரண்பாடு நிலவுவதால் அதனை நீக்குவதற்கான ஒரு தேசிய வேலைத்திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 78/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— மாவட்ட மட்டத்தில் தகவல் மத்திய நிலையங்களை நிறுவுதல்,— புவியியல் அமைவு, வரலாற்றுப் பின்னணி, பயிரிடப்படும் பயிரினங்கள், வீதி முறைமை அரச அலுவலகங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், புகையிரத நிலையங்கள் மற்றும் பேரூந்து தரிப்பிடங்கள் ஆகிய அனைத்து தகவல்களும் கணனிமயப்படுத்தப்பட்ட மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட தகவல் மத்திய நிலையங்களை நிறுவுவதற்கும், அதன் முதலாவது கட்டத்தின் போது மகாகாண மட்டத்திலும் இரண்டாவது கட்டத்தின் போது மாவட்ட மட்டத்திலும் மூன்றாவது கட்டத்தின் போது பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேச மட்டத்திலும் இந்நிலையங்களை நிறுவவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 79/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையில் அறநெறி பாடசாலைகளின் கல்வி மற்றும் நிர்வாகத்தை ஒழுங்கு முறைப்படுத்தல்,— இலங்கையில் சகல மதங்களினதும் அறநெறி பாடசாலைகளின் கல்வி மற்றும் நிர்வாகத்தை மேலும் ஒழுங்கு முறைப்படுத்துவதற்கும் பௌத்த அறநெறி பாசாலைகளில் காணப்படும் அறநெறி இறுதிப் பரீட்சை மற்றும் அறநெறி தர்மாசார்ய பரீட்சை மற்றும் சகல மதங்களினதும் அறநெறி பாடசாலைகளில் நடாத்தப்படும் இவற்றுக்கு இணையான பரீட்சைகளின் சான்றிதழ்களுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்குதலும், அறநெறிப் பாடசாலைக்கு தொடர்ச்சியான மனித வளங்களுடன் பௌதீக வளங்களையும் வழங்குவதன் மூலம் அறநெறிப் பாடசாலைகளுக்கு சமுகமளிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு துரித வேலைத்திட்டமொன்றை வகுத்தலும் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 80/ '10

கௌரவ புத்திக பதிரண,— நாய்கள், பூனைகள் போன்ற செல்லப் பிராணிகளை வளர்த்தல் தொடர்பான சட்டங்களை வகுத்தல்,— வீடுகளில் அல்லது விற்பனை செய்வதற்காக வளர்க்கப்படும் நாய்கள், பூனைகள் போன்ற செல்லப்பிராணிகளை உள்ளூராட்சி நிறுவனங்களில் பதிவு செய்யத் தேவையான சட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமென்பதோடு, குறித்த பிராணிகளின் குட்டிகளை, சட்டரீதியான அனுமதி பெற்ற நிலையங்களில் மாத்திரம் விற்பனை செய்தல் வேண்டுமெனவும் அவ்வாறல்லாத இடங்களில் வளர்க்கப்படும் பெண்ணினப் பிராணிகளை கட்டாயமாக மலடாக்கலுக்கு உட்படுத்துவதற்கும், தேவையான சட்டங்கள் வகுக்கப்படவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 81/ '10

கௌரவ புத்திக பதிரண,— தொழில் சந்தைக்குத் தேவையான ஊழியர்களை பயிற்றுவித்தல்,— எதிர்காலத்தில் இலங்கையில் உருவாகும் புதிய தொழில் வாய்ப்புகளுக்குத் தேவையான ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் வழியொன்றைத் தொடங்கி வைக்கும் பணியை மிகவும் வினைத்திறனான வகையில், நாட்டினுள் காணப்படும் அனைத்து மூன்றாம் நிலைக்கல்வி நிறுவனங்களினூடாக ஆரம்பித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 82/ '10

கௌரவ புத்திக பதிரண,— பொதுநிர்வாக கட்டமைப்பை மறுசீரமைத்தல்,— தற்சமயம் பொதுநிர்வாக அமைச்சினால் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எல்லைகளை மீள நிர்ணயிப்பதற்கனான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதோடு அவ்வாறு எல்லை நிர்ணயம் செய்யப்படும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளினூடாக புதிய பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேச எல்லைகளையும் புதிய மாவட்ட எல்லைகளையும் நிர்ணயிக்க வேண்டுமெனவும், இவ்வாறு நிர்ணயிக்கப்படும் பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசங்கள் உள்ளூராட்சி மன்ற ஆளுகைப் பிரதேசங்களாக மாற்றியமைக்க வேண்டுமெனவும், அத்தகைய ஆளுகைப் பிரதேசத்தினுள் கோட்டக் கல்வி அதிகாரப் பிரதேசம், பொலிஸ் அதிகாரப் பிரதேசம், கமநல சேவைகள் அதிகாரப் பிரதேசம், பிரதேச சுகாதார சேவை உத்தியோகத்தர் அதிகாரப் பிரசேதம் உள்ளிட்ட சகல அரச நிறுவனங்களினதும் அதிகாரப் பிரதேச எல்லைகள் உள்ளடங்கும் வகையில் ஒட்டுமொத்தமான பொதுத்துறைக் கட்டமைப்பும் திருத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 83/ '10

கௌரவ புத்திக பதிரண,— நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை மீள ஆரம்பித்தல்,— மாத்தறை மாவட்டத்தின் நில்வளா கங்கை திட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் இடைநடுவில் முடங்கியிருப்பதால் அப்பள்ளத்தாக்கின் ஊட்டப் பிரதேசத்தில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் மக்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை விரைவில் மீள ஆரம்பிக்க வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 84/ '10

கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்களின் பிரதிநிதிகளின் பதவிக் காலத்துக்குப் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குதல்,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படுகின்ற, சமாதான நீதவான் பதவியானது, அவர்களது பதவிக் காலத்துக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளதாலும், இப்பதவிக்காலத்தின் பின்னரும், அவர்களிடம் மேற்படி சேவையினைப் பெறுவதற்காக வரும் அநேகமானோர் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதாலும், இம் மக்கள் பிரதிநிதிகளுக்கு தமது பதவிக் காலத்தின் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குவதற்கான தகுந்ததொரு வேலைத் திட்டத்தினை வகுத்தல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 85/ '10

கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் குறித்து மீளாய்வு செய்தல்,— நாட்டில் தற்போது இயங்கி வருகின்ற மாகாண சபைகள் மற்றும் எதிர்காலத்தில் ஒழுங்கு முறையாக செயற்படவுள்ள வடமாகாண சபையின், கௌரவ அமைச்சர்கள், தவிசாளர்கள், உபதவிசாளர்கள், ஆளும் கட்சியின் முதற்கோலாசான், சபைத் தலைவர்கள், எதிர்க் கட்சித் தலைவர்கள், எதிர்க் கட்சியின் முதற்கோலாசான் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்கான முறையில் காணப்படாமையினால், இது தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து அதற்கான ஒழங்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 86/ '10

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி நிறுவனங்களின் அனைத்து மக்கள் பிரதிநிதிகளினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகளை மீளாய்வு செய்தல்,— நாட்டில் நடைமுறையிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அனைத்து மாநகர சபை, நகர சபை, மற்றும் பிரதேச சபைகளினதும் நகரபிதாக்கள், நகர சபைத் தலைவர்கள், மற்றும் பிரதேச சபைத் தலைவர்கள், பிரதி நகரபிதாக்கள், பிரதி நகர சபைத் தலைவர்கள், உப தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்குமுறையாக இல்லாத காரணத்த்தால் இது தொட்பாக ஆழமாக ஆராய்ந்து இதற்கான ஒழுங்குமுறையுடன் கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 87/ '10

கௌரவ புத்திக பதிரண,— வடக்கு கிழக்கில் காணாமற் போன தமிழ் மக்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்குதல்,— வடக்கு கிழக்கு பிரதேசங்களில் யுத்தம் நடைபெற்ற கடந்த மூன்று தசாப்த காலமாக பல்வேறு காரணங்களால் காணாமற் போயுள்ளவர்கள் தற்போது உயிர் வாழ்கின்றார்களா, இல்லையா என்பதையிட்டு துரிதமாக விசாரணை செய்து, இவர்கள் உயிருடன் இல்லாதிருப்பின் இவர்களுக்கான மரணச் சான்றிதழ்களை வழங்குதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 88/ '10

கௌரவ புத்திக பதிரண,— தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல்,— அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தெரிகுழுவொன்றை நியமித்து, இலங்கைக்கு உகந்த தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல் ஆரம்பிக்கப்பட்ட வேண்டுமெனவும் அந்நோக்கத்திற்காக அதனுடன் தொடர்புடைய அனைத்துத் துறைகளும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேர்ச்சி பெற்றவர்கள் அறிஞர்கள் மற்றும் புத்திஜீவிகளினதும் அதேபோன்று அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 89/ '10

கௌரவ புத்திக பதிரண,— அரசாங்க பாடசாலைகளையும், பல்கலைக் கழகங்களையும் விடுமுறை நாட்களில் கற்கை அலகுகளுக்காகப் பெற்றுக்கொடுத்தல்,— அரசாங்க பாடசாலைகளின் விடுமுறை நாட்களிலும் பிற்பகல் நேரத்திலும், பல்கலைக்கழகங்களின் விடுமுறை நாட்களிலும், அந்த நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு, வர்த்தக சமுதாயத்தினரையும், அரச சார்பற்ற அமைப்புகளையும், வர்த்தகச் சபைகளையும், சமுதாய அடிப்படையிலான அமைப்புகளையும் இணைத்துக்கொள்கின்றதான விரிவானதொரு வேலைத்திட்டமாக, முதியோர் மற்றும் முறைசாரா கற்கை அலகுகள் சலுகைக் கட்டண அடிப்படையில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 90/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— வெற்றிடமாகின்ற கிராம உத்தியோகத்தர் பதவிகளில் பதிற் கடமை புரியும் நியமனங்களுக்காக வினைத்திறன்மிக்க வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— கிராம உத்தியோகத்தர் பதவியில் வெற்றிடம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அண்மையிலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் மிகச் சிறியதொரு கொடுப்பனவின் அடிப்படையில் பதிற்கடமைக்காக நியமிக்கப்படுவதாலும், மேற்படி பதிற் கடமை நியமனத்தின் மூலம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இரண்டினதும் வினைத்திறன் வீழ்ச்சயடைவதாலும், இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கிராம உத்தியோகத்தர் சேர்மம் ஒன்றை அமைக்க வேண்டுமென்பதோடு, வெற்றிடம் ஏற்படுகின்ற பிரிவுகளுக்கு மேற்படி சேர்மத்திலிருந்து கிராம உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கும், மேற்படி சேர்மத்திலுள்ள கிராம உத்தியோகத்தர்களை, பிரதேச செயலாளரினால் ஒப்படைக்கப்படுகின்ற வேறு பயனுள்ள துறைகளில் அல்லது கடமைகளில் ஈடுபடுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 91/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— தற்போது செயற்படும் சிவில் பாதுகாப்புக் குழுக்குகளுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரத்தை வழங்குதல்,— சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் அமைந்துள்ள மத வழிபாட்டுத் தலங்களின் தலைமை தேரர், மதகுரு, பாடசாலை அதிபர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கமத்தொழில் ஆராய்ச்சி உதவியாளர், சனசபைச் செயலாளர்கள், பிரதேசத்தின் பொலிஸ் நிலையத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு உத்தியோகத்தர், மற்றும் உரிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தொண்டர் அமைப்புக்கள், அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் உரிய பிரிவில் வசிக்கும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படுவதை மிகவும் எளிதாக்கும் பொருட்டு தற்போதைய சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரமொன்றை வழங்கக்கூடியவாறான பாராளுமன்றச் சட்டமொன்று நிறைவேற்றப்படுதல் வேண்டுமெனவும் அதனூடாக கிராம உத்தியோகத்தர் பிரிவில் நடைபெறுகின்ற குற்றச் செயல்கள், துர்நடத்தைகள் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவுகளுடன் சிறந்த தொடர்பைக் கட்டியெழுப்புவதற்கு இயலுமானவாறு குறித்த சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 92/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— நாட்டில் தற்பொது அமுலில் உள்ள காலங்கடந்த சட்டங்களை இற்றைப்படுத்துதல்,— தற்போதும் இலங்கையில் ஏகாதிபத்திய வழிகளின் காலத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட சட்டங்கள் அமுலாகிவருவதால் காலங்கடந்த தண்டனைகள், தண்டப்பணம் என்பவற்றை இற்றைப்படுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 93/ ‘10

கௌரவ புத்திக பத்திரண,— தேர்தல்ள் அனைத்தையும் ஒரே நாளில் நடத்துதல்,— இலங்கையில் 1988 இல் இருந்து 2010 வரையான 22 வருட காலப்பகுதிக்குள் 1990, 1992, 1995, 1996, 1998, 2003, மற்றும் 2007 ஆம் ஆண்டுகளைத் தவிர்ந்த ஏனைய ஒவ்வோர் ஆண்டிலும் ஏதேனும் ஒரு தேர்தல் நடத்தப்பட்டுள்ளதோடு அவ்விதமாக தேர்தல்களை நடத்துதலானது மக்களின் அபிப்பிராயத்தைக் கண்டறிவதற்கான பெறுமதி மிக்க அளவுகோலாக அமைந்த போதிலும், இதன் மூலமாக நாட்டின் பொருளாதாரம், நிருவாகம் போன்ற அனைத்துத் துறைகளிலும் தீவிரமான தாக்கம் ஏற்படுத்தப்படுவதால் உள்ளூராட்சித் தேர்தல்கள், பொதுத்தேர்தல்கள் மற்றும் சனாதிபதித் தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்கேதுவாக மேற்படி நிறுவனங்களின் பதவிக் காலத்தை திருத்தியமைக்கவும் பொருத்தமான தேர்தல் வழிமுறையொன்றை உருவாக்கவும் தகுந்தவாறு அரசியலமைப்புத் திருத்தமொன்றை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 94/ '10

கௌரவ புத்திக பதிரன,— பாராளுமன்ற சனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளுதல்,— நாட்டினுள் சனநாயகத்தை மேலும் வலுவூட்டும் நோக்கத்துடன் பாராளுமன்றத்திற்கும் மாகாண சபைகளுக்கிடையிலும், மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையிலும் சிறந்த இணைப்பினை பேணிவருதல் அத்தியாவசியமாயுள்ளதோடு, இதற்கு உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் மாகாண சபைகளில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதிசெய்வதற்கும் மாகாண சபை தலைவர்கள் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதி செய்வதற்குமான செயல்முறையொன்றை தயாரிப்பதற்குத் தேவையான அரசியலமைப்புத் திருத்தமொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 95/ '10

கௌரவ புத்திக பதிரன,— தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்,— தேசிய ஒருமைப்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் தமிழ் மொழி பேசுகின்ற மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களில் சிங்கள மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் சிங்கள மொழி பேசுகின்ற மக்கள் வாழும் பிரதேசங்களில் தமிழ் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும், அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்தல் வேண்டுமென்பதுடன், அரச மற்றும் தனியார் இலத்திரனியல் ஊடகங்கள் மட்டுமன்றி அச்சு ஊடக நிறுவனங்களின் ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொண்டு இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 96/ '10

கௌரவ புத்திக பதிரண,— வாழ்க்கைத் துணையின் தகாத செயல்களினால் நிர்க்கதிக்குள்ளாகும் தரப்பினருக்கு நிவாரணமளித்தல்,— திருமணமான கணவன் மனைவி தம்பதிகள் ஒரே வீட்டில் வாழ்கின்ற சந்தர்ப்பங்களில் கணவன் அல்லது மனைவி மதுபாவனை சூதாட்டம் அல்லது வேறு துர்நடத்தைகளில் ஈடுபட்டு, காணி, வீடு அல்லது வீட்டுப் பாவனைப் பொருட்களை தனது தற்றுணிபின் பிரகாரம் விற்பதன் காரணமாக அல்லது வேறு நபர்களுக்கு ஒப்படைப்பதன் காரணமாக மற்றைய தரப்பினருடன் பிள்ளைகளும் கடும் நிர்க்கதி நிலைக்குள்ளாகின்ற சந்தர்ப்பங்களில் அந்நிலைமையை தடுப்பதற்குத் தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 97/ '10

கௌரவ ருவன் ரணதுங்க,— மூத்த பிரசைகளின் நிலையான வைப்புகளுக்கான வருடாந்த வட்டி வீதத்தை 14 % வரை அதிகரித்தல்,— கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகார சபைகள் மற்றும் தனியார் துறைகளில் நாட்டுக்காக பெரும் பணியாற்றி தற்போது வாழ்க்கையின் வயோதிப பருவத்தை அடைந்துள்ள அநேகமான மூத்த பிரசைகள் தமது தொழிலின் மூலமாக சேமித்துள்ள பணத்தையும், ஊழியர் சேமலாப நிதியையும் நிலையான வைப்புகளில் இட்டு அதற்கு கிடைக்கின்ற வட்டியில் வாழ்க்கை நடத்துகின்றனர் என்பதோடு, அரச வங்கிகளின் வருடாந்த வட்டி வீதம் 10.5 % வரை குறைக்கப்பட்டதன் விளைவாக மூத்த பிரசைகளின் நிலையான வைப்புகளுக்கு கிடைக்கின்ற வட்டி வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளதன் காரணமாக அவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியிருப்பதால், மூத்த பிரசைகளின் ரூபா15 இலட்சம் அல்லது அதற்கு குறைந்த நிலையான வைப்புகளுக்கான வருடாந்த வட்டியை 14% ஆக அதிகரிக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 98/ '10

கௌரவ புத்திக பத்திரண,— ஒழுக்க நெறிகள் பற்றிய குழுவை தாபித்தல்— இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் நம்பகத்தன்மையையும் அவர்களிடத்தில் உயரிய ஒழுக்க நெறிகளையும் பேணவேண்டிய தேவைப்பாட்டைப் பற்றி ஆராய்வதற்காக ஒழுக்க நெறிகள் பற்றிய குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 99/ '10

கௌரவ புத்திக பத்திரண,— புதிய இலத்திரனியல் அடையாள அட்டையை வழங்குதல்,— நிர்வாகத்தை எளிதாக்குதல், குற்றங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் ஏனைய மோசடியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் குறைப்பதற்காக, குறித்த நபரின் இரத்தப் பிரிவு, வங்கிகக் கணக்குகள், கடன் அட்டை, கல்வித் தகைமை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வெளிநாட்டுப் பிரயாண கடவுச்சீட்டு இலக்கம் ஆகிய முக்கியமானதும் தேவையானதுமான தகவல்களை உள்ளடக்கிய புதிய இலத்திரனியல் இலக்கத்துடனான, தேசிய அடையாள அட்டையொன்று வழங்கப்படுதல் வேண்டும் எனவும், பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் அனைவரது தகவல்களையும், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் கணனிமயப்படுத்தலை துரிதப்படுத்தல் வேண்டும் எனவும் இத் தகவல்கள் அவ்வப்போது இற்றைப்படுத்தப்படல் வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 100/ '10

கௌரவ புத்திக பத்திரண,— ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், ஓய்வு பெறுவதற்கு வாய்ப்பளித்தல்,— பொலிஸ் திணைக்களத்தில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், சுயவிருப்பில் ஓய்வு பெறுவதற்கான இயலுமானது, ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டுமென்றும் அதற்கான செயல்முறை ஒன்று உருவாக்கப்படல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 101/ '10

கௌரவ புத்திக பத்திரண,— ஒழுங்குவிதிகளை நீக்குவதற்கான குழுவை தாபித்தல்,— ஒழுங்குவிதிகள் உருவாக்கப்படுவதும் நீக்கப்படுவதும் அன்றாடம் இடம்பெறும் நடைமுறையாதலால், காலம் கடந்த ஒழுங்குவிதிகளை நீக்குவது பற்றி ஆராய்வதன் பொருட்டு ஒழுங்கு விதிகளை நீக்குவதற்கான குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 102/ '10

கௌரவ புத்திக பதிரண,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களை, சேவையில் நிரந்தரமாக்கல்,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களுக்கும் அரசாங்கத்தின் ஏனைய பாதுகாப்புப் பிரிவுகளில் மற்றும் திணைக்களங்களில் சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு உள்ளதைப் போன்று சம்பளம், கொடுப்பனவு, நிரந்தர சேவை மற்றும் ஓய்வூதியத்துடனான உத்தியோக அந்தஸ்து வழங்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 103/ '10

கௌரவ புத்திக பத்திரண,— உறுதியளித்தல் பற்றிய குழுவை தாபித்தல்,— பாராளுமன்றத்தில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடைகளாக அரசாங்கம் வழங்கும் உறுதி மொழிகளும் அரசாங்கத்தின் கடப்பாடுகளும் மீறப்படுகின்ற பல சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாயுள்ளதால் அரசாங்கம் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதையும் அவை தொடர்பில் பொறுப்புக் கூறுவதையும் உறுதி செய்யும் பொருட்டு உறுதியளித்தல் பற்றிய குழுக்களை தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 104/ '10

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— பனை மர விளைச்சலுக்கு ஊக்கமளித்தல்,— "கற்பகதரு" எனஅழைக்கப்படும் பொதுமக்களுக்கு மிக்க பயனைப் பெற்றுத்தரும் பனை மர விளைச்சலுக்கு ஊக்கமளித்து பனைப் பொருள் அபிவிருத்திக்காய் அனைத்து நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென இச்சபை தீர்மானிக்கின்றது.

பா. 105/ '10

கௌரவ புத்திக பத்திரண,- புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்தல்,- இலங்கை புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் உள்ள அனுமதியற்ற கட்டுமானங்களையும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களையும் துரிதமாக அப்புறப்படுத்தி சட்டரீதியான கட்டுமானங்கள் தொடர்பான உடன்படிக்கைகளை மீளாய்வுக்குட்படுத்துவதன் மூலம் திணைக்களத்திற்கு கிடைக்கும் வருமானங்களை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்பதுடன், திணைக்களத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நேரடி தாக்கத்தை ஏற்படுத்தாத காணிகளை நீண்ட கால குத்தகை அடிப்படையில் தனியார் துறைக்கு வழங்கி, அந்நிதியை புகையிரத வலைப்பின்னலின் நவீனமயமாக்கலுக்கு பயன்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.108/ '10

கௌரவ புத்திக பத்திரண,— பிச்சைக்காரர்களின் வாழ்வைப் பாதுகாப்பதற்கான முறையியலொன்றைத் தயாரித்தல்,— தற்போது பிச்சைக்காரர்களின் வாழ்வுக்கு பாரியளவில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் அவர்களது வாழ்வைப் பேணிக்காக்கும் பொருட்டு, அவர்களுக்கு பயிரிடுவதற்கான காணிகளை வழங்கி அதிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தில் அவர்களது வாழ்வின் பாதுகாப்பினையும் போசனையையும் உறுதிப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.109/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுப்பதற்காக முறையியலொன்றைத் தயாரித்தல்,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுக்கும் நோக்கத்தோடு, அரசாங்கம் நிலப் பரப்பொன்றை ஒதுக்கி கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களை அவ்விடத்திற்குக் கொண்டுசென்று அவற்றைப் பராமரிப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.110/ '10

கௌரவ புத்திக பத்திரண,— சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் கடுமையான தண்டனைகளை விதித்தல்,— நாடு முழுவதிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் நாளுக்கு நாள் சடுதியாக அதிகரித்துவரும் நிலைமை ஏற்பட்டுள்ளதால், அது தொடர்பாக தற்போதுள்ள சட்ட விதிகள் போதியதாக இல்லாதிருப்பின், புதிய சட்ட விதிகளை புதிதாக நிறைவேற்றி மிகவும் துரிதமாக இது தொடர்பான வழக்குகளை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.111/ '10

கௌரவ புத்திக பத்திரன,— சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக கரையோர நுழைவுப் பாதைகளை அமைத்தல்,— நாட்டின் கரையோர வலயத்தில் துரிதமாக இடம்பெறுகின்ற நிர்மாணங்கள் காரணமாக உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் கடற்றொழிலாளர்கள் கடற்கரைக்கு பிரவேசிப்பதில் அசௌகரியம் ஏற்படுதலானது, சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கும் கடற்றொழிலை மேற்கொள்வதற்கும் தடைகளை ஏற்படுத்துவதனால், இந்நிலமையை தடுப்பதற்கும் இத்துறைகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டும் கடற்கரை நுழைவுப் பாதை முறைமையொன்று அமைக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.112/ '10

கௌரவ புத்திக பத்திரன,— கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குதல்,— அதிபர் சேவை, ஆசிரியர் சேவை, கல்வி நிருவாக சேவை ஆகிய சேவைகளில் பாரிய சம்பள முரண்பாடுகள் நிலவுவதால் இந்நிலைமையை போக்கி இவர்களின் சுய கௌரவத்திற்கு உகந்ததொரு சம்பளத்தைக் கிடைக்கச் செய்யும் வகையில், சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்குரிய முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.113/ '10

கௌரவ புத்திக பத்திரண,— பௌத்த பிக்குக் கல்வியை மேம்படுத்துதல்,— பௌத்த பிக்குமார்களின் மத அறிவை மேம்படுத்தும் நோக்கத்தோடு அவர்களின் பேச்சாற்றல், செவிமடுக்கும் ஆற்றல், கனணி, உளவியல் மற்றும் ஆலோசனை பற்றிய அறிவு என்பவற்றை மேம்படுத்துவதற்காக, தற்போதுள்ள பிக்குக் கல்வி நிறுவனங்களுக்குப் புறம்பாக இப்பணிக்ளுக்கே ஒதுக்கப்பட்டதான பிக்குக் கல்வி நிறுவனங்களை உருவாக்குவதற்கான முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.114/'10

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவையை இற்றைப்படுத்துதல்,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவை காலங்கடந்த சட்டங்களைக் கொண்டுள்ளதால் அது தொடர்பாக மீள பரிசீலனை செய்து தற்காலத்திற்குப் பொருத்தமானவாறு சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.115/'10

கௌரவ புத்திக பத்திரன,— உலர் வலய சேனைப் பயிர்செய்கையாளர்களின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— உலர் வலயங்களில் சேனைப் பயிர்செய்கையாளர்களால் பயிரிடப்படுகின்ற நெல், குரக்கன், பயறு, எள்ளு ஆகிய பயிர்களின் விளைச்சலை அதிகரிப்பதற்கும் உற்பத்திப் பொருட்களை பதனிடுவதற்கும் ஏதுவான வகையில் புதிய தொழிட்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் தரச்சிறப்புவாய்ந்த வகையில் உற்பத்திகளை பதனிடுவதற்கும், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நடவடிக்கையை வலுவூட்டுவதற்கும் வரையறுக்கப்பட்ட கூட்டுறவு கம்பனிகள் தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.116/'10

கௌரவ புத்திக பதிரண,— ஆசிரியர் ஆலோசனை சேவையை உருவாக்குதல்,— இலங்கையில் கல்வித் தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தோடு இற்றைக்கு சுமார் இருபது (20) வருடங்களுக்கு முன்னர் தொட்டு ஆரம்பமாகி நடைமுறையிலிருக்கும் ஆசிரியர் ஆலேசானை சேவையை தனியானதொரு சேவை அலகாக தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.117/'10

கௌரவ ருவண் ரணதுங்க,— உப பிரிவாக்கல் தடை செய்யப்பட்டுள்ள அரசாங்க அளிப்பு பத்திர காணிகளின் உப பிரிவாக்கல் அதிகாரத்தை பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைத்தல்,— ஜய பூமி, சுவர்ண பூமி,ரத்ன பூமி ஆகிய அரசாங்கக் காணி அளிப்புப் பத்திரங்களைக் கொண்டுள்ளவர்களின் காணிகளில் உப பிரிவாக்கல் தடை செய்யப்பட்டுள்ளதெனினும், ஆரம்பக் காணி பெற்றவர்களின் இரண்டாம் பரம்பரையின் உரிமையை உறுதி செய்வதற்கும் அவர்களின் வீடு, தோட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் உப பிரிவாக்கலுக்கான தேவை தோன்றும் போது மாகாண ஆணையாளர், காணி ஆணையாளர் மற்றும் ஜனாதிபதி செயலகத்துடனான தற்போது நடைமுறையில் உள்ள நீண்ட செயன்முறையை குறுகியதாக்கி உப பிரிவாக்க அதிகாரத்தை பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைப்பதற்கு தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.118/'10

கௌரவ புத்திக பத்திரண,— கோதுமை மாவிற்குப் பதிலாக அரிசி மாவை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்,— கோதுமை மாவிற்காக வெளிநாடுகளுக்கு வெளிப் பாய்ச்சப்படும் பெருமளவு செலாவணியை நிறுத்தும் நோக்கத்துடன், மாற்றீடாக பயன்படுத்தக்கூடிய அரிசி மாவினால் தயாரிக்கப்படும் உணவை பிரபல்யப்படுத்துவதற்கும், நார்த்தன்மை கொண்ட தானிய வகையான அரிசியை மிகவும் மென்மையானதாக கோதுமை மாவைப் போன்று அரைப்பதற்கும், கோதுமை மா அரைப்பதற்கு பயன்படுத்தப்படுவதைப் போன்ற இயந்திர உபகரணங்களையும் புதிய தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.119/'10

கௌரவ புத்திக பத்திரண,— யுத்தத்தால் அங்கவீனமுற்றவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்,— ஏறக்குறைய 30 வருடகாலமாக நடைபெற்ற யுத்தம் காரணமாக அன்றாடம் நாட்கூலிக்கு வேலை செய்து வாழ்ந்த மக்கள் மற்றும் நிரந்தர தொழில் புரிந்த மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் உடலுறுப்புக்களை இழந்து அங்கவீனர்களாக வாழ்க்கைச் சுமையினால் பெரும் பாதிப்புக்குள்ளாகி நிர்க்கதியான நிலையில் வாழ்வதால், அவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.120/'10

கௌரவ புத்திக பத்திரண,— உயர் பிரமுகர்களின் பாதுகாவலர்கள் அனைவருக்கும் பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குதல்,— ஜனாதிபதி பாதுகாப்புச் சேவை மற்றும் பிரதம அமைச்சர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களைப் போன்று ஏனைய உயர் பிரமுகர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கும் சமமான பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.122/'11

கௌரவ ருவன் ரணதுங்க,— அரசாங்க வங்கிகளின் வட்டி செலுத்துதலுக்கும் வட்டி அறவிடலுக்கும் இடையே காணப்படுகின்ற வித்தியாசத்தைக் குறைத்தல்,— அரசாங்க வங்கிகளில் சாதாரண வைப்புகளுக்கு செலுத்தப்படுகின்ற வட்டி விகிதம் 4 % முதல் 4.5 % வரையிலும் நிலையான வைப்புகளுக்கு செலுத்தப்படுகின்ற வட்டி விகிதம் சுமார் 8 % ஆகவும், வங்கிகளால் வீடமைப்பு, வர்த்தகம் மற்றும் விவசாயக் கடன்களுக்கு அறவிடப்படுகின்ற வட்டி விகிதம் சுமார் 12% முதல் 13% வரையிலும் உள்ளதால், மக்களுக்கும் சிறிய அளவிலான வர்த்தகர்களுக்கும் கைகொடுப்பதற்கும் அவர்களை ஊக்குவிப்பதற்குமாக, இவ்வாறு அறவிடப்படுகின்ற வட்டிக்கும் செலுத்தப்படுகின்ற வட்டிக்கும் இடையிலான வித்தியாசத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.123/'11

கௌரவ ருவன் ரணதுங்க,— பட்டதாரி கிராம உத்தியோகத்தர்களை கௌரவிப்பதற்கான ஒரு கொடுப்பனவைச் செலுத்துதல்,— அரசாங்க சேவையை கிராமிய மட்டத்தில் மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்காக சேவையாற்றுகின்ற கிராம உத்தியோகத்தர்கள் க.பொ.த. (உ/த) பரீட்சையின் பின்னர் போட்டிப் பரீட்சையின் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள போதிலும், தற்போது சேவையாற்றி வருகின்ற கிராம அலுவலர்களில் சுமார் 30 % முதல் 40 % வரையிலானோர் பட்டத் தகைமைகளைப் பெற்றுள்ளனராதலாலும், இதற்கென எவ்வித விசேட கவனமும் இதுவரை செலுத்தப்படாதுள்ளதனாலும், பட்டத் தகைமையை கௌரவிக்கு முகமாக பட்டதாரி கிராம அலுவலர்களுக்கு சம்பள அதிகரிப்பு அல்லது கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.124/'11

கௌரவ ருவன் ரணதுங்க,- கல்விசார் நூல்கள் தவிர்ந்த தினசரி பத்திரிகைகளிலும் வாராந்த சஞ்சிகைகளிலும் புத்தர் பெருமானின் உருவப் படங்கள் பிரசுரிக்கப்படுவதை தடைசெய்தல்,- தினசரி பத்திரிகைகள் மற்றும் வார சஞ்சிகைகளில் புத்தர் பெருமானின் உருவப் படங்களும் சிலைகளின் படங்களும் எதுவித கட்டுப்பாடுமின்றி எல்லையற்ற வகையில் அச்சிடப்படுவதோடு அந்த அட்டைகள் பல்வேறுபட்ட பொருட்ளின் உறைகளாகவும் வேறு பொருத்தமற்ற அலுவல்களுக்காகவும் பயன்படுத்தப்படுவது புத்தர் பெருமானுக்குச் செய்கின்ற அவமரியாதையாகுமென்பதால் 2600 ஆம் புத்தர் ஜெயந்தி கொண்டாட்டத்தையும் கருத்திற்கொண்டு இதன் பின்னர் கல்விசார் நூல்கள் தவிர்ந்த தினசரி பத்திரிகைகளிலும் வாராந்த சஞ்சிகைகளிலும் புத்தர் பெருமானின் உருவப் படங்கள் பிரசுரிக்கப்படுவதை தடைசெய்வதற்குத் தேவையான சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.